
கல்கி
KALKI 9.7.1961
30
காசு




லைப்பாய் இருக்குமிடம்
அதுவே ஆரோக்கியம் இருக்குமிடம்

எல்லாம் இன்ப மயம் -- லைப்பாய் தேய்த்துக்
குளிக்கும் நயம்! ஆஹாஹா ... கிளுகிளுக்கும்
ஆரோக்கிய சுகம்! அன்றாட அழுக்கிலிருந்து நாம்
தப்பமுடியாது: அழுக்கிலுள்ள கிருமிகளைக்
கழுவிக் களைவது லைப்பாய் -- குடும்ப
முழுமைக்கும் குன்றாத ஆரோக்கிய சுகம்!

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

L. 23-X29 TM



2 புதிய


நேஷனல் எக்கோ

ரேடியோக்கள்

உங்களுக்கு இணையிலா இசை இன்பத்தை அளிக்கும்

இதோ இரு நேர்த்தியான புதிய ரேடியோக்கள் ... நேஷனல்-எக்கோவிலும் மிகச் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்ட இந்த ரேடியோக்கள் உங்களுக்கு இனிய இசை விருந்தளிக்கும் ... ஒன்று மின்சார சக்தியால் இயங்குகிறது, மற்றொன்று பாட்டரியினுல் இயங்குகிறது. இவ்விரண்டும் அழகான வினியர் காபினெட்கள் கொண்டவை ... ஹை-பை லௌட் ஸ்பீக்கர்களும், கவர்ச்சியான டயல்களும் கூடியவை ... தொனியை தத்ரூபமாக அளிப்பவை! மேலும் இவைகள் முற்றிலும் மான்ஸூனைஸ் செய்யப்பட்டவை!

இன்றே உங்கள் அருகாமையிலுள்ள நேஷனல்-எக்கோ ரேடியோ டீலரிடம் இவைகளை இலவசமாக இயக்கிக் காண்பிக்கச் சொல்லுங்கள்!



மாடல் U-755:

ஏஸி/டிஸி மின்சார சக்தி கொண்டு இயங்குகிறது. 6-வால்வுகள், 3 பாண்டுகள். டோன் கன்ட்ரோல். விலை எக்ஸைஸ்வரிஉள்பட ரூ. 351.00 மற்றும் வரிகள் தனி.

மாடல் B-755:

பாட்டரியினுல் இயங்குகிறது. 5 வால்வுகள், 3 பாண்டுகள். டோன் கன்ட்ரோல். பாட்டரி மிகக் குறைவாக செலவாகிறது. விலை: எக்ஸைஸ் வரிஉள்பட ரூ. 351.00 மற்றும் வரிகள் தனி.

நேஷனல்-எக்கோ ரேடியோக்கள் சிறந்தவை—

அவைகள் மான்ஸூனைஸ் செய்யப்பட்டவை!

ஜெனரல் ரேடியோ அண்ட் அப்ளையென்ஸஸ் லிமிடெட்

பம்பாய் • கல்கத்தா • மதராஸ் • டில்லி
பாட்னு • பெங்களுர் • ஸெகந்திராபாத்

GRA-2259 (a)

நீங்கள்

ஆஸ்துமா-வியாதியால்

அவஸ்தைப்பட்டால்

இதை அவசியம் படியுங்கள்

இபஸோன் மாத்திரைகள் இந்தியாவிலே திரும்பவும் கிடைக்கின்றன. ஆஸ்துமா, ப்ராங்கைடிஸ், ப்ராங்கைடிஸினால் ஏற்படும் ஜலதோஷம், மார்புச் சளி, ஹே காய்ச்சல், மற்றும் இது சம்பந்தப்பட்ட நோய்களினால் அவஸ்தைப்படுகிறவர்களுக்கு இபஸோன் மிகவும் உதவியளிக்கிறது. இபஸோன் எளிதில் உட்கொள்ளக்கூடியது. பயமின்றி உபயோகிக்கலாம். உடனடியாக சமனமூட்டி, நிச்சய பலனளிக்கிறது.

இபஸோன் தயாரிப்பில் சேர்க்கப்பட்டுள்ள வைத்திய முறையின் அம்சங்களின் இயல்புகள் சுருக்கமாக கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

1. சுவாசக் குழாய்களின் தசைநார்களுக்கு ஏற்படும் வலிப்புக்கு சமனமூட்ட ஒரு சக்தி வாய்ந்த தன்மை இபஸோனுக்கு உண்டு. சுவாசாசயங்களில் மூச்சு எளிதில் செல்லவும், வெளியில் வரவும் இது உதவி செய்கிறது. அது மாத்திரமல்ல; ஆஸ்துமாவினால் ஏற்படும் உக்கிரத்திற்கு ஆசுவாசமளிக்கிறது.
2. சுவாசக் குழாய்களிலும் மற்றும் மார்பு உறுப்புகளிலும் உள்ள கபத்தை இபஸோன் மிருதுவாக்கி, திரவமாக இருமலில் எளிதாக வெளியே தள்ளிவிடுகிறது.
3. சுவாசாசயத்திலுள்ள இரத்தக் குழாய்களில் ஏற்படும் அடைப்பிற்கு இபஸோன் சமனமூட்டுகிறது.
4. இபஸோன் இருதயத்தின் கஷ்டங்களைக் குறைத்து, அதிகம் வேலை செய்யக் கூடிய அளவுக்கு சக்தியை அளிக்க உதவி செய்கிறது.
5. இபஸோன் ஆஸ்துமாவினால் நிச்சயமாக ஏற்படும் உக்கிரத்தைக் குறைத்து, ஏக்கத்தை நிவர்த்தி செய்து, மிருதுவாக நரம்புகளுக்கு சமனமளிக்கிறது. அது மட்டுமல்ல; ப்ராங்கைடிஸினால் ஏற்படும் அகோரமான இருமலைக்கூட சரிசெய்து விடுகிறது.

ஆஸ்துமா வெகு சீக்கிரம் உங்களைப் பீடிக்கிறது. ஆஸ்துமாவினால் நீங்கள் பீடிக்கப்படுவீர்கள் என சிறிய சந்தேகம் வந்தவுடன் ஒரு இபஸோன் மாத்திரையை உட்கொண்டு, அதிசீக்கிரத்திலே நிச்சயமாக நிவாரணமடையுங்கள்.

இபஸோனின் அரிய தன்மைகள், ஆஸ்துமாவினால் அவஸ்தைப்பட்டு இதை உபயோகித்து குணமடைந்தவர்களாலும், அதை சிபார்சு செய்யும் டாக்டர்களாலும் நிரூபிக்கப்பட்டுள்ளன.

வழக்கத்தை ஊட்டிவிடும் மருந்துகள் எதுவும் இபஸோனில் சேர்க்கப்படவில்லை.

இபஸோன் 15, 45, 100 மாத்திரைகள் கொண்ட வசதியான பாக்கட்டுகளில் எல்லா மருந்து கடைகளிலும் கிடைக்கின்றன.



EPHAZONE

இபஸோன் தயாரித்து, விநியோகிப்பவர்கள்:-

ஜே எல். மோரிஸன். சன் அன்டு ஜோன்ஸ் (இந்தியா) லிமிடெட்.

பம்பாய் – கல்கத்தா – மதறாஸ் – டில்லி.

கல்கி பொருளடக்கம்

பிலவ, ஆனி 25 ❊ ஜூலை 9. 1961

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

புகையிலையின் வரலாறு... 3.



புகையிலையைப்பற்றிய அறிவும் உபயோகமும் அமெரிக்காவிலிருந்து ஐரோப்பாவிலும், இங்கிலாந்திலும், பிற நாடுகளிலும் பரவியது. உருளைக் கிழங்கு, தக்காளி இனத்தைச் சேர்ந்த அதனை 1508-ல் போர்ச்சுக்கேசியர் நம் நாட்டிற்குக் கொணர்ந்தனர். அதுமுதல் புகையிலை இந்திய மண் மீது தழைத்து வந்துள்ளது. இந்தியாவில் இன்று புகையிலை உற்பத்திக்குப் பிரதானமான மாகாணங்கள்: பம்பாய், பீகார், ஆந்திரம், வங்காளம், சென்னை, மைசூர் ஆகியவையே.



GOLDEN TOBACCO COMPANY PRIVATE LTD

பம்பாய்—57.

பனமா

ஒரு நல்ல சிகரெட்—
இறுதிவரை இன்பமூட்டுவது

பாரதத்தில் இத்தகைய
தேசிய ஸ்தாபனங்களில்
மிகப் பெரியது.

GT.703 TM. Greens' Advtg.



மலர் 20

தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

இதழ் 50

பர்மாவாழ் தமிழர்

ஜூன் 21-ம் தேதி முதல், பர்மாவில் வாழும் இந்திய வம்சாவளியினர் இந்தியாவுக்கு மணியார்டர் செய்யக் கூடாது என்று ஒரு பலத்த தடையுத்தரவு போட்டு விட்டது பர்மா அரசாங்கம்.

இதனால் பெரிதும் பாதிக்கப்படுவோர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள்தான் என்று கேள்வியுறும்போது நெஞ்சம் துடிக்காத தமிழர் இல்லை.

பர்மாவுக்கும் தமிழகத்துக்கும் பல நூறு ஆண்டுகளாகத் தொடர்பு உண்டு. சென்ற மகா யுத்தத்தின்போது அத்தொடர்பில் ஒரு பெரும் பகுதி அறுந்தது. பர்மாவில் குடியேறிச் சொத்துக்கள் பெற்று வியாபாரம் செய்தவர்கள் யாவரும் தங்கள் சொத்துக்களையெல்லாம் அப்படி அப்படியே விட்டு விட்டு வந்தனர். பர்மா சுதந்திரம் அடைந்த பிறகு இந்தியர்களை வெளியேற்றும் திட்டம் கடுமையாக்கப்பட்டதால், இன்னும் பலர் வெளியேறினர். இருப்பினும் தாயகத்துக்குத் திரும்ப முடியாத நிலையில் பலர் இன்றும் இருந்து வருகிறார்கள். இவர்கள், தங்கள் தாய்நாட்டிலுள்ள பெற்றோர்களுக்கும், தங்களைச் சார்ந்து வாழும் உற்றார் உறவினர்களுக்கும் மாதந்தோறும் ரூ. 40 விதம் அனுப்பலாம் என்று பர்மிய சர்க்கார் கூறினர். பின்பு அதையும் சிறுகச் சிறுகக் குறைத்து ரூபாய் இருபதுதான் அனுமதிக்கப்பட்டு வந்தது. இப்போது இந்த இருபது ரூபாயும் அனுப்பக் கூடாது என்று உத்தரவிட்டால், தமிழ் நாட்டில் பல குடும்பங்கள் நடுத் தெருவில் நிற்க நேரிடும்.

இந்தியாவில் வாழும் பர்மியர், தங்கள் தாய்நாட்டுக்குப் பணம் அனுப்புவதை 1957-ம் ஆண்டே இந்தியா தடை செய்துள்ளது. இதைச் சிறிதும் பொருட்படுத்தாமல் பர்மிய சர்க்கார் மிகுந்த பெருந்தன்மையோடு, பர்மாவில் வாழும் இந்தியர்கள் இந்தியாவுக்குப் பணம் அனுப்ப அனுமதித்து வந்திருக்கின்றனர்.

பர்மாவிலிருந்து இந்தியாவுக்கு அனுப்பப்படும் தபால் கட்டணத்தில் $\frac{1}{2}$ சதவிகிதம் இந்திய சர்க்காருக்குப் பர்மிய சர்க்கார் அளித்து வந்தது. இதே சம்பிரதாயத்தைத் தான் பாகிஸ்தான், ஹாங்காங், சீனா முதலிய நாடுகள் கடைப்பிடித்து வருகின்றன. ஆனால் சமீபத்தில் இந்திய சர்க்கார், $1\frac{1}{2}$ சதவிகிதம் வழங்க வேண்டும் என்று வற்புறுத்தியது. அதன் விளைவாகத்தான் பர்மிய சர்க்கார் இந்தியாவுக்கு மணியார்டரே செய்யக் கூடாது என்று தடையுத்தரவு பிறப்பித்து விட்டதாகத் தோன்றுகிறது.

இதனைப் பார்க்கும்போது, பிரதமரின் வெளி விவகார இலாக்காவில் தமிழகத்திலுள்ள தமிழர்களுக்குத் தீங்கு விளைவிக்கும் நோக்குடனேயே அல்லது தமிழர்களின் சுகசௌக்கியத்தைப் பற்றிக் கருத்து செலுத்தாமலேயே சிலர் வேலை செய்கிறார்களோ என்ற ஐயம் தமிழகத்திலுள்ள தமிழர்களுக்கு உண்டாகிறது. இந்த ஐயத்தைப் போக்க வேண்டியது பிரதமரின் கடமை.

இலங்கையின் நியாயமான பிரஜைகளான வடக்கு கிழக்கு மாகாணத் தமிழர்கள் சிங்கள சர்க்காரின் ஆட்சிமொழித் திட்டத்தின் காரணமாகப் படும் கஷ்டத்தைப் பார்த்து, இந்திய சர்க்கார் ஒன்றும் செய்யாமலிருப்பது தமிழகத் தமிழர்களுக்குப் பெருத்த ஏமாற்றமாக உள்ளது. இந்த நிலையில் பர்மிய சர்க்காரின் இந்தத் தடை உத்தரவு வேறு இடியாக வந்திருக்கிறது. இந்திய சர்க்காருக்கும் பர்மிய சர்க்காருக்கும் மிக

சௌஜன்யமான உறவு உண்டு என்று பெயர். பர்மியப் பிரதமர் யூநூவும் பாரதப் பிரதமர் நேருவும் மிக நெருங்கிய நண்பர்கள். பர்மாவுடன் நல்ல நேசப்பான்மை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காக, பர்மா சர்க்கார் கொடுக்க வேண்டிய பல கடன் தொகைகளை விட்டுக் கொடுத்திருக்கிறார் பாரதப் பிரதமர். சமீபத்தில் பல உதவிகள் செய்திருக்கிறார். நேருஜி இவ் விஷயத்தில் தலையிட்டு நிலைமையைச் சீர்திருத்த வேண்டும்.

மேற்கண்ட தலையங்கம் எழுதி முடித்தபின் நேருஜி அவர்கள் பத்திரிகை நிருபர்களிடம் இவ்விஷயம் சம்பந்தமாகக் கூறியது வெளியாகி யிருக்கிறது.

''பத்திரிகைகளிலும் மற்ற இடங்களிலும் இந்திய சர்க்கார் எடுத்த சில நடவடிக்கைகளின் விளைவாகவே பர்மிய அரசாங்கம் இவ்வாறு செய்தது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதைக் கேட்டு நான் ஆச்சரியத்தில் ஆழ்ந்து விட்டேன்.

''இப்படியொரு நடவடிக்கையும் இந்திய சர்க்கார் எடுக்கவில்லை என்று அலுவலகத்தில் எனக்குச் சொல்லுகிறார்கள். நிதிமந்திரி இலாக்காவைச் சேர்ந்தவர்களும் மற்றவர்களும் தாங்களும் ஒன்றும் செய்யவில்லை என்று சொல்லுகிறார்கள்.''

[இந்தியாவிலிருந்து பர்மாவுக்குப் பணம் அனுப்புவது சம்பந்தமாக இந்திய சர்க்கார் சில நடவடிக்கைகள் எடுத்ததின் விளைவாகவே, பர்மிய சர்க்கார் தாங்கள் இந்தத் தடை உத்தரவு போட நேர்ந்தது என்று அறிவித்துள்ளனர்.

விஷயத்தைத் தெளிவாகவும் பூரணமாகவும் விசாரித்து மக்களுக்குத் தெரிவிப்பது அவசியம்.

— ஆசிரியர்]

கல்லூரிப் படிப்பு

இந்த ஆண்டு கல்லூரிகளில் இட நெருக்கடி சொல்லிச் சாத்தியமில்லை. சென்ற வாரம் பத்திரிகைகளில் அதிக மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும்படி சென்னை சர்வகலாசாலை அனுமதி அளித்திருப்பதாகச் செய்திகள் வந்தன. இச் செய்திகளைப் படித்துவிட்டு, நம்பிக்கையுடன் கல்லூரிக் கதவுகளைத் தட்டியவர்களுக்கு ஏமாற்றமே காத்திருந்தது. சென்னை சர்வகலாசாலை இப்படியொரு சலுகை அளிக்கும் என்று முன்கூட்டியே எதிர்பார்த்து மாணவர்களை முன்னாலேயே சேர்த்துக் கொண்டு விட்டதாகக் கல்லூரி முதல்வர்கள் அறிவித்துவிட்டார்கள். ஆகவே பத்திரிகைச் செய்தி வெறும் கேலிக்கூத்தாகவே முடிந்தது.

என்ஜினியரிங் கல்லூரி, வைத்தியக் கல்லூரி போன்ற தொழிற் கல்லூரிகளுக்கு மனுப் போடும் மாணவர்களும், விஞ்ஞானம், சரித்திரம், பொருளாதாரம் முதலியன போதிக்கும் கல்லூரிகளுக்கு மனுப் போட்டுச் சம்பளம் கட்டி இடம் பிடித்து வைக்கின்றனர். தொழிற் கல்லூரிகளில் இடம் கிடைத்துவிட்டால் மற்றக் கல்லூரியில் சம்பளம் கட்டி இடம் பிடித்ததை விட்டு விட்டுப் போகின்றனர். இப்படிக் கலைக் கல்லூரிகளுக்கு ஓர் அனுமத்து வருமானமும், பல நூறு பெற்றோர்களுக்கு அனாவசியச் செலவும் ஏற்படுகின்றன. இதற்குக் காரணம் தொழிற் கல்லூரிக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் படலம் ஜூலை நடுவரையில் நீடிப்பதுதான். மற்றக் கல்லூரிகள் திறந்து, மாணவர் சேர்க்கும் படலத்தை ஜூன் மாதத்திலேயே முடித்துவிடுகிறார்கள். ஆகவே, தொழிற் கல்லூரியில் மாணவர்களைச் சேர்க்கும் படலத்தைச் சர்க்காரும் ஏறத்தாழ மற்றக் கல்லூரிகள் திறக்கும் சமயத்திலேயே முடித்துவிட்டால் பெற்றோர்கள் அனாவசியமாக நஷ்டமடைய மாட்டார்கள்.

மொத்தத்தில் இன்றையப் படிப்பு ஒரு வியாபாரமாகவும், கொள்ளையடிப்பதற்கு ஒரு மார்க்கமாகவும் அமைந்து வருகிறது. இதற்குரிய சாத்தியக்கூறுகளை அடைத்து மக்களுக்குப் பொருள் நஷ்டம் ஏற்படாமல் செய்ய வேண்டியது சர்க்காரின் கடமையாகும். கல்வி சம்பந்தமாகக் கூற வேண்டியது எவ்வளவோ இருப்பினும் இந்தச் சிறிய சௌகரியம் செய்து கொடுத்தாலே பெற்றோர்கள் எவ்வளவோ திருப்தி அடைவார்கள்.

சுதந்திர நிதி

(24-6-61 லிருந்து 1-7-61 வரை)

ஓர் அன்பர்	1	00
எஸ். ஆனந்தம்	1	00
எம். சுப்பிரமணியம்	10	00
பம்பாய் சுப்பிரமணியம் மூலம்	25	00
வி. கல்யாணம்	100	00
டாக்டர் ஸ்ரீஹரி	500	00
10-1-61 முதல் 23-6-61 முடிய	5382	45
ரூ.	6019	45


அகிலன்
எழுதும்
புதுவெள்ளம்
ஆகஸ்ட் 6
கல்கி
இதழில் ஆரம்பமாகிறது

என்ன சேதி?

ம. பொ. சி.யின் பொன் மனம்

திரு ம. பொ. சி.யின் 56-வது பிறந்த நாள் விழாவை 56 சவரன்கள் வழங்கி அன்பர்கள் கோலாகலமாகக் கொண்டாடினார்கள். அந்த 56 பொற்காசுகளைப் பெற்றுக்கொண்ட திரு ம. பொ. சி. அதனைத் தமது சொந்தச் செலவுக்கு எடுத்துக் கொள்ள உத்தேசிக்கவில்லை என்றும் அதனை ஒரு பொதுநலப் பணிக்கு அளிக்கவே கருதி யிருப்பதாகவும் எதிர்பார்த்தவாறே அன்றைய கூட்டத்தில் அறிவித்தார்.

ஓமந்தூராரின் எச்சரிக்கை

ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், கூட்டுறவுப் பண்ணை முறை ஜனநாயகத்துக்கு ஒத்து வராது என்றும், பலாத்கார முறைகளை அனுஷ்டிக்கும் நாடுகளில் தான் அதை வெற்றிகரமாகக் கடைப் பிடிக்க முடியும் என்றும் எச்சரிக்கை செய்திருக்கிறார். இவர் இப்படிச் சொல்லி வாய் மூடுவதற்குள் மந்திரி வேங்கடராமன், கூட்டுறவுப் பண்ணைகளில் சேர விரும்பாதவர்களின் நிலங்கள் பலாத்காரமாக ஆர்ஜிதம் செய்யப்படும் என்று கோவையில் கூறி யிருக்கிறார். ஆகவே, ஓமந்தூரார் இப்போது ஜனநாயகம் நடப்பதாக எண்ணிக் கொண்டிருந்தால், அதைப்போன்ற பேதைமை கிடையாது என்று இடித்துக் காட்டுவதுபோல் அமைந்து விட்டது மந்திரி வேங்கடராமனின் கோவைப் பேச்சு. இனியும் ஜனநாயகம் எப்படியோ பிழைத்துக் கொள்ளும் என்று நினைத்துக் கொண்டு சும்மா இருப்பதில் பயனில்லை.

ஜனநாயக சக்திகளுக்கு ஓமந்தூராரைப் போன்றவர்கள் ஊக்கமும் ஊட்டமும் தரவேண்டும்.

திரைப்படத்தில் பிரசாரம்

'தேன் எடுக்கிறவன் புறங்கையை நக்காமல் இருப்பானா?' என்று ஒரு பழமொழியுண்டு. அதைப்போல், காங்கிரஸ் ஆட்சியாளரிடம் ஒரு ஸ்தாபனம் கிடைத்தால் அதைத் தங்கள் கட்சி நலனுக்குப் பயன்படுத்திக் கொள்ளாமல் இருப்பார்களா?

இதோ ஓர் அன்பர் எழுதியுள்ள கடிதத்தைப் பாருங்கள் :

"சென்ற இரண்டு மாதங்களாகவே சர்க்காரின் செய்தித்துறை இலாக்கா திரைப்படப் பிரிவினர் காங்கிரஸ் பிரசாரப் படமாகவே தயாரித்துத் திரையிட்டு வருவது தங்களுக்குத் தெரிந்திருக்கும் என நினைக்கிறேன்.

'கிராம நலம்' 'புதிய ஒளி' போன்ற செய்திப் படங்கள் பகிரங்கமான காங்கிரஸ் பிரசாரப் படங்களாகும்."

இவ்வாறு உறுதியாகக் கூறுகிறார் இந்தக் கடிதம் எழுதிய அன்பர்.

சர்க்கார் செய்தித்துறை எல்லாக் கட்சி மக்களுக்கும் உரியதாகும். ஒரு கட்சிக் காரியங்களைமட்டும் அதிகப்படுத்திக் காட்டினால் மிகத் தவறாகும். "காசு செலவில்லாமல், வரிப் பணத்திலேயே காங்கிரஸ் பிரசாரம் செய்யச் செய்தித் துறை திரைப்படப் பிரிவு பயன்பட்டு வருகிறது" என்று அந்த நண்பர் மேலும் குற்றம் சாட்டுகிறார்.

தேர்தல் வர இன்னும் எட்டு மாதங்கள் இருக்கின்றன. இப்போது பிடித்தே திரைப்பட இலவசத் தேர்தல் பிரசாரத்தைக் காங்கிரஸ் தொடங்கி விட்டது!


பெண் கல்விக்கொரு பெரும் பணி

சென்னைப் பிரமுகர் ஸ்ரீ மாடபூசி சுதர்சனம் அய்யங்கார் பெண் கல்விக்காக ஒரு பொன்னான காரியத்தைச் செய்திருக்கிறார்.



அரிய முறையில் கல்விப் பணி ஆற்றி வரும் தேசியக் கல்வி சங்கத்துக்கு அவர் ரூ.52,000 நன்கொடை அளித்திருக்கிறார். சேரிடம் அறிந்து சேர்த்த இந்தத் தொகை ஸ்ரீ என்.கே. திருமலாச்சாரியார் அவர்களின் திறமையினால் ரூ. 75,000 ஆகப் பெருகி இன்று திருவல்லிக்கேணி தேசிய உயர்தரப் பெண் பாடசாலையில் கவின்மிகு ஒரு மண்டபமாக உயர்ந்து நிற்கிறது. ஜூன் 23-ந் தேதி மாலை முதன் மந்திரி திரு கே. காமராஜ் அவர்கள் இந்த மண்டபத்தைத் திறந்து வைத்தார். தொழில் மந்திரி திரு ஆர். வேங்கடராமன் அவர்கள் சுதர்சனம் அய்யங்காரின் உருவப் படத்தைத் திறந்துவைத்தார். அய்யங்காரது வள்ளன்மைக்கு நாமும் நமது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அடிக்கடி ஏற்படும் ஜலதோஷமும் இருமலும் வீர்யத்தை குறைக்கிறது...சுவாசப் பைகளில் பரவும் தொத்து நோய்களைத் தடுக்கும் சக்தியை குறைக்கிறது



இருமலும் ஜலதோஷமும் சாதாரணமாகவே உபாதையளிக்கக்கூடியது மட்டும் அல்ல; திரும்பத் திரும்ப வரும் நோய்த் தாக்குதல்கள் அதிக அபாயகரமான நோய்களுக்கு அடிகோலுகிறது. ஆகையால் ஜாக்கிரதையாக இருங்கள். உடனடியாக வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் உட்கொள்ள ஆரம்பியுங்கள்.


வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

★ இருமலையும் சுவாசப் பைகளில் ஏற்படும் நெரிசலையும் தவிர்க்கிறது.

★ இருமல் மற்றும் ஜலதோஷத்தை எதிர்க்கும் சக்தியை உண்டு பண்ணுகிறது.

★ ஜீரணத்திற்கு உதவுகிறது.

★ சரீரத்தின் எல்லா அவயவங்களுக்கும் புத்துணர்ச்சியளிக்கிறது.




க்ரியோஸோட், க்வயகால் இவைகளால் வீர்யம் அதிகப்படுத்தப்பட்ட வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் சுவாசப் பைகளில் ஏற்படும் நெரிசலையும், கடினமான இருமலையும் ஜலதோஷத்தையும் கரைக்கிறது. அது தேக நிலையை பரிபூர்ணமாக சீராக்கி நோய்களை எதிர்க்கும் சக்தியை வளர்த்து நீங்கள் வருடம் பூராவும் திடகாத்திரமாக இருக்க உதவுகிறது. அது குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் ஒருங்கே ஏற்ற பலனளிக்கிறது. பில்பர் ப்ரூப் மூடியை கவனிக்கவும்.

உட்கொள்ளுங்கள் இன்பமான ருசியுள்ள

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்


(சிகப்பு லேபில்)

நீங்கள் திடகாத்திரமாக இருக்க



குங்குமப்பூ கலர் லேபிலுடைய வாட்டர்பரீஸ் விடமின் காம்பவுண்டும் கிடைக்கிறது. ஒரு பொதுவான டானிக்கென சிபார்சு செய்யப்படுகிறது.

வார்னர்-ஹாம்பர்ட் பார்மஸியூடிகல் கம்பெனி
(யு.எஸ்.ஏ.வில் வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.)



சுபிட்ச இந்தியாவை
உருவாக்கும்
பணியில்!
1966ம் வருஷத்திற்குள்
6,48,00,000
சிறுவர் சிறுமியர் பள்ளிசென்று கல்வி கற்பர்!
இதற்காக 3வது ஐந்தாண்டுத்திட்டத்தில்
• 5,00,000 ஆரம்பப்பள்ளிகள்
• 45,000 நடுத்தரப்பள்ளிகள்
• 18,000 உயர்நிலைப் பள்ளிகள்
ஏற்படுத்த வகை செய்யப்பட்டிருக்கிறது
எமது குறிக்கோள்
1966ம் வருஷத்திற்குள்
10,00,000
ஸீ-ஷோர் பவுண்டன் பேனாக்கள்
• மை கசியாது • அல்லாய் முனைப்புள்ள நிப்புடன
தங்கு தடையில்லாமல் மிருதுவாக எழுத
ஸீ-ஷோர் பவுண்டன் பேனாக்கள்
தயாரிப்பவர்கள்: ஸீ ஷோர் டிரேடர்ஸ்,
20, காசிச்செட்டி தெரு, சென்னை-1.
EP

நாவல் பிறக்கிறது..

கதைகள் பிறப்பதும் உருவாவதும் மனிதன் பிறப்பதற்கும் வளருவதற்கும் சமமாகும். மனிதக் குழந்தைகள் எவ்வாறு சில பிறக்கும்போது பலவீனமாக இருப்பினும் செழித்துத் திடமான வாலிபப் பருவம் அடைகின்றனவோ, எவ்வாறு சில மட்டும் நல்ல முதுமை எய்தி, தம் பழுத்த அநுபவத்தினால் எக்காலத்திலும் எல்லோராலும் போற்றப்படுகின்றனவோ — அவ்வாறே இவை அனைத்தும் எம்மொழியின் குழந்தைகளாகிய இலக்கியத்துக்கும் பொருந்தும்.

எங்கோ, எப்பொழுதோ கேட்ட ஒரு சொல், கண்ட ஒரு சாயல், ஓர் எண்ணத்தின் வலிமை — இது போன்ற ஒன்றிலிருந்து கதை பிறக்கிறது.

அநுத்தமா

நன்கு சுவைத்து அசை போடக் கூடிய அனுபவத்தினின்று பிறக்கும் கதைகளும், எதிர்பாராத சமயத்தில் எங்கோ ஒரு பொறி தெறிக்க, அதனின்று எழுந்த ஒளிப் பிழம்பாக நேரும் கதைகளும் உண்டு.

முன்பு கூறியவை ஆசிரியரின் அனுபவத்திலிருந்து எழுந்த வித்து. மற்றது ஒரு வித்தினின்று எழும்பிய அனுபவம்.

இரண்டுக்குமே ஒரே வித அபாயம் உண்டு. வெகு நாட்கள் தவமிருந்து, ஏங்கி, போஷித்து எதிர்பார்த்த ஒரு குழந்தை தன் பெற்றோரின் ஆசையையும், பெருமையையும் தாங்க முடியாத நோஞ்சானாகப் பிறப்பது உண்டு. விருப்பமே அற்று, எண்ணமே இல்லாது, எதிர்பாராது பிறந்து விட்ட குழந்தை, திடகாத்திரமாக, பொலிவு பெருமை தேடும் அளவு பொருந்தியதாக இருப்பதும் உண்டு.

அது போலத்தான் இதுவும்.

ஒரு கதாசிரியனின் மனத்தில் தன் கதையில் எது பரிபூரணமான அனுபவமாகத் திகழ்கிறதோ, அதை விவரிப்பது எளிதல்ல. அனுபவம் ஏற்படும்போது தானே அதை எழுத்தில் வடிக்கத் தோன்றுகிறது?

ஆகவே ஒவ்வொன்றுமே ஒவ்வொரு விதத்தில் முழுமை பெற்ற அனுபவமே. சில, கதைகளாகப் பூரணத்துவம் அடைந்தாலும் அவை பிறந்த விதத்தில் விவரிக்க ஒன்றும் இராது.

ஆலமரம் பெரிது. பெரும் பயன் அளிக்கக் கூடியது. ஆயின் அதன் வித்தோ? அதேபோல்தான்.

எனது அநேக நாவல்களில், சுவைபட இருக்கும் என்று "ஜயந்திபுரத் திருவிழா"வின் பிறப்பைக் குறிப்பிடலாம்.

நான் ஓர் ஊருக்குப் புதிதாகச் சென்றிருந்தேன். அந்த ஊரில் உள்ள ஒரு குடும்பத்தை அறிமுகப்படுத்திக் கொள்ளும் பொருட்டு அவர்கள் வீடு தேடிச் சென்றேன். மாலை மணி சுமார் ஆறு அல்லது ஆறரை இருக்கும். முன்னும் இருட்டவில்லை. அவர்கள் காம்பவுண்டுக்குள் நுழைந்ததும் நான் கண்ட வண்ணக் காட்சி இன்னும் என் மனக் கண் முன்னால் பசுமையாக இருக்கிறது. மலர்களின் நிறங்களை ஆய்ந்து வளர்த்த அந்தத் தோட்டத்தில் ஓர் ஊஞ்சல் ஒரு பக்கம் இருந்தது. மனதில் அமைதியும் சிருங்காரமும் தோன்றக் கூடிய காட்சி அது.

ஊஞ்சலில் அழகான இளம் பெண் ஒருத்தி ஆடியபடி அமர்ந்திருந்தாள். அவள் இன்னிசை பயிலுவதாக என் கற்பனை தீட்டியது.

வீட்டின் முன் நின்றேன். வாசற் கதவு உட்புறம் தாளிடப் பட்டிருந்தது. வெளியில் விளக்கில்லை. தட்டுவதா வேண்டாமா என்று நான் தயங்கினேன். பிறகு மெல்லத் தட்டினேன். இளம் பெண் ஒருத்தி கதவைத் திறந்து விட்டாள். உள்ளே இருள் கவிந்திருந்தது. எங்கோ ரேடியோ கீதம் கேட்டுக் கொண்டிருந்தது.



"நீங்கள் யார்?" என்று பாதி திறந்த கதவைப் பிடித்தபடியே வினவினள் வந்தவள்.

அவள் வீட்டுப்பெண்ணாக.



நாவல் பிறக்கிறது

அடுத்த இதழில்

க.நா.சுப்பிரமண்யம்

தமது அநுபவங்களை எழுதுகிறார்!

இருக்கவேண்டும் என்று ஊகித்த வண்ணம் நான் பதிலளித்தேன். " அம்மா இருக்கிறார்களா ?" என்று பீடிகையாகக் கேட்டேன்.

"நீங்கள் யார்?" என்று மீண்டும்கேள்வியேவந்தது.

என் மனத்தினுள் ஓர் ஏமாற்றம் அவ் வீட்டு இருள்போல் கவிந்தது. அதைச் சமாளித்துக் கொண்டு பேசினேன். "நான் இந்த ஊருக்குப் புதிது. உங்களைத் தெரிந்து கொள்ள வந்தேன். அம்மாவைக் கூப்பிடம்மா" என்றேன் நிதானமாக.

பெண் கதவை ஒருக்களித்து விட்டு உள்ளே ஓடினாள். நான் தோட்டத்தின் நிறைவையும் வீட்டின் குறைவையும் ஆராய்ந்தபடி அங்கும் இங்கும் பார்வையை நாட்டவிட்டேன்.

வீட்டின்முன் கோலம் இருக்கவில்லை. என் இதயம் துணுக்குற்றது. நாகரிகமாக இருப்பவர்கள் வீட்டு வாசலில் கோலமிடுவதைப் பற்றிக் கவலைப்படுவதில்லை என்று நிலைபடுத்திக்கொண்டு சமாதானம் அடைந்தேன்.

அந்தப் பெண் மீண்டும் வந்தாள். உள்ளே வந்து அமரும்படி கூறினாள். நான் சென்று பெரிய ஹாலில் ஒரு கவின் ஓரமாகப் போடப்பட்டிருந்த சோபாவில் அமர்ந்தேன். பெண் உள்ளே ஓடினாள். "அம்மா! அம்மா!" என்று அவள் குரல் கேட்டது.

இருட்டாக இருந்த அந்த அறை சற்றுக் கண்ணுக்குப் பழக்கம் ஆனதும் தான் என் சுற்றுப்புறம் எனக்கு விளங்கியது. ரேடியோவின் ஒற்றை விளக்கு ராட்சதன் கண்போல் காட்சி யளித்தது. அதன் அருகில் ஒரு பெண் அமர்ந்திருப்பது இப்பொழுது தெரிந்தது. நான் உற்றுக் கவனித்தேன். நல்ல தெளிவான முகம்தான். ஆயின், நெற்றியில் குங்குமம் இல்லை. தலை வாரப்படாமல், அள்ளி முடியப்பட்டிருந்தது. மேலும், ஓர் அன்னிய மனுஷி வீட்டினுள் வந்திருப்பதையோ, தனக்குப் பக்கத் தொலைவில் அவள் இருப்பதையோ கவனிக்காமல் அவள் எங்கோ வெறித்து நோக்கினாள்

வீட்டின் எஜமானி வருமவரை காத்திருக்க என்னை அங்கேயே இருக்கவிடாது. அந்தப் பெண்ணைக் கண்டதும் என் இதயம் பாகாக உருகியது. துடியாகத் துடித்தது. விஷயம் எனக்குப் பளிச்சிட்டது. கோலம் இல்லாதது. விளக்கு இல்லாதது. தெருக் கதவு சாத்தப்பட்டிருப்பது. கதவைத் திறந்த பெண்ணின் கேள்வி. ரேடியோ அருகில் இருக்கும் பெண்ணின் கோலம்-யாவும் விளங்கின. என் நெஞ்சு புண்ணாகியது. 'இவர்கள் வீட்டில் அண்மையில் ஏதோ துயரம் நேர்ந்து விட்டிருக்கிறது. அதுவும் இந்தப் பெண்ணுக்கு...இந்த நிலையில் எந்த வீடுதான் எழிலுடன்மிளிர்ந்துக் கொழிக்கும் !' என்று என் மனம் இடித்துக் காட்டி விளங்க வைத்தது.

வீட்டு அம்மாள் வரவில்லை. அறையில் இருள் அதிகரித்தது. அப்பொழுது மின் விளக்குப் பொருத்தப்பட்டது. வீட்டுக் குரியவள் வந்து என்னை அறிந்துகொண்டு உபசரித்தாள். அன்பு நிறைந்த அம்மணி அந்த அம்மாள்.

என் பச்சாத்தாபம் அதிகரித்தது. அவர்கள் துக்கத்தைப் பற்றி விசாரிக்க எண்ணி, எடுத்த எடுப்பில் எவ்வாறு கேட்பது என்று அஞ்சினவளாக, பொதுவாக அவர்கள் வீட்டில் யார் யார் உள்ளார்கள் என்கிற கேள்வியுடன் நான் பேச்சைத் தொடங்கினேன்.

அந்த அம்மாளுக்கு ஆண்டவன் நான்கைந்து குழந்தைகளை அளித்திருந்தாராம். ரேடியோ கேட்கும் பெண் மூத்தவளாம். அவள் மெத்தப் படித்தவளாம். அவள் கணவனுக்குப் பெரிய உத்தியோகமாம். மற்றக் குழந்தைகளைப் பற்றி அந்த அம்மாள் சொன்னது ஒன்றும் என் செவியில் விழவில்லை. நான் அந்தப் பெண்ணைப் பார்த்தேன். தனக்கு வெகு அருகில் நாங்கள் பேசுவது கூடத் தெரியாமல், சூனிய நோக்குடன் இருந்த அவளைக் காண மிகவும் பரிதாபமாக இருந்தது. நான் நினைத்தபடி துயர் என்பது மரண வடிவில் வரவில்லை. அந்தப் பெண் தன் புத்தி பேதலித்து விட்டிருக்கிறாள், இந்நிலையில் அவ்வீடு களை இழந்திருப்பது நியாயமே என்று நான் நினைத்தேன்.

அப்பொழுது தங்க விக்கிரகம் போன்ற ஓர் ஆண் குழந்தை, பட்டுச் சட்டையும் பாவை வாரமாகப் பால முருகனைப் போல் ஓடி வந்து, அவள் மடியில் ஏறி ஏதோ பேசியது. அந்தப் பெண் என்ன செய்வாளோ என்று பயந்த என்னைத் தான் அவள் ஏமாற்றிவிட்டாள். குழந்தையை வாரி எடுத்துக் கொண்டு நாங்கள் இருந்த இடம் வந்தாள். என்னை அறிமுகப்படுத்தினாள் அவள் தாயார். அதன் பிறகு அவள் சரளமாகப்

பேசினும். எனக்கு விருந்து உபசாரம் பலமாக நடந்தது.

ஆனால்...என் நெஞ்சத்தில் அசைக்க முடியாத ஒரு பளு. ஒரு கைப்பு, ஒரு வேதனை......

நான் சற்றைக் கெல்லாம் விடை பெற்றுக் கொண்டு கிளம்பி விட்டேன். என் மூளையில் பிரச்னை வண்டு ஒன்று குடைந்தது. ஒரு சமூகம் வளர்ந்து விளங்கச் சம்பிரதாயம் தேவைதானா என்பதுதான் அது. நாகரிகம் வளர, வளரச் சம்பிரதாயத்தை ஒரு தூசாக நோக்குவது இயல்புதானா? அன்று இரவெல்லாம் எனக்கு உறக்கம் வரவில்லை.


கோலமின்றி, வெளிச்சமின்றிக் கதவடைத்த இல்லமும், பாழ் நெற்றியும், கலைந்த கேசமும் என்னை மிகவும் வாட்டி விட்டன. ஒவ்வொன்றும் நம் சமூகத்தில் ஊறிவிட்ட சம்பிரதாயத்தின் சின்னம். சம்பிரதாயத்தில் ஊறிவிட்டு நான்தான் குருடாகி விட்டேனா என்று நான் ஒரு கணம் குழம்பினேன்.

வாசலில் நீர் தெளித்துக் கோலம் போடுவது, மாலை வேளையில் வாசற் கதவைத் திறந்து, கொல்லைக் கதவை அடைத்து, கூடத்தில் விளக்குப் பொருத்துவது இவை லக்ஷ்மீகரம் என்று முன்னோர்கள் சொன்னார்கள். நம்மில் சிலர் அவ்வாறு செய்கிறோம்.

லக்ஷ்மி அந்த வழிதான் வருவாளா? அந்த வீட்டுப் பெண் பெரிய உத்தியோகஸ்தனின் மனைவியாக இருக்கும் பாக்கியம் பெறவில்லையா? அந்த வீட்டில் ஆண்டவன் குழந்தை உருவில் முறுவலிக்கவில்லையா? பெரிய வீடும், வனப்புமிகுந்த தோட்டமும் லக்ஷ்மியின் கடாக்ஷமல்லவா? இந்த மட்டும் எனக்குத் தெளிவு பிறந்தது.

சம்பிரதாயம் என்பது ஒரு வரம்பு. நம் நல் வாழ்வின் ஒளிச் சின்னமாகவும், கோடி காட்டும் சாதனமாகவும் அமைந்துள்ளது.

நல்ல சுமங்கலிப் பெண்ணை அமங்கலியாகவும், புனிதமான ஒரு தாயைப் பேய் பிடித்தவளாகவும் நான் எண்ணி விட்டதை நினைக்க என் உடல் பதறியது. நான் மட்டும் சற்று யோசியாமல் அந்த வீட்டு அம்மாளிடம் துக்கம் விசாரித்து விட்டிருந்தால் என்ன நேர்ந்திருக்கும் என்று சிந்திக்கக் கூட முடியாமல் வேதனையுற்றேன்.



திருவாவடுதுறை ஆதீனத்துக்குச் சொந்தமான மாயூரம் அபயப்பிரதாம்பிகா — மாயூரநாதஸ்வாமி கோயில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் சமீபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. மூன்று லக்ஷம் ரூபாய் செலவிட்டு ஆலயத் திருப்பணி செய்வித்துக் கும்பாபிஷேகத்தைச் சிறப்பாகச் செய்வித்த திருவாவடுதுறை ஆதீனம் மகா சந்நிதானத்தின் அறப்பணிகளையும் அருள்பணிகளையும் தஞ்சை மாவட்ட மக்கள் போற்றிப் பாராட்டினர்.

சம்பிரதாயம் என்பது ஒரு சமூகம் தன் சூழ்நிலைக்கும், சீதோஷ்ணத்துக்கும், வாழ்க்கைத் தேவைக்குமாக ஏற்படுத்திக் கொள்ளும் ஒருவித ஒழுங்கு. குறிப்பிட்ட சமூகம் ஒரு நியதியில் சென்றால், மற்றவர்கள் பழகவும் சௌகரியம் ஏற்படுகிறது. மனித குலம் எப்பொழுதும் சம்பிரதாயத்தை விட்டு ஓடிவிட முடியாது. ஒரு சின்னத்தை விட்டால் வேறு ஒரு சின்னத்தை ஏற்படுத்தித்தான் ஆக வேண்டும். ஒவ்வொரு நாடும் தனக்கென்று சில நியதிகள் வைத்துக்கொண்டு தான் இருக்கிறது.

மேனாட்டுப் பெண்கள் இன்ன விரலில் மோதிரம் அணிந்தால் கல்யாணமானவர்கள், இன்ன விரலில் அணிந்தால் திருமணம் நிச்சயமாகி விட்டது என்றும் நியதி வைத்திருக்கிறார்கள். இந்தியப் பண்பாட்டிலோ ஒவ்வொரு பிரதேசத்துக்கும் வெவ்வேறு சின்னங்கள். நெற்றித் திலகம், வங்காள வகிட்டுச் சிந்தூரம், கால் மெட்டி, மூக்குத்தி...மணம் ஒன்று மட்டுமல்ல, ஒவ்வொன்றுக்கும் ஓர் அறிகுறி இருக்கத்தான் செய்கிறது.

மேனாட்டார் கறுப்பு உடை அணிந்திருந்தால், யாருக்கோ அவர்கள் துக்கம் காப்பதன் சின்னம் அது. அவர்களை நெருங்கும்போதே அனுதாபத்துடன், மனம் நோகாமல் யாரும் பேச அது ஒரு வழிகாட்டி. நம் நாட்டிலும் பல சின்னங்கள்.

பண்டிகைகள், அதன் அமைப்புக்கள் யாவும் நாம் அடைந்திருக்கும் நன்மைகளுக்காக ஆண்டவனுக்கு நாம் செலுத்தும் நன்றி அஞ்சலி. ஓர் ஊரில் இருப்பவர்கள் ஒருவரையொருவர் "கங்காஸ்நானம் ஆயிற்றா?" என்று விசாரிக்கும்போது அதில் எவ்வளவு தத்துவம் அடங்கியிருக்கிறது! பழைய மனஸ்தாபங்களை அழித்து விடக்கூடிய ஞானஸ்நானம் அல்லவா அந்தக் கேள்வி!

சமூகத்தில் நெருங்கிப் பழகும்போது ஏற்படக் கூடிய சிறு உரசல்கள், நெருடல்களைச் செப்பனிட உபயோகப்படும் பெரும் இயந்திரம் சம்பிரதாயம். மேலுக்கு "சௌக்கியமா?" என்று கேட்கும்போது, கேட்பவர் கேட்கப்படுகிறவர் இருவரும் ஓரளவு தூய்மை பெறுவர். அன்புத் துளி ஒன்று அங்கு பனிக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்த நிகழ்ச்சியைக் கொண்டு ஒரு சிறு கதை எழுதினேன். மனம் திருப்தியுறவில்லை. பிறகுதான் "ஜயந்திபுரத் திருவிழா" கொடியேறியது. ஒரு சமூகத்தின் கட்டுக்கோப்புக்குச் சம்பிரதாயம் அவசியமே என்பதை உணர்ந்தேன் — அதை நிலைநாட்டப் பண்புமிக்க பெண் பாரதி தோன்றினாள். அவள் உறுதியைச் சோதிக்க அவளைப் படுத்தும் கோபக்காரக் கணவன் தாமோதரன் காட்சி தந்தான். அன்புள்ளம் படைத்த ஒருவர் எவ்வளவு நிலையாக நிற்க முடியலாம், அன்பின் ஈரமற்ற, தன்னலமான மனிதர்கள் எவ்வளவு எட்டப் போய் விடலாம் என்பதற்கு ஒரு பாத்திரம் தேவையாக இருந்தது. ஆட்டி வைத்து, வர்ணங்களை வீசி மயக்கும் அழகி ரத்தினு அதைப் பூர்த்தி செய்தாள். பிறகு, பாத்திரம் அறிந்து அன்பு வைக்காத அவள் கணவன் ராஜ்யசேகரன் - பாரதியின் அண்ணன் - பிறந்தான்.

வருடா வருடம் தாம்பூலம் தந்து பழைய உறவை உறுதிபெறச் செய்யவும், புதிய உறவை உண்டாக்கவும் ஒரு மரபுடன் ஜயந்திபுரம், அடிப்படை அன்புக் கொள்கைக்காக ஒரு புராணக் கதையுடன் தோன்றியது. அந்த ஊர் மக்களைப் புனித- நீராட்ட மாலினி நதியும், ஆசி கூறி அணைத்து அருள்புரிய வாமேசக் கடவுளின் கோவிலும் தோன்றின

இந் நாவலுடைய பிறப்பின்கதை இது.

இதைப் படித்த பலர் இந்த ஊர் எங்கிருக்கிறது என்று கேட்கின்றனர். தமிழ் நாடெங்கும், ஒவ்வொரு மூலையிலும், பரிவுள்ள ஊர்தான் இது என்பதே என் பதில். கதையும், கதையின் நிலைகளும் கற்பனையே. ஆயின் இக்கற்பனையின் பயனாகச் சிலர் வாழ்க்கை செம்மையடைந்ததாகக் கடிதங்கள் வந்தன.

ஆண்டவன் தான் அனைவருக்கும் வழிகாட்டி வருகிறார். அவர் அன்பு எங்கும் நிலவுவதாக.

வட்ட மேஜை

மணிபல்லவம்

காலத்துக்குக் காலம் ஞானிகள் தோன்றி மக்களின் அஞ்ஞான இருளை நீக்கினர். தற்காலத்தில் மக்களிடையே நிலவும் அஞ்ஞான இருளை நீக்க 18-6-61-ல் வெளியான கல்கியில் ஆசிரியர் நா. பார்த்தசாரதியவர்கள் நாங்கூர் அடிகள் வாயிலாக இளங்குமரனுக்குக் கூறிய பொன் மொழிகளால் வழி பிறந்துள்ளது. "தெய்வம் விதியை வருந்தி எழுதிப் படைத்தது. மனிதர்கள் எழுத்தைப் படைத்து விதிவருத்துள்ளார்கள்" என்னும் ஞான விளக்கம் இளங்குமரனுக்கு மட்டுமல்லாது வாசகநேயர்களுக்கும் ஒரு ஞான விருந்தாகும். அதில் அடங்கிய தத்துவக் கருத்துகள் மிகவும் சுவையுள்ளன.

இலங்கை
17-6-61 ஆ. சிவசிதம்பரம்

கல்கியில் வெளியாகும் மணிபல்லவம் தொடர்கதை படித்தேன். ஒற்றைக் கண் மனிதர் நிலநாகமறவரைக் குத்தப் போகும் காட்சி விறுவிறுப்பாயிருந்தது. ஓவியர் வினுவின் படமும் என் உள்ளத்தைக் கவர்ந்தது.

முத்துப்பேட்டை செல்வராஜ்
22-6-61

நாவல் பிறக்கிறது

'நாவல் பிறக்கிறது' 'கல்கி'யின் அரியதொரு சிறந்த படைப்பு.

கையில் பேனா பிடித்தால் கற்பனை தானாகவே ஆறாக ஓடும் என்ற தவறான எண்ணம் பரவியுள்ள தற்காலத்தில் எண்ணற்ற எழுத்தாளர்கள் தோன்றியிருக்கிறார்கள்.

ஆனால் நல்லதொரு நாவல் பிறக்குமுன் பல சோதனைகள். சோதனைகள் அனைத்திலிருந்து மீண்டு அப்பெரியதொரு சாதனையைப் புரிய நாவல் வாழ்வுடன் எவ்வாறு இணைய வேண்டும் என்பதைத் தம் வாழ்க்கை அநுபவத்திலிருந்து அழகுறக் கட்டுரையில் வரைந்துள்ளார் எழுத்து அகிலர் போற்றும் நாவலாசிரியர் அகிலன்.

கோவை
12-6-61 ஓய். வி. விஸ்வேஸ்வரன்

எழுத்தாளர்கள் எழுதும் உண்மைக் கதைகளைவிட, அந்தக் கதைகள் பிறந்த வரலாற்றை அவர்கள் கூறுவதில் தான் அதிகமான இனிமையும் சுவையும் உள்ளது.

அயன்புரம்
20-6-61

வி. ரா. சந்திரன்

ஜூன் 18-ந் தேதி கல்கியில் ஸ்ரீமதி சரோஜா ராமமூர்த்தி அவர்களின் கட்டுரை எளிய நடையில் அமைந்தது என் போன்ற வாசகருக்கு மிகவும் பிடித்தமாக இருந்தது.

சென்னை
19-6-61

வி. பாலசுப்பிரமணியம்

பேராச்சரியம்

ஜூன் 4-ந் தேதி கல்கி இதழில் அன்பர் எஸ். வி. என். அவர்கள் பம்பாயிலிருக்கும் அணுசக்தி இயந்திர ஸ்தாபனத்துக்கு 'அப்ஸரா' என்ற பெயர் எப்படிப் பொருந்தும் என வியந்திருக்கிறார். அணுசக்தி நிலையங்களில் பல வகை உண்டு. பம்பாயில் முதலில் ஏற்படுத்திய அணுசக்தி நிலையம் நீச்சல் குளம் என்ற வகையைச் சேர்ந்தது. அதாவது இந்த நிலையம் எப்பொழுதும் தண்ணீரால் குளிர்ச்சி செய்யப்பட்டு, ஒரு பெரிய நீச்சல் குளம் போன்ற தொட்டியில் தண்ணீருக்குள்ளேயே இருக்கும். தண்ணீரில் ஸஞ்சரிக்கும் தேவகன்னியரை 'அப்ஸரஸ்' என்று காரணப் பெயரிட்டு அழைப்பதுபோல் இந்த அணுசக்தி நிலையத்துக்கு அப்ஸரா என்று பெயரிட்டதில் வித்தை ஏதும் இல்லை.

பெங்களூர்
6-6-61

சந்திரன்

திருஷ்டி

இந்த இதழ் கல்கியில் "ஜெகசிற்பியன்" அவர்கள் எழுதிய "திருஷ்டி" என்னும் சிறு கதை உள்ளத்தைத் தொடும் வகையில் அமைந்திருக்கிறது. ஒரு செருப்பு தைக்கும் ஏழைப் பாட்டாளியின் கள்ளமில்லா ஆசையையும், பெரிய பணக்காரர்கள் சூழும் கல்யாண விருந்தில் அவன் கலந்து கொண்ட முறையையும், அதன் மூலம் இன்றைய சமுகத்தில் நம்மிடையே காணப்படும் பெரிய களங்கத்தையும் ஆசிரியர் தமக்கே உரிய பாணியில் விளக்குகிறார். "திருஷ்டி" என்னும் சிறு கதை, சிறுகதைப் பிரியர்களுக்கு ஓர் அரிய விருந்து.

திருவண்ணாமலை
22-6-61

எஸ். வெங்கடேசன்

சுவையூட்டும் கதை

ஜூன் 18-ந் தேதி கல்கியில் வெளியான 'கதை பிறவாத கதை' சமீப காலங்களில் கல்கியில் வெளி வருகிற கதைகளிலிருந்து மாறுபட்ட தன்மையில் வாசகனுக்குச் சுவையூட்டும் கதையாக அமைந்திருக்கிறது. ஆசிரியைக்கு என் பாராட்டு.

மானாமதுரை
17-6-61

ஜி. அனந்தகிருஷ்ணன்

உள்ளம் உருகுதய்யா!

உள் உணர்ச்சியைத் தூண்டும்படியாகவும் உள்ளத்தை உருக்கும்படியாகவும் நண்பர் கோவிந்தராசன் "ஆவிசேர்க்குது" என்ற கதையில் தம் திறமையைக் காட்டி எழுதியுள்ளார். அதைப் படித்த எனது உள்ளம் உருகி விட்டது.

உத்தமபாளையம்
19-6-61

கன்னிமுகிலன்

ஏகாதசிக் கதை

ராஜாஜி அவர்கள் எழுதியுள்ள "ஓர் ஏகாதசிக் கதை"யைப் படித்தேன். அதில் ஏழாவது பையன் வாயிலாக இன்றைய நிலையை எளிதில் கூறியுள்ளதைப் படித்து என்னால் சிரிப்பை அடக்கவே முடியவில்லை. அக்கதையைப் பாராட்டி எழுதவும் எனக்கு அருகதை இல்லை. சிறுகதையாயினும் பெரு மகிழ்ச்சியைத் தருகிறது.

திருக்கோயிலூர்
20-6-61

இந்திரா வேணுகோபால்

எழில் பூங்கா

அன்பே ஆரமுதே — மனோதர்மத்தின் களஞ்சியமாய், இலக்கிய நயங்களின் எழிற் பூங்காவாய், அபூர்வ சொல்லாளமும் கருத்துச் செறிவும், பரந்த கதைக் களமும், நிறைவான ஜீவ பாத்திரங்களும் கொண்டு 'நாவல்-வைரமாலை'யாக அமைகிறது. இந்த வாரத்திய பகுதியில், ருக்மிணியும் அனந்தசாமியும் சந்திப்பது உயரிய காவிய நயமாம். ஆசிரியரின் இலக்கியத் தர வளர்ச்சியை ஒவ்வொரு வரியும் பறைசாற்றுகிறது. 'கல்கி'யின் தர உயர்வுக்கும் துணைநிற்கும் நாவல் இது.

சென்னை—17
17-6-61

செளரி

அக்கரைச் சீமைபற்றி இக்கரைச் சீமையில்

"அக்கரைச் சீமையில் ஆறு மாதங்கள்" போன ஜூன் 4-ந் தேதி இதழில் அதன் உச்ச நிலையை அடைந்து விட்டது.

ஆங்கிலேயரின் நன்னடத்தைகளுக்கோர் சிகரம் வைத்தாற் போலிருந்தது, மிரே அம்மையாரின் அன்புள்ளம். "கணவன் இறந்தான்" என்ற தாங்க இயலாப் பெருங் கவலையை நெஞ்சாழத்திலேயே அமிழ்த்தி வைத்து விட்டு, வந்த விருந்தினரைக் களிவுளத்தோடு வரவேற்ற மிரே அம்மையின் விந்தைக் குணத்தைப் படித்த எந்தத் தமிழ் மகனின் உள்ளமும் உருகாமலிருக்காது.

கடல் கடந்த சீமையிலே 'விருந்தோம்பல்' என்ற அரிய பண்பை ஓர் ஆங்கிலேய அம்மையார் எங்ஙனம் பாதுகாத்தார் என்பதைப் படித்த யாவரும் தெளியும் வண்ணம் எடுத்துரைத்த திரு. சோமுவுக்கு எனது உளங்கனிந்த வாழ்த்துக்கள்.

புதுடில்லி
2-6-61

நா. இராசாமணி


முயற்சியின் வெற்றியில் நாம் பெருமையடைகிறோம். கவர்ச்சியான தோற்றத்திற்குப் பளபளப்புடைய கருமையான கேசம் முக்கியம். அதற்குச் சிறந்தது வாஸ்மால்
அழகுடன் திகழும் கேசம் வெற்றிக்கு அறிகுறி!
வாஸ்மால் சிறந்த கூந்தல் தைலம். கூந்தலை கருமையாகச் செய்கிறது. கேசவளர்ச்சியை ஊக்குவிக்கிறது. தைலமாகவும், போமேடாகவும், மோசடி செய்ய முடியாத மூடியுடைய பாட்டில்களில் எல்லாக் கெமிஸ்ட்டுகளிடமும் கடைகளிலும் கிடைக்கும்.
Vasmol
கருமையளிக்கும் கூந்தல் தைலம்
ஹைஜீனிக் ரிசர்ச் இன்ஸ்டிட்யூட்
தபால் பெட்டி 1192, பம்பாய்-1
சென்னை ஏஜெண்டுகள்
ஆர். எல். கவுடர் & கம்பெனி
பந்தர் தெரு சென்னை-1


ஸ்லோன்ஸ்
பாமை
உபயோகித்து
வலியை
உடனே
நிறுத்துங்கள்
SLOAN'S BALM
TRADE MARK
KILLS PAIN
TRADE MARK OWNED BY STANDARD LABORATORIES INC U.S.A.
தலை வலிகள், சுளுக்கு, கழுத்துப்பிடிப்பு, முதுகுவலி, கீல்வாதவலி, நரம்புவலி மற்றும் இடுப்புப்பிடிப்பு முதலானவைகளுக்கு ஸ்லோன்ஸ் பாமை வலிக்கும் பாகத்தின் மேல் தடவவும். உடனே இதமளிக்கும் இதன் ஆவி உள்ளே சென்று வலியுள்ள பாகங்களில் பரிசுத்தமான ரத்த ஓட்டம் இருப்பதற்கு உதவுகிறது. உடனடி நிவாரணம் பெற வீட்டில் எப்பொழுதும் ஒரு ஜாடி ஸ்லோன்ஸ் பாமை கைவசம் வைத்திருங்கள்.
கீல் வாதம் * சுளுக்கு
தசைவலிகள் இவற்றிற்கு ஏற்றது
வார்னர் - லாம்பர்ட் பார்மசூட்டிகல் கம்பெனி
(யு. எஸ். ஏ.வில் இணைக்கப்பட்டது. அங்கத்தினர்கள் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)

பிரபல பல்வைத்திய நிபுணர்கள் நிரூபித்துள்ளனர்

கால்கேட் குளோரோபில்



ஈறுகளை பலப்படுத்துகிறது


வாய் நாற்றத்தை அதி தீவிரமாய் ஒழிக்கிறது! "ஆன் மோல்கோப்" பரிசோதனைகளில், கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட், வேறெந்த சாதாரண பற்பசையைவிட மிகத்தீவிரமாக வாய் நாற்றத்தை ஒழிக்கிறது என்பது நிரூபணமாகியுள்ளது.

சொத்தையாக்கும் கிருமிகளை ஒழிக்கிறது! கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை ஒவ்வொரு முறையும் சாப்பிட்டவுடன் உபயோகித்தால், பற்களை சொத்தையாக்கும் கிருமிகள் அழிகின்றன.

கால்கேட்டின் பிரத்யேகமான சேர்க்கை முறையைக் கொண்ட குளோரோபிலின் பூரண பலனை அடையுங்கள்.... கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட் அல்லது கால்கேட் குளோரோபில் டூத்பவுடர் வாங்குங்கள்!

கால்கேட் குளோரோபில் டூத் பேஸ்டை நீங்களும் உபயோகித்தால், தீவிரமான குளோரோபிலின் பூரண நன்மையை அடைந்து, ஈறுகள் உறுதியாகவும் ஆரோக்கியமாகவும் இருக்க ஏதுவாகிறது. உண்மையான இந்த குளோரோபில் டூத்பேஸ்ட், சிறந்த பற்பசை, பற்பொடி முதலியவை தயாரிப்பதில் மிக்க அனுபவம் கொண்ட உலகிலேயே மிகப்பெரிய ஸ்தாபனத்தால் தயாரிக்கப்படுகிறது!

வேறு எந்த பற்பசையிலும்
இதைவிட அதிக வீரிய குளோரோபில்
இல்லை — குழந்தைகள் அதன்
பெப்பர்மின்ட் வாசனையை மிகவும்
விரும்புகிறார்கள்!



பெரிய எக்கானமி
சைஸ் லாபகரமானது!

CTPA-G-10 TAM.

சாப்பிட்டு முடிந்ததும் வெற்றிலே போட்டுக் கொள்ளத் தொடங்கினார் சுப்புசாமி. அதைப் பார்க்கப் பார்க்க வேடிக்கையாக இருந்தது ருக்குவுக்கு. அவர் வெற்றிலே போடுவதிலும் ஒரு தனி ரகம். கால் கவுளி வெற்றிலேயை அப்படியே அடுக்கி, ஒவ்வொரு வெற்றிலேயைத் தூக்கித் தூக்கிச் சுண்ணாம்பு இடுவார்-தபால் ஆபீசில் முத்திரை இடுகிறது போல. பிறகு சின்னக் கத்திரிக்கோலால் காம்புகளைக் கீழே தொடங்கிக் கத்திரிப்பார். அப்படியே கால் கவுளியையும் சுருட்டுவார். உருளையாக உருட்டி, சிவலே ஒரு பெரிய கையளவு வாயில் போட்டு, வலது கையால் வெற்றிலே உருளையை வாயில் திணித்துக் கொள்வார். அது வாய் கொண்டு அரைபட இரண்டு மூன்று நிமிஷங்களாகும். ஜன்னல் ஓரமாக உட்கார்ந்து தோட்டத்தைப் பார்த்துக்கொண்டே இந்தக் காரியம் நடக்கும். கண் அப்பொழுது ஆழ்ந்த சிந்தனையிலிருக்கும் - திறந்தோ மூடியோ. பிறகு இரண்டு ஏலக்காயை உரிக்காமல் தோலோடு போட்டுக்கொள்வார். பிறகு ஒரு கிராம்பு. இந்தக் கலவையில் பாதியை விழுங்கி விட்டு, புகையிலே டப்பாவை எடுத்து ஒரு சின்னத் தட்டில் ஒரு குத்துப் புகையிலே எடுத்து, பெட்டியிலேயே கிடக்கிற ஸ்வாக் அத்தரை இரண்டு மூன்று துளிகள் விட்டு நசுக்கிப் பிசைந்து வாயில் அதக்கிக் கொள்வார்

இந்தக் காட்சியைச் சந்திராவும் ருக்குவும் கண்ணைச் சிமிட்டிப் புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

மீண்டும் கார் சத்தம்.

குருசாமி நாலு டிக்கட்டுகளையும் மீதிச் சில்லறைகளையும் கொண்டு வந்து அவர் முன்னால் வைத்தான்.

"க்ருக்ரும்?" என்று வாயில் கையை வைத்துத் திரும்பினார் சுப்புசாமி.

"சாப்பிட்டாச்சுங்க."

"க்ரும்?"

"ஹோட்டலில்."

"க்ருக்ரும்...ம்...ம்க்ரும்" என்று சந்திராவைப் பார்த்தார் சுப்புசாமி.

"அம்மா சாப்பிடுகிறாள்."

"க்ருக்ரும்" என்று கைக்கடிகாரத்தை நீட்டினார் அவர்.

"ஒன்பது அஞ்சுதானே ஆகிறது."

"க்ரும்....க்ரும்"

"எல்லாம் இந்தப் புடவை போதும். ருக்மிணி மாமி வேண்டுமானால் வேறு மாற்றிக் கொள்ளட்டும்."

"ம்க்ருக்ரும்" என்று ஜாடை காட்டினதும் சந்திரா வேறு ஒரு வெளுத்த வெள்ளைச் சட்டையையும் அங்கவஸ்திரத்தையும் எடுத்துக்கொண்டு வந்தாள்.

ருக்மிணி அவரையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். ஆறடி உடம்பு. அத்தனை பருமன். முலாம்பழ நிறம். பரம்பரையாகப் பெரிய மனிதனாக வாழ்கிற முகக் களை. சின்ன விஷயங்களையே மனத்தில் போட்டுக் கொள்ளாத பெரும் போக்கு. யாருக்காக வாழ்கிறோம் என்று சொல்ல முடியாத வாழ்க்கை. பற்றில்லாத வாழ்க்கை. இவருடைய பிள்ளைக்கு எப்படி இவரை விட்டுவிட்டு, யாரோ ஒரு வெள்ளைக்காரியைக் கலியாணம் செய்து கொண்டு, இங்கிலாந்திலேயே வீடு வாங்கிக் கொண்டு, அந்தத் தேசத்துப் பிரஜையாகவே ஆகிவிட மனசு வந்தது!



தி. ஜானகிராமன்

அதை நினைத்ததும் சட்டென்று சாப்பாட்டின்பொழுது பேசியதெல்லாம் அவளுக்கு ஞாபகம் வந்தது. அவருக்கு அப்படி ஒரு பிள்ளை இருக்கிறான் என்பதையே நினைக்காமல் அவள் பேசிவிட்டாள். 'நாம் பேசினோமா! சந்திராவல்லவா பேசினாள்! நாம் எதிர்க் கட்சியல்லவா பேசிக் கொண்டிருந்தோம். பையனை நினைத்துத் தான் இப்படி யோசனையில் ஆழ்ந்து கிடக்கிறாரோ? ஏதாவது பேசிவிடப் போகிறோம் என்று புகையிலையைப் போட்டு அமுக்கிக் கொண்டிருக்கிறாரோ!...'

நாகம்மாள் சாப்பிட்டுவிட்டு வெளியே வந்தாள்.

"க்க்ரும்" என்றார் அவர்.

"சமையல் உள்ளெல்லாம் வந்துதான் அலம்பறோம்."

"க்ருக்கும்" என்று வேறு சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டார்.

தலைக்கலையை ஒரு வாரல் வாரிச் சரிப்படுத்திக் கொண்டாள் ருக்மிணி. ஐந்து நிமிஷங்களில் பூட்டை எடுத்து வாசலைப் பூட்டினாள். காரில் ஏறும்பொழுது, ஏதோ சொப்பனம் காணுவது போலிருந்தது ருக்குவுக்கு. சந்திராவின் தலையிலிருந்து வந்த மல்லிகையின் மணம் அந்தக் கனவை மண்ணின் கனவாக மாற்றிப் போனதை உணர்த்தியது.

வண்டி புறப்பட்டதும், "இத்தனை நாழிகையாச்சு. இன்னும் மழை வரக் காணோமே?" என்று வெளியே பார்த்தாள் சந்திரா.

"மழையா? ஒரு பொட்டு மேகத்தைக் காணோம்."

"மேகங்கள் வந்து கூடவேண்டாமோ? செட்டியார் பணத்தைப் பாரத தேசத்துக்குக் கொண்டு வரும் நினைவை மறந்து, கொஞ்ச நேரம் தங்கை, மருமானோடெல்லாம் சந்தோஷமாயிருக்க நாழி கிடைக்கதே மாமாவுக்கு."

கப்புசாமி பதில் பேசவில்லை.

"ஏன் மாமா?"

"மாமா நிஷ்டையிலே இருக்கார் இப்ப. பேசமாட்டார்" என்றாள் ருக்கு.

"என்ன நிஷ்டை?"

"ஐம்புலன்களையும் அழித்து, மனசையும் அதோடு சேர்த்து அழித்து 'அஹம் பிரம்மாஸ்மி' என்பதற்குப் பதிலாக 'பிரம்மபத்ரைவாகமஸ்மி' என்று தியானித்துக் கொண்டிருக்கிறார். பரம்பொருளோடு ஐக்கியமாகிற பிரம்மானந்தத்துக்குச் சமம் பிரம்மபத்ரம் என்ற புகையிலையோடு ஐக்கியமாகிறது" என்றாள் ருக்மிணி.

"புபுப்" என்று சத்தம் கேட்டது முன் சீட்டில். எல்லோரும் முன்னே பார்த்தார்கள். கப்புசாமியின் வாயில் தேங்கிக் கிடந்த பிரம்மானந்தம் அத்தனையும் காரின் முன் கண்ணாடிமேல் வீசித் தெளித்து விட்டது. நாலைந்து துளிகள் அங்கிருந்து பிரதிபலித்துக் குருசாமியின் வேட்டி, சட்டை மற்றும் நெற்றியின் மீதும் தெளித்தது.

"என்ன மாமா இது...?"

குருசாமி வண்டியை நிறுத்தி விட்டான்.

கப்புசாமி சிரித்துக் கொண்டிருந்தார்.

"என்ன மாமா இது!"



"எந்தச் சமயத்திலே சிக்க சிக்கமுட்டு இறது என்று கிடையாதா உங்களுக்கு."

"நான் ஒன்றும் சொல்லவில்லை. ப்ரொபஸர் ருக்மிணிதான்."

"சீட்டைப் போடு, குருசாமி!"

உச்சி விளக்கு எரிந்தது.

வண்டி திரும்பியது. கேட்டுக்கு வெளியே நின்றது. நாகம்மாள் வேறு சட்டை வேட்டி எடுப்பதற்காக உள்ளே விரைந்தாள். சுப்புசாமி சட்டையைக் கழற்றிப் போடப் புறக்கடைப் பக்கம் போனார். குருசாமியும் சென்றான்.

"இன்று உங்களுக்காகத்தான் மழை பெய்யணும்" என்றாள் சந்திரா. "வேலை வேலை என்று பறக்கிற மாமா இன்று சினிமாவுக்குக் கிளம்பி விட்டார். உடன் பிறந்தவளைச் சந்தோஷப்படுத்த வேண்டும் என்று கிளம்பி விட்டார். எல்லாம் உங்களால்தான்..."

ருக்மிணி சிரித்தாள். வேடிக்கையாகச் சொன்ன வார்த்தைதான் அது என்று நன்றாகத் தெரியும் அவளுக்கு. ஆனால் வழக்கம்போல் அடி மனம் வார்த்தைக்கு வார்த்தை உள்ளர்த்தம் கண்டுபிடிக்க அலைந்தது. ஆனால் அதுவும் சந்திராவின் முகத்தைப் பார்த்ததும் மறைந்து போய்விட்டது.

"மாமி! நீங்கள் இந்த ஊருக்கே வந்து விடுங்கள். இந்த வீட்டிலேயே



இருங்கள்'' என்று அவள் கையை அழுத்தினாள் சந்திரா மேலும்.

திரும்பி அவளைப் பார்த்தாள் ருக்மிணி.

"ஆமாம் மாமி. நீங்கள் என்னோடேயே இருங்கள்'' என்று முழுதும் சொல்ல முடியாமல் தடுமாறினாள் சந்திரா. கண்ணில் நீர் ததும்பி நின்றது.

"கவலைப் படாதே. நான் இங்கேயே இருக்கிறேன்'' என்று அவளை இழுத்து அணைத்துக் கொண்டாள் ருக்கு.

பத்து நிமிஷங்கள் கழித்து உள்ளே போன மூவரும் திரும்பி வந்து காரில் ஏறிக்கொண்டார்கள். சட்டை மாற்றிக் கொண்டு வந்த சுப்புசாமி, "ம், இனி மேல் என்ன வேணும்னாலும் பேசுங்கோ. பயமில்லாமல் சிரிக்கிறேன்'' என்று சொல்லிக் கொண்டே கதவைத் திறந்து உட்கார்ந்தார்.

மறுபடியும் சிரிப்பு மூட்டும் நிலையில் இல்லை ருக்மிணி. சந்திராவின் நெகிழ்ச்சி அவளை எங்கோ கொண்டு சென்று விட்டது. குழம்பினாள் அவள். நம்மிடம் இப்படி ஒட்டும்படியாக என்னத்தைக் கண்டாள் இவள்! ஏன் திடீரென்று இப்படி ஆடிப் போனாள்! கிடைத்த தனிமையைப் பற்றிக் கொண்டு, இப்படி மனத்தைக் கொட்டும்படியாக அப்படி என்ன இருக்கிறது நம்மிடம்?

இந்தக் கேள்விகளை அவள் இங்கு மட்டுமல்ல, இப்பொழுது மட்டுமல்ல, டில்லியில் ஆயிரம் தடவைகள் கேட்டதுண்டு. மற்ற எல்லா ஆசிரியைகளையும் தன்னையும் அவள் தராசில் வைத்து வைத்துப் பார்த்துக் கொள்கிற வழக்கம். சதா ஒரு பத்து மாணவிகளாவது அவளைச் சுற்றிக் கொண்டே யிருப்பார்கள். இத்தனைக்கும் கலகலவென்று இழுத்து வைத்துப் பழகும் சுபாவமும் இல்லை அவளுக்கு. நறுக்காக, சுருக்கமாகத்தான் பேசுவாள். 'சுருக்சுருக்'கென்று தைக்கும் படியாகக்கூட இருக்கும் அவளுடைய ஹாஸ்யமும். இத்தனையையும் பாராட்டாமல் எப்படி வந்து சுற்றிக்கொள்கிறார்கள்? "நீ ரொம்ப இடம் கொடுக்கிறே இந்தக் குட்டிகளுக்கெல்லாம்'' என்று கங்கூலி அவளை அடிக்கடி எச்சரிப்பதுண்டு. "வாத்தியார் என்றால் உம்மணா மூஞ்சியாக இருக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. அதற்காக இப்படிச் சமயம் போது தெரியாமல் அதுகளைக் கட்டி வைத்துக் கொண்டு அரட்டை அடித்தால், ஒரு அத்து, பயம் எல்லாம் எப்படி யிருக்கும்?'' என்பான் கங்கூலி.

"எதற்காகப் பயப்படணும் என்னைப் பார்த்து? வாத்தியார்களைக் கண்டு பயப்படவா அவர்கள் சம்பளம் கட்டுகிறார்கள் கல்லூரிக்கு? பயப்படுகிறவர்களுக்கு நம்மிடம் இருந்து எதை எடுத்துக் கொள்ள முடியும்?''

"வாஸ்தவம். அதனால்தான் உன் பவுடர், சோப்பு இவற்றைக்கூட உன் அறையில் வந்து தாராளமாக உபயோகிக்கிறார்கள் போலிருக்கிறது.''

"ஆமாம், உபயோகிக்கிறார்கள். நான் என்ன செய்ய?''

"இப்படித் திறந்த வீட்டுக்குள் நுழைகிறாற்போல் என் அறைக்குள் யாரையாவது வந்துவிடச் சொல்லு.''

"........''

"அப்படி வர வேண்டும் என்ற எண்ணம்கூட வராது அவர்களுக்கு.''

"என்னமோ என் அறையைக் கண்டால் இஷ்டப்படி வரலாம் போகலாம் என்று தோன்றுகிறது அவர்களுக்கு.''

"அதற்குத்தான் என் இடம் கொடுக்கிறாய் என்று கேட்கிறேன்.''

"நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லையே?''

"நம்முடைய சாமான் சரஞ்ஜாமெல்லாம் எப்படி இரண்டாம் மனுஷர்கள் தாராளமாக எடுத்துப் புழங்க முடியும்! அதற்கு அனுமதிக்கலாமோ? அது நல்ல பழக்கம் இல்லையே. மரியாதையும் இல்லையே.''

"எனக்கு அது தப்பாகப் படவில்லை. என் புஸ்தகத்தையோ, மணிபர்சையோ யாராவது வித்தியாசமில்லாமல் தாராளமாக எடுத்துப் புழங்கினால், எனக்குப் பெருமையாக இருக்கிறது. உடம்பெல்லாம் பூரித்து விடுகிறது. ஒரு சுற்றுப் பருத்து விட்டாற்போல் கூட ஆகி விடுகிறது.''

"ஓ, அப்படியா! உடம்பில் சதை வைக்க வேறு டானிக்கே தேவையில்லை அப்படியானால்'' என்று வறட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டே அப்பால் போய் விட்டான் கங்கூலி.

நொடிப் பொழுதில் இந்த சம்பாஷணை அவள் மனத்தில் ஓடியது.

கல்லூரியில் அவளுக்காகக் கொடுக்கப் பட்டிருந்த அறை அப்படித்தானிருக்கும், திறந்த வீடாக. சொந்த வீட்டுக்குள் நுழைகிறாற்போல் மாணவிகள் வருவார்கள், போவார்கள், பீரோவைத் திறப்பார்கள், புத்தகங்களை எடுப்பார்கள், புரட்டுவார்கள், தர்மாஸ்ப்ளாஸ்கைத் திறப்பார்கள். "காப்பி கொஞ்சம் பாக்கியிருக்கே!'' என்பார்கள். 'எனக்கு எனக்கு' என்று சண்டை

போட்டுக் கொண்டு சாப்பிட்டும் விடுவார்கள். அதற்காகக் கொஞ்சம் பெரிய ப்ளாஸ்காகவே வாங்கி வைத்துக்கொண்டான் அவன். மூன்று நான்கு பேர்கள் சாப்பிடக்கூடிய அளவுக்குக் காப்பியைப் போட்டுக் கொண்டு வருவான்.

மாணவிகள் அதோடு நிற்பதில்லை. அப்பா அம்மாவிடம் சொல்லாத ரகசியம் எல்லாவற்றையும் இங்கே வந்து தனியாகச் சொல்லிக் கொள்வார்கள். ஒன்று சிரிக்கும், ஒன்று தழுதழுக்கும், ஒன்று அழும், ஒன்று கத்தும், ஒன்று புகையும். இரண்டாம்தாரச் சித்தி சண்டை, அண்ணி வந்த பிறகு அண்ணா ஒரு விதமாக மாறிவிட்ட கோபம், வாசலிலேயே காத்துக் கொண்டு, தான் தெருவில் வரும்போது, படியிறங்கிக் கல்லூரிக்குப் புறப்படுகிற பையனைப் பற்றிச் சொல்லுகிற பெண்ணின் குறும்பு, அம்மா எட்டாம் தடவையாகக் குளிக்காமல் இருக்கிற 'சோதனை' — இப்படி தன் வீட்டுச் செய்திகளெல்லாம் இவளிடம் வந்து பதிவித்துக் கொண்டிருப்பார்கள். வேறு ஆசிரியைகள் தலைகீழாகக் கட்டி வைத்து அடித்தால்கூடச் சொல்ல மாட்டார்கள். இங்கு மட்டும் பாதிரியிடம் பாவமன்னிப்புக்கு அறிவித்துக் கொள்கிற மாதிரி ஒரு சேதி பாக்கியில்லாமல் காதில் விழுந்து கொண்டேயிருக்கும்.

டில்லியில்தான் இப்படி என்றால், இங்கு வந்தும் விடவில்லை. இந்தப் பெண் ஏன் இப்படி ஒட்டுகிறது? ருக்மிணி குழம்பினாள். எல்லாவற்றையும் அவள் காலடியில் வைத்து ஒப்படைத்து விட்டாற்போல் சந்திரா நெகிழ்ந்ததை நினைத்த பொழுது இப்போதும் அவள் இதயம் விம்மியது.

"என்ன, திடீரென்று பேச்சை நிறுத்தி விட்டீர்கள்?" என்றார் சுப்புசாமி.

"மழைதான் பெய்துவிட்டதே, மாமா! கோடை மழை மாதிரிதான் நீங்கள் பொழிந்து விட்டீர்களே!" என்றாள் சந்திரா.

"அன்றைக்கு இப்படிச் சிரிக்க நான் பார்த்ததேயில்லை ருக்மிணி!" என்றாள் நாகம்மாள்.

"அதுதான் சிரிப்பாய்ச் சிரிக்க அடித்து விட்டாளே உன் சிநேகிதி" என்றார் சுப்புசாமி.

"மாமி! நீங்கள் இந்த அறைக்கே வந்து விடுங்கள். மாமா வந்து இருக்கிறது

இரண்டு நாட்கள். அதை அக்காளோடும் மருமாளோடும் சிரித்துப் பேசி எங்காவது வீணாக அடித்து விடப் போகிறேனே என்று நான்கு வீசை துப்பறியும் நாவல்களைக் கையோடு கொண்டு வந்து விடுகிறார். துப்பாக்கி, கொலை, மர்மம், துப்பறிகிறது. உயிரைக் கையிலே பிடித்துக் கொண்டு கடைசிப் பக்கம் வரைக்கும் நிற்காமல் ஓடுகிறது - இந்தப் பயங்கரங்களாவது இல்லாமல் இருக்கும்.''

''ம்ஹும்'' என்று சிரித்தாள் ருக்மிணி. ''அதற்கென்ன? வந்தால் போச்சு!''

''வந்துவிடுகிறேன் என்று ஒரு வார்த்தை சொல்லச் சொல்லு. பார்ப்போம். நீ சொல்கிறதை அவன் ஸீரியஸ்ஸா எடுத்துக் கொள்ளவில்லை, பெண்ணே!'' என்றார் குப்புசாமி.

''வந்துவிடுகிறேன் மாமா, வந்துவிடுகிறேன்'' என்றாள் ருக்மிணி. குரலில் துளி காரம் கூடத் தட்டிற்று. 'இத்தனை புத்திசாலிகளாக இருக்கிறீர்கள். நான் தான் வருவதாக முடிவு கட்டிவிட்டேனே. என் கண்ணைப் பார்த்தால் புரியவில்லையா? என் உற்சாகத்தைப் பார்த்தால் புரியவில்லையா? வாயைத் திறந்து சொன்னால்தானா? எழுதிக்கூட வாங்கி விடுவீர்கள் போலிருக்கிறதே! கொஞ்சம் இங்கிதமாக நான் இருந்து தொலைக்கக் கூட விடமாட்டீர்களா?' என்று மனத்துக்குள்ளே அவர்களைப் பார்த்து அரற்றினாள்.

நாணத்தினாலோ, கூச்சத்தினாலோ, தன் முடிவை அப்படி வெளிப்படையாகச் சொல்ல மனம் இடம் கொடுக்கவில்லை அவளுக்கு. பேசாமல் கொள்ளாமல் அவர்கள் மௌனமாக அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று பட்டுப் போன்ற அந்த உள்ளத்தின் மென்மை விரும்பியது.

தியேட்டர் வாசலை அடைந்தபோது, படம் ஆரம்பித்துப் பத்து நிமிஷங்கள் ஆகிவிட்டன. தட்டித் தடவிக்கொண்டு எல்லோரும் உள்ளே போய் உட்கார்ந்து கொண்டார்கள்.

படம் இன்னும் தொடங்கவில்லை. சில்லறை, உதிரிகள் எல்லாம் வந்து கொண்டிருந்தன. படம் தொடங்கவே, நாகம்மாள் முணுமுணுக்கத் தொடங்கி விட்டாள். அருண்குமாரின் பெயரைப் பார்த்ததும், பத்து விநாடி முணுமுணுத்தாள். ''காக, பேரு மட்டுமில்லே. இவ்வளவு சதையும் சம்பாதிச்சிண்டிருக்கானே. எங்கிருந்து வந்தது? வந்த புதுசிலே கழுத்து எலும்புக்குப் பின்னாலே இந்தப் பக்கம் ரெண்டு, அந்தப் பக்கம் இரண்டாக நாலு எலுமிச்சம் பழத்தைப் பத்திரமா வைக்கலாம். எப்படி ஊறிப் போயிட்டான் பாரேன்'' தானாக அந்த முணுமுணுப்பெல்லாம் ஓய்ந்து விட்டது.

சற்றுக் கழித்து ''நாசமாய்ப் போக, நன்றாத்தான்டி ஆக்ட் பண்ணறான். ஒண்ணுமில்லாமலா இப்படிப் பைத்தியம் பிடிக்க அலையறதுகள் எல்லாம்!'' என்றாள் நாகம்மாள்.

''மத்தியானம் உங்கள் வைத்தியர் கிட்டே அப்படிப் பொரிஞ்சீளே!'' என்றாள் ருக்மிணி.

''பொரிஞ்சேன்; குணம் இப்படியிருக்கேன்னு. சாமர்த்தியத்தைக் குறைச்சுட முடியறதா அதுக்காக?''

''சரி, படத்தைக் கவனி.''

அப்புறம் நாகம்மாள் பேசவில்லை. ருக்மிணிக்கு நடுநடுவே மனம் அலைந்தது. குப்புசாமியிடம் எல்லாவற்றையும் சொன்ன இந்த நாகம்மாள், ரங்கனைப் பற்றி ஒரு சமாசாரத்தையும் சொல்லவில்லை போலிருக்கிறது. மத்தியானம் அனந்தசாமியும் அவளும் பேசியது முழுவதையும் கேட்டுக் கொண்டிருந்தாள் அவள், ஹாலிலிருந்தபடியே. இப்போது அருண்குமாரைப் பார்க்கும் போது நடுநடுவே அவளுக்குச் சந்திராவைக் கைவிட்டு எங்கோ அலைகிற அந்த ரங்கனின் நினைவு வந்தது. வேண்டும் என்றோ பயந்தோ, நாகம்மாள் அந்தப் பேச்சையே எடுக்கவில்லை. அதைப் பற்றி நினைக்கவே அவளுக்குக் கசப்பாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அருண்குமாரின் குணங்கள் ஞாபகத்துக்கு வரும் பொழுது, அவன் நண்பனின், அதுவும் இத்தகைய நண்பனின் நினைவு எப்படி வாராமலிருக்கும்?

படம் முடிந்து வெளியே வந்ததும் கூட்டம் கலையட்டும் என்று சற்று ஒதுங்கி நின்று கொண்டார்கள்.

''சரிதான் போ'' என்றார் குப்புசாமி.

''என்ன, மாமா?'' என்று ருக்மிணி கேட்டாள். ''ஏதாவது மறந்து வைத்து வந்து விட்டீர்களா?''

''அதெல்லாம் இல்லை.''

''பின்னே?''

''சினிமாவுக்கு வந்த பலன், நோக்கம் எல்லாம் சைபர் - நாம் ஒண்ணு நினைச்சா, பகவான் ஒண்ணு நினைக்கிறான்'' என்று எங்கோ பார்த்துக் கொண்டு சொன்னார் குப்புசாமி. ''அதோ பாரு வருகிறதை'' என்றார்.

''என்ன?'' என்று சிரித்த முகத்துடன் முன்னே வந்தார் அனந்தசாமி.

ருக்மிணிக்குக் குப்பென உடலெல்லாம் சுட்டது. வந்த பூரிப்பையும் அவளால் அடக்கிக் கொள்ள முடியவில்லை. கண்ணில் வந்து நின்றது அது. (தொடரும்)



பிரிட்டானியா
க்ரீம்
க்ராக்கர்
முறுகலாகவும்
புஷ்டிச் சக்தியும்
நிறைந்தவை
பிரிட்டானியா
பிஸ்கட்டுகள்
தி பிரிட்டானியா பிஸ்கட் கம்பெனி லிமிடெட்

அஞ்சறைப் பெட்டி



அடிப்படையான ஒரு விஷயத்தில் காங்கிரஸ் காரியக் கமிட்டி பிளவு பட்டு நின்றது. நேரு, பட்டேல், ராஜாஜி ஆகியோர் ஒருபக்கமிருந்தனர். ராஜன் பாபு, கிருபளானி, சங்கரராவ்தேவ் ஆகியோர் முழுமனத்துடன் காந்திஜியுடனிருந்தார்கள். விடுதலை பெற்ற இந்தியா, யுத்தத்தில் பங்கு கொள்ள முடியுமென்றால், சாத்வீகப் போராட்டத்தின் அடிப்படையே மறைந்து விடும் என்று இவர்கள் கருதினார்கள். ஆனால் நான் உள் நாட்டுப் போராட்டத்துக்கும் அந்நிய ஆக்கிரமிப்பை எதிர்ப்பதற்கும் நிறைய வேற்றுமையுண்டு என நம்பினேன்....

பிரிட்டிஷ் மக்கள் போர்க் கருவிகளை விட்டு விட்டு ஹிட்லரை ஆத்மீக சக்தியால் எதிர்க்க வேண்டும் என்ற காந்திஜியின் அசாதாரணமான



"'கல்கி' கையாடிப் புகழ் பெற்ற தமிழ் வசன நடை எங்கிருந்து உதயமாயிற்று என்பதை இந்த நூலிலிருந்து கண்டு கொள்ளலாம்" என்கிறார் ராஜாஜி: மதுரை, பாரதி புத்தக நிலையம் வெளியிட்டுள்ள மகாகவி பாரதியாரின் "சின்னச் சங்கரன் கதை" என்ற புத்தகத்தின் அணிந்துரையில். அதிலிருந்து சில வரிகள் :

மஹாராஜ ராஜபூஜித மஹாராஜ ராஜஸ்ரீ ராஜமார்த்தாண்ட சண்டப்பிரசண்ட அண்ட

கிணகிணவென்று டெலிபோன் மணி அடித்தது. மைதிலி ஓடிச்சென்று ரிஸீவரைக் கையிலெடுத்தாள். பேசியது ராகவன்தான். "மைதிலி! உன்னை இப்போதே இந்தக்கணமே பார்க்க வேண்டும் போலிருக்கிறதே" என்றான்.

வருங் காலத்தில் காதலர்கள் இப்படிச் சங்கடப்பட வேண்டியதில்லை. டெலிவிஷன் போனில் ஒருவரையொருவர் ஆசைதீரப் பார்த்துக்கொண்டே பேசலாம் !

போன் பேசுபவரது குரலைக் கேட்பது மட்டுமன்றி அவர் முகத்தைப் பார்க்கவும் வசதிசெய்யும் புதுவகைத் தொலைபேசி ஒன்றை அமெரிக்காவிலுள்ள பெல் டெலிபோன் ஆராய்ச்சிக்கூடம் கண்டு பிடித்திருக்கிறது. இதில் சாதாரணத் தொலைபேசிக் கம்பிகளைத் தவிர டெலிவிஷன் ஒளி



பெரிய வர்த்தகக் கம்பெனி ஒன்றின் மானேஜர் பதவிக்குப் பலர் மனுப் போட்டிருந்தார்கள். அவர்களில் நால்வரைப் பொறுக்கி எடுத்துப் பேட்டி காணத் தீர்மானித்தார் முதலாளி. குறிப்பிட்ட தினம் நால்வரும் வந்து சேர்ந்தார்கள். ஒவ்வொருவராகத் தமது அறைக்குத் தருவித்தார் கம்பெனி அதிபர்.

முதலாவதாக வந்து அமர்ந்தவரை என்ன கேள்வி கேட்பது என்று யோசிக்கையில் மேஜைமேல் கிடந்த வாரப்பத்திரிகை ஒன்று முதலாளியின்



உலகமே போற்றும் அமெரிக்க ஜனாதிபதி ஆப்ரஹாம் லிங்கனின் திருவுருவப்படத்தைப் பார்க்கும்போது, "ஏது ஆள் ரொம்பக் கடுமையாக இருப்பார் போலிருக்கிறதே !" என்று சாதாரணமாகத் தோன்றும். ஆனால் உண்மையில் நகைச்சுவையுடனும் சாதுர்யமாகவும் பேசுவதில் லிங்கன் வல்லவர். ஒரு சமயம் அவருக்கு அம்மை போட்டிருந்தது. அனைவரும் அவரை அணுக அஞ்சி ஒதுங்கியே நின்றார்கள். அப்போது லிங்கன் கூறினார் : "என்ன அதிசயம் பாருங்கள் ! என்னிடம் ஒன்றுமில்லாதபோது எல்லாரும் என்னைச் சூழ்ந்து கொண்டார்கள். ஆனால் பிறருக்குக் கொடுப்பதற்கென்று என்னிடம் ஏதேனும் இருக்கும்போது யாருமே என்னை நெருங்க மாட்டேனென்கிறார்கள் !"

யோசனையைக் கேட்டதும் லார்ட் லின்லித்கோவுக்குத் தூக்கிவாரிப் போட்டது. மணியை அடித்துத் தமது 'ஏ. டி. ஸி.'யை அழைத்துக் காந்திஜியைக் கார் வரையில் வழியனுப்பி வரச் செய்வது அவர் வழக்கம். அன்று மணியையும் அடிக்கவில்லை; 'ஏ. டி. ஸி'யையும் அழைக்கவில்லை....காந்திஜி என்னைச் சந்தித்தபோது இந்தச் சம்பவத்தைக் கூறி, வைஸ்ராய் சாதாரணமாகக் காட்ட வேண்டிய உபசாரங்களைக்கூட மறந்தது குறித்து ஆச்சரியப்பட்டார். "உங்கள் யோசனையைக் கேட்டதும் பழக்க வழக்கங்களைக்கூட மறந்து விடுமளவுக்கு வியப்பிலாழ்ந்து விட்டார் போலும்" என்றேன். இவ்விளக்கத்தைச் செவியுற்றுக் காந்திஜி குபீரென்று சிரித்தார். — ஆஸாத்



பகிரண்ட கவுண்டாதி கவுண்ட கவுண்டனூராதிப ராமசாமிக் கவுண்டரவர்களுக்கு வயது சுமார் ஐம்பதிருக்கும்.... சில சமயங்களில் ஜமீன்தார் ஏறு குதிரை சவாரி செய்வார். இவருக்கென்று தனியாக ஒரு சின்னக் குதிரை—மட்டம் ஆட்டைக் காட்டிலும் கொஞ்சம் பெரிது — தயார் செய்து கொண்டு வருவார்கள். அதன்மேல் இவர் ஏறி உட்கார்ந்தவுடனே அதற்கு முக்கால்வாசி மூச்சு நின்று போகும். பிராணனே கொஞ்சம்தான் மிஞ்சியிருக்கும். எனினும் இவருக்குப் பயம் தெளியாது. இவருடைய பயத்தை உத்தேசித்தும் குதிரையை எப்படியாவது நகர்த்திக் கொண்டு போக வேண்டும் என்பதை உத்தேசித்தும் முன்னும் பின்னும் பக்கங்களிலுமாக ஏழெட்டு மறவர்கள் நின்று அதைத் தள்ளிக்கொண்டு போவார்கள். ஜமீன்தார் கடிவாளத்தை ஒரு கையிலும் பிராணனை மற்றொரு கையிலும் பிடித்துப் பவனி வருவார். இவ்வாறு அதைரியப்படக் காரணம் உண்டு. இவருக்குப் புத்திர பாக்கியமில்லை!...

பரப்பும் பயன்படுத்தப்படுகிறது. பேசுபவரது உருவம் ஒரு தபால் தலையைப் போல் இரண்டு மடங்கு அளவில் தெரியும். ஒவ்வொரு தொலைபேசிக் கருவியிலும் ஒருசிறு புகைப்படக் கருவியும் படம் தெரியும் ஒரு சிறு குழாயும் பொருத்தப்பட்டிருக்கும்.

இத்தகைய டெலிவிஷன் போன்கள் வந்து விட்டால் இளம் காதலர்களுக்குப் பேரின்பமாய்த் தான் இருக்கும். ஆனால் அந்த எதிர்காலத்தில் அவர்கள் ஒருவருடன் ஒருவர் எங்கே பேசிக் கொள்ளப் போகிறார்கள்? பார்த்துப் பரவசமடையும் போது பேச நா எழாதே!




கண்களில் தென்பட்டது. திருக்குற்றாலம் அருவியின் புகைப்படம் பத்திரிகையின் மேலட்டையில் வெளியாகியிருந்தது. அதனைச் சுட்டிக்காட்டி, "நீங்கள் இதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?" என்று கேட்டார். "ஆகா! என்ன அற்புதமான காட்சி! இந்த இயற்கை எழிலை நாள்பூராவும் பார்த்துப் பார்த்து மகிழலாமே!" என்றார் அவர். அவரை அனுப்பி விட்டு அடுத்தவரை அழைத்து அதே கேள்வியைப் போட்டார் அதிபர். "அருவியில் ஆனந்தமாக அரை மணிநேரம் ஸ்நானம் செய்தால் எவ்வளவு ஜோராக இருக்கும்!" என்று வியந்தார் அந்த இரண்டாவது நபர். மூன்றாவதாக வந்தவர், "அட்டைப்படம் அச்சாகியிருப்பது நன்றாயில்லை" என்றார். நான்காவது ஆசாமியோ, "அடடா! கலகல வென்று பணம் கொட்டுவது போலல்லவா தோன்றுகிறது!" என்று மெய்மறந்து கூறினார். சந்தேகமென்ன? அந்த வர்த்தகக் கம்பெனியின் மானேஜர் பதவி நான்காவது நபருக்குத்தான் கிடைத்தது!

இன்னொரு சந்தர்ப்பத்தில் சுய கௌரவம் மிக்க ஆங்கிலேயர் ஒருவர், தன் கையே தனக்குதவி என்றிருக்கும் லிங்கனிடம் அருவருப்புடன் குறிப்பிட்டார்:

"இங்கிலாந்தில் கனவானாக இருக்கும் யாரும் தங்களுடைய பூட்ஸுகளுக்குத் தாங்களே பாலிஷ் போட்டுக்கொள்ளும் வழக்கம் கிடையாது!".

"அடடா? நிஜமாகவா?" என்று வியப்புடன் வினவிய லிங்கன், "அப்படியானால் வேறு யாருடைய பூட்ஸுகளை அவர்கள் துடைத்து வைப்பார்கள்?" என்று கேட்டார்.




Stanes
PURE INDIAN
COFFEE
STANES
FRENCH



அக்கரைச் சீமையில் ஆறு மாதங்கள்



சோழ

32. தெப்பத் திருநகரம்!

ஜெர்மனியிலிருந்து ஆஸ்ட்ரியா நோக்கிப் புறப்பட்ட எங்கள் மோட்டார் வண்டி மலைப்பாதை வழியாக வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. எங்கு பார்த்தாலும் 'செஸ்ட் நட்' மரங்கள். இவற்றினூடுசென்று உயரமான மலையிலே ஏறியது மோட்டார்.

இரண்டு புறமும் அடர்த்தியான ஊசி இலைக் காடுகள்! மலைச் சிகரங்களிலே மேகங்கள் அங்கங்கே இடம் பார்த்து உட்காருவதும் நகருவதுமாக இருந்தன. நம்மூர் மூன்றும் வகுப்பு வண்டிகளிலே "மூட்டைகளுக்கு மட்டும்" என்று போட்டிருக்கிற பலகையிலே இடம் பிடித்து ஏறி நாம் தூங்குவோம் அல்லவா, அப்படியும் சில மேகங்கள் பக்குவமாகச் சில இடங்களைப் பிடித்து உறங்கிக் கொண்டிருந்தன!

'டான்யூப்' நதி உற்பத்தியாகிற இடத்தைக் கடந்து சென்றது எங்கள் மோட்டார். ஆஸ்ட்ரியாவிலுள்ள 'இன்ஸ்ப்ரக்' நகரை நோக்கிப் போய்க் கொண்டிருந்தோம்.

ஆல்ப்ஸ் மலையும் அதை ஒட்டியணைத்துக் கொண்டே ஓடுகிற 'இன்' நதியும் எழில் மிகுந்த காட்சி. இந்த நதியின் தண்ணீர் வெள்ளை வெளேரென்று இருக்கிறது. சுண்ணாம்புப் பாறையான பிரதேசம் அது; சுக்காம் பாறைத் தண்ணீர் என்கிறோமே, அப்படிப் பட்ட தண்ணீரே ஓடுகிறது இந்த நதியில்! 'பாலாறு' என்றே இதை அழைக்கலாம் என்று தோன்றியது.

மலைப் பாதை சில இடங்களில் ஆறாயிரம் அடி உயரத்துக்கு மேலே சென்றது. அத்தனை உயரத்தில் செல்லும்போதெல்லாம், அந்த இடங்கள் வெறும் கட்டாந்தரையாகக் கிடந்தன. காரணம் அத்தனை உயரத்திலே அந்தப் பனி மலையிலே மரங்கள் வளருவதில்லை.

செங்குத்தான உச்சியில் ஏறுவதும், பிறகு பள்ளத்தாக்கில் இறங்குவதுமாக 'ஸர்க்கஸ்' விளையாட்டுக்கள் செய்து கொண்டே சென்றது எங்கள் வண்டி. பாதை நெடுகிலும் அழகழகான சிற்றூர்கள். மலைகளுக்கு மேலே யெல்லாம் சிறு சிறு கிராமங்கள்! மக்கள் எவ்வித பயமுமின்றி மலைக் காடுகளுக்கு மத்தியிலே குடியிருக்கிறார்கள். விலங்குகளோ, பயங்கரமான பூச்சிகளோ இந்தப் பனிப் பிரதேசத்தில் கிடையாது. நவீன மின்சார வசதி அத்தனை உயரத்திலும் தாராளமாக வந்து உதவுகிறது!

ஒரு மலை உச்சியிலிருந்து இன்னொரு மலை உச்சிக்குப் பாலம் போட்டு அதன் மேல் ரயில் வண்டி ஓடுகிறது. கீழே அதல பாதாளத்தில் 'இன்' நதி செல்கிறது!

கிராமங்களை நெருங்கும்போது மாலை நேரத்தில் ஓர் அருமையான காட்சியைப் பார்த்தேன். 'தளதள' என்று வளர்ந்த செழிப்பான பசுக்கள் மந்தை மந்தையாக வீடு திரும்பிக் கொண்டிருந்தன. யானைகளுக்கு முகபடாம் போட்ட மாதிரி அட்டையிலே வர்ணக் காகிதங்களைக் கொண்டு பூக்கள் செய்து ஒட்டி, அந்த அட்டையைக் கொம்புகளைச் சுற்றிக் கட்டிப் பசுக்களின் நெற்றியிலே தொங்க விட்டிருந்தார்கள்! எல்லாப் பசுக்களுக்கும் கழுத்தில் தோல் பட்டை கட்டி அதில் சுநாதமான மணிகளைத் தொங்க விட்டிருந்தார்கள். ஒவ்வொரு மந்தையின் முகப்பிலும் அந்த மந்தையின் ராணி (Queen of the head) என்று அழைக்கப்படும் பசுவரசி சென்றாள்! இந்த ராணிப் பசுவின் முகபடாம் மற்ற அட்டைகளைவிடப் பெரிதாக இருப்பதோடு, வர்ணப்பூ அலங்காரமும் அதிகமாக இருந்தது! இந்த அரசப் பசுவின் கழுத்து மணி ஒரு காபிச் செம்பின் அளவு பெரிதாக இருந்தது!

கால் சராயும் கம்பளிக் கோட்டும் அணிந்த ஆயர்கள் இந்த மந்தைகளை ஓட்டிக் கொண்டு



வெனிஸ் நகரம்

சென்றார்கள். கையில் கோலும் ஊதுகுழலும் வைத்திருந்ததைப் பார்த்தபோது, சிதோஷ்ணமும் மக்களின் நடையுடையும் மாறிய போதிலும் உலகம் முழுதும் அடிப்படையான மனிதப் பண்பு ஒன்றுபோலவே இருக்கிறது என்பதை உணர்ந்தேன்.

ஆஸ்ட்ரியா தேசத்தின் இந்தச் செழிப்பான 'இன்ஸ்ப்ரக்' நகரத்திலிருந்து மறுபடியும் புறப்பட்டு 'ப்ரென்னர் கணவாய்' வழியாக இத்தாலி தேசத்துக்குச் சென்றபோது, பல இடங்களில் நம்மூர் நினைவு வந்தது! மலைப் பாதைகளில் அங்கங்கே ஏசு பெருமானின் சிலையோ ஆலதுசிலுவையோ செய்துவைத்து, அதற்கு மலர்கள் இட்டு நாட்டுப்புற மக்கள் வணக்கம் செலுத்துவதைப் பார்த்தேன்!

இத்தாலி தேசத்துக்குள் நுழைந்ததும் சில ஊர்கள் தமிழ் நாட்டுக் கிராமங்களைப் போலவே தோற்றம் தந்தன. சில சமயங்களில் சென்னை மாநிலத்துக்குத்தான் வந்து விட்டோமோ என்று கூட மயங்கினேன்! இரண்டடுக்கு மூன்றடுக்கு வீடுகளில் எல்லாம் மேலே கள்ளிக்கோட்டை ஓடுகள் மாதிரி ஓடு போட்டு வேய்ந்திருந்தார்கள். சில வீடுகளில் நாழி ஓடுகள்! வீடுகளைச் சுற்றித் தோட்டமும் வேலியும்! ஊரைச் சுற்றி வயல்களும், வரப்புக்களும், சிற்றோடைகளும்! பல மாதங்களுக்குப் பிறகு நெல் வயல்களைப் பார்த்ததும் என் உள்ளத்தில் ஒரு பெரிய உவகை உண்டாயிற்று!

இந்த உவகையோடு வெனிஸ் நகரத்தை நோக்கி விரைந்தது எங்கள் வண்டி! 'வெனிஸ்' என்றதும் எத்தனை நினைவுகள்! அன்டானியோ, பஸானியோ, போர்ஷியா, ஷைலக் என்ற ஷேக்ஸ்பியரின் கதாபாத்திரங்கள் நினைவிலே நின்றார்கள். கப்பல்கள், போர்கள், மன்னர்களின் விழாக்கள், கலைக்கூடங்கள், சிற்பக்காட்சிகள் என்று பலநூறு எண்ணங்கள் வட்டமிட்டன. காரின் வேகமும் சிந்தனையின் வேகமுமாக நொடி நேரத்தில் எங்கள் கண் முன் தெரிந்தது தெப்பத் திருநகரம்!

தெப்பத் திருநகரம்! ஆம், வெனிஸ் நகரத்தை அப்படித்தான் சொல்ல வேண்டும்.

நூற்று ஐம்பது கால்வாய்கள், நானூற்று ஐம்பது பாலங்கள். சுமார் மூன்று லட்சம் மக்கள்! வீடுகள் அனைத்தும் தண்ணீருக்குள் நிற்கின்றன!

தெருவீதி என்பது கால்வாய்தான்! அதாவது நூற்று ஐம்பது கால்வாய்களே நூற்று ஐம்பது தெருக்கள்! மூன்று லட்சம் மக்களும் இந்தத் தண்ணீர் உலகத்துக்குள்ளேதான் வாழ்கிறார்கள்! இந்தத் தண்ணீருக்குள்ளேதான் வளைய வருகிறார்கள்! ஒரு மாளிகையிலிருந்து இன்னொரு மாளிகைக்கும் ஒரு சதுக்கத்திலிருந்து இன்னொரு சதுக்கத்துக்கும் போவதுவருவது எல்லாம் தெரு என்று அழைக்கப்படுகிற கால்வாயில் படகிலே மிதந்து தான்! ஒவ்வொரு வீட்டு வாசலும் ஒரு படித்துறை! அதற்கு அருகிலே படகு! ரத வீதிகள் என்று சொல்வதுபோல இவற்றைப் 'புனல் வீதிகள்' என்றே சொல்ல வேண்டும்!

வீடுகள் என்றால் அவை தாமரை மலர்களா? தண்ணீருக்குள் இத்தனை வீடுகளும் எப்படி முளைத்து விட்டன? அதிலும் தண்ணீரின் ஆழம் எப்படி என்கிறீர்கள்? பிரயாணக் கப்பல்களும், பெரிய தோணிகளும் செல்லக் கூடிய அளவுக்கு அத்தனை ஆழமான தண்ணீர்! ஒரே ஜலப் பிரளயமாக இருக்கிற இந்தத் தண்ணீர்ப் பிரதேசத்தில், இத்தனை ஆழமான தண்ணீருக்குள், இந்த மாபெரும் மாளிகைகள் எப்படி முளைத்து எழுந்தன என்ற கேள்வி நம் மனத்தில் எழுகிறது!

மாளிகைகள் நிற்கிற இடங்களெல்லாம் ஒரு காலத்தில் சிறு சிறு மணற் திடல்களாக இருந்தனவாம். இந்த மணற் திட்டுகளில் மாபெரும் மாளிகைகளைக் கட்டி நிரப்பி நிறுத்தினார்களாம். இவற்றுக்கு ஊடே தண்ணீரை வகைப்படுத்திக் கால்வாய்களாக ஓடவிட்டார்களாம்! இப்படி ஒரு கதை சொல்லப்படுகிறது. எது எப்படியானாலும் இந்த நகர அமைப்பு ஓர் அதிசயம் என்பதில் சந்தேகமில்லை! கட்டடங்கள் அனைத்தும் உப்புத் தண்ணீருக்குள் இடுப்புவரை மூழ்கிக்கொண்டு நிற்கின்றன என்றால், இவற்றின் அஸ்திவார பலத்தை என்னென்று சொல்வது! இந்த மூன்று லட்சம் மக்களிலே எத்தனை குழந்தைகள் உண்டு, எத்தனை கிழவர்கள் உண்டு! எத்தகைய தண்ணீர் விபத்தும் இல்லாமல் இந்தக் குழந்தைகளும் முதியவர்களும் இந்தத் தண்ணீர்ப் பட்டணத்தில் எப்படித்தான் உலைய வருகிறார்களோ!

கட்டடங்களின் கம்பீரமும், அலங்காரச் சிற்பங்களும், நிலா முற்றங்களும் எழிலான காட்சி! அற்புத ஆற்றல் நிரம்பிய பண்டைச் சிற்பிகளால் நிர்மாணிக்கப்பட்ட அரச இல்லங்களும் கிறிஸ்து கோவிலும், சலவைக் கல்லாலான மாளிகைகளும் சேர்ந்து ஒரு கலை நகரமாகத் திகழ்கிறது வெனிஸ்!

வெனிஸ் நகரத்தின் சரித்திரம் மிகப் பழமையானது. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து எத்தனையோ சரித்திர மாறுதல்களைக் கண்டிருக்கிறது இந்நகரம்! இங்குள்ள பளிங்கு மாளிகைகளும், பதின்மூன்றும் நூற்றாண்டில் கட்டப்பட்ட பல கூட கோபுரங்களும் தண்ணீருக்குள் தலையுயர்த்தி நின்று சரித்திரம் பேசுகின்றன! இத்தாலியோடு ஐரோப்பிய நாடுகளுக்கு இருந்து வந்துள்ள பழைய

வியாபாரத் தொடர்புக்குரிய பல சான்றுகளை இங்கு காண்கிறோம்! 'கிழக்கத்தியக் காட்சி சாலை' என்ற இடத்திலுள்ள கலைப்படைப்புகளும், நூல்களும் ஆராய்ச்சியாளருக்கும் கலைஞர்களுக்கும் அறிவுக் கருவூலங்களாக விளங்குகின்றன!

'மார்க் முனிவர் சதுக்கம்' என்ற இடத்தில் நிற்கிற கோவிலும், மணிக்கூண்டும், மாளிகையும், காட்சிச் சாலையும், நூல் நிலையமும் அகில உலகப் புகழ் பெற்றவை! இந்த மணிக்கூண்டுக் கோபுரத்திலே ஏறுவதற்கு மின்சாரத் "தூக்குத் தூக்கி" இருக்கிறது. இதில் ஏறி, தொலை நோக்கியின் மூலம் பார்த்தபோது சுற்று வட்டாரத்திலுள்ள கடலும் அதைத் தாண்டி நின்ற ஐரோப்பிய நாடுகளும் அழகிய காட்சியாக இருந்தன!

வெனிஸ் நகரின் கடை வீதிகளும், சந்தைகளும் சித்திரக் கூடங்களும், வேடிக்கைச் சாலைகளும் அகில உலக நாடுகளின் சந்திப்புக் கூடங்களாக விளங்குகின்றன. இவற்றின் வரலாற்றையும், இங்குள்ள பழக்க வழக்கங்களையும், சிறப்பியல்புகளையும் கூறுகிற பாட்டுக்களும், நாடகங்களும், சரித்திர நூல்களும் ஏராளம்! உலக நாடுகள் பலவற்றிலிருந்தும் யாத்திரிகர்கள் வந்து தங்கி உல்லாசமாகப் பொழுது போக்குவதற்கு என்னென்ன வசதிகள் மேல் நாடுகளில் உண்டோ, அத்தனையும் ஒன்று சேர்ந்து இந்தத் தெப்பத் திருநகரத்துக்குள்ளே இருக்கின்றன. இசை, நடனம், கலை விநோதங்கள், இரவு அங்காடிகள் முதலியவற்றுக்குக் கணக்கே இல்லை!

நாங்கள் வெனிஸுக்குப் போய்ச் சேர்ந்த போது பிற்பகல் நேரம். எங்களுக்காக அமர்த்தப்பட்டிருந்த விடுதியில் நுழைந்ததும் அதன் விசாலமும் அறைகளின் அழகும் மனத்தைக் கவர்ந்தன. ஏற்கனவே நான் படித்திருந்த இரண்டொரு இத்தாலியச் சொற்கள் இந்த ஊரில் மிகவும் பயன்பட்டன! அவற்றில் ஒன்று "மொர்ஸி பியோ" என்ற வார்த்தை. இதற்கு "மிகவும் நன்றி" என்று அர்த்தம்! இந்த வார்த்தையின் அவசியத்தை விடுதிக்குள் நுழைந்த சில விநாடிகளிலேயே நன்கு உணர்ந்தேன். ஏனென்றும் அதற்கு முன் சில மாதங்களாக இங்கிலாந்திலும் ஸ்காட்லாந்திலும் தொட்டியிலே தண்ணீர் நிரப்பி அதற்குள் இறங்கித்தான் குளித்துக்கொண்டிருந்தேன். எவ்வளவு சுத்தமாகக் கழுவின போதிலும், பலர் தங்கியுள்ள விடுதியிலேயுள்ள தொட்டி என்ற எண்ணம் மனத்தில் ஒருவித அருவருப்பை உண்டாக்கி வந்தது. ஆனால் வெனிஸ் விடுதியின் அறைக்குள்ளே ஒரு குளிக்கும் கூடமும், அதில் நேர்த்தியான 'ஷவர்' அருவியும் பார்த்தபோது, 'புளகாங்கிதம்' என்கிறார்களே அப்படி ஏற்பட்டது! அந்த 'ஷவரு'க்கு ஒரு 'மொர்ஸி பியோ', அந்த விடுதியை நடத்துகிற புண்ணியவாளனுக்கு ஒரு 'மொர்ஸி பியோ', அந்தப் புண்ணிய பூமிக்கு ஒரு 'மொர்ஸி பியோ' சொன்னேன்; சொல்லிவிட்டு அப்படியே நடந்து சென்று அந்த ஷவருக்குக் கீழே நின்று தண்ணீரைத் திறந்து விட்டேன்!

நாங்கள் வெனிஸுக்குப் போயிருந்தது பௌர்ணமியை ஒட்டிய சமயம்! அன்றிரவு நிலவிலே படகுப் பிரயாணம் செல்ல வேண்டுமென்று ஏற்பாடு!

வெனிஸ் நகரத்தின் உல்லாசச் சிறு படகுகளுக்குக் 'கண்டோலாஸ்' என்று பெயர்! இதை ஓட்டுகிற படகோட்டிகளை 'காண்டோலியர்ஸ்' என்று அழைக்கிறார்கள். இவர்களுடைய கண்டோலாப் பாட்டுக்கள் மேனாட்டுச் சங்கீதத்தில் மிகவும் புகழ் பெற்றவை. இந்தப் பாட்டுக்களைப் பாடிக்கொண்டே இரவெல்லாம் அவர்கள் தண்ணீர் வீதிகளிலே மிதந்து செல்வார்கள் என்று ஏற்கனவே கேள்விப்பட்டிருந்தேன்!

என்னோடு ஒரு மேனாட்டுச் சங்கீத ரசிகர் வந்திருந்தார். அவருடைய மனைவி ஐரோப்பிய மொழிகளிலே நல்ல தேர்ச்சி பெற்றவர். எங்களோடு இந்த யாத்திரைக்குப் புறப்பட்ட இன்னொரு நண்பர் ஆஸ்ட்ரேலியா தேசத்தைச் சேர்ந்தவர். ப்ரெஞ்சு மொழியிலே நல்ல பண்டிதர் அவர்! நாங்கள் நான்கு பேரும் அன்றைய இரவு முழுதிற்குமாக ஒரு கண்டோலாப் படகை வாடகைக்கு அமர்த்திக் கொண்டோம். வாடகை என்றும் படகுக்கு மட்டுமில்லை. படகு, படகோட்டிகளான பாடகர்கள், அவர்களுடைய இசைக்கு உரிய வாத்திய கோஷ்டி எல்லாம் சேர்த்தே!

ஒளி வெள்ளத்தைப் பொழிந்து கொண்டிருந்த அமுத நிலவிலே வெனிஸ் கால்வாய்கள் ஒன்றைக்கூட விடாமல் அத்தனை புனல் வீதிகளிலும் படகிலே மிதந்து சென்று வெனிஸ் என்ற அந்தப் பூம்புனற் கனவைக் கண்டு மகிழ்ந்தோம்! படகோட்டிகள் பாடிய பாட்டுக்கள் பலவும் நமது ராகங்களை ஒட்டியிருந்தது எனக்கு வியப்பும் மகிழ்ச்சியும் தந்தது! முக்கியமாக நடம்மைதவனி, கல்யாணி, சிந்துபைரவி, மாண்ட், பெஹாக் ஆகிய ராகங்களின் சாயலிலே இனிய எளிய பாட்டுக்களைப் பாடினார்கள். இந்தக் கச்சேரிக்கு நடுவே ஒரு வழிகாட்டி புனல் வீதியிலே எழுந்து நின்ற முக்கிய வீடுகளையெல்லாம் எங்களுக்கு அறிமுகம் செய்தான்.

"இதோ இந்த மாளிகைதான் நெப்போலியனுடைய அரச இல்லம். இதுதான் மகா கலைஞன் வெரோனிசி நிர்மாணித்த கலை நிலையம். இதோ இந்த மாளிகையிலேதான் 'வாக்னர்' தங்கியிருந்து, தமது ஒப்பற்ற கலைப் படைப்புக்களை உலகுக்கு வழங்கினார். இந்தப் பெரிய கட்டடந்தான் பதினெட்டாம் நூற்றாண்டுக் கலைக் காட்சி சாலை. இதோ இங்கேதான் ஆங்கிலக் கவிஞன் ராபர்ட் ப்ரௌனிங் வாழ்ந்ததும், மடிந்ததும்! இதோ தெரிகிறதே அழகு மிக்க சுந்தர நிலையம், இதற்குத்தான் டெஸ்டெமோனா இல்லம் என்று பெயர்! அதோ தெரிகிற ஊசிக் கோபுரத்துக்கு அருகில் இருப்பதுதான் அகில உலகக் கலைக்காட்சி!"

இப்படிச் சொல்லிக்கொண்டே போனான் வழிகாட்டி, இத்தாலி மொழி கலந்த ஒரு ரசமான ஆங்கிலத்தில்! அவன் காட்டிய கட்டடங்களிலே பிரகாசமான விளக்குகளும் அறிவிப்புக்களும் வர்ண விசித்திரமாகத் திகழ்ந்தன. படகு சிறிய படகாதலால், துடுப்பின் ஒலியும், தண்ணீரின் சலசலப்பும், வானத்திலிருந்து பொழிந்துகொண்டிருந்த



நெய்வேலிக்கு அருகிலுள்ள வடலூரில் நிறுவப்பட்டுள்ள மின்சார இன்சுலேட்டர்கள் தயாரிக்கும் சேஷசாயி இண்டஸ்ட்ரீஸ் கம்பெனி சென்னை சித்ரா அண்டு கம்பெனி என்ற பிரபல பங்கு மார்க்கெட், வர்த்தக ஸ்தாபனம் ஆகியவற்றின் தலைவர் திரு எஸ். நாராயணஸ்வாமி மேற்கு ஜெர்மனி, ஸ்விட்ஸர்லாந்து முதலிய நாடுகளுக்குத் தொழில் விஸ்தரிப்புக்கான அயல்நாட்டுக் கூட்டுறவை ஏற்படுத்திக் கொள்ளவும் தொழிலை விருத்தி செய்வதற்காகவும் சென்ற ஜூன் மீ 20ந் தேதி விமான மூலம் சென்றார். அவருடன் சேஷசாயி இண்டஸ்ட்ரீஸ் டைரக்டர்களுள் ஒருவரான திரு எஸ். விசுவநாதனும் சென்றார். அவர்களுடைய நண்பர்கள் விமான நிலையத்தில் உற்சாகமுடன் வழி அனுப்பினார்கள். ஜூலை முடிவில் அவர்கள் சென்னை திரும்புவார்கள்.

நிலவும், படகோட்டிகளின் சங்கீதமும் சேர்ந்து ஏதோ ஒரு மாய உலகில் மிதந்து செல்வது போன்ற மன மயக்கை உண்டாக்கின. படகோட்டிகள் பாடிய அந்தப் பாட்டுக்கள் இத்தாலிய மொழியிலே கொச்சைப் பதங்களோடு இருந்தன. நம்முடைய நாட்டு நாடோடிப் பாட்டுக்களைப் போன்றவை அவை. என்னோடு வந்த சங்கீத ரசிகர் சில இடங்களில் பாடலிலே தாமும் கலந்து கொண்டார். இத்தாலி மொழியிலும் அதன் இசைச் சொற்களிலும் பயிற்சி பெற்றிருந்த அவருடைய மனைவி அந்தப் பாட்டுக்களில் சிலவற்றை எனக்கு ஆங்கிலத்திலே மொழிபெயர்த்துச் சொன்னார். படகோட்டிகளின் கோபதாபங்களையும், இல்லறப் பூசல்களையும், அவர்களுடைய காதல் வாழ்வையும் சித்திரிக்கிற இந்தப் பாடல்களிலே, இயற்கை வர்ணனையும் உணர்ச்சி வெளியீடும் அபாரமான கவிப் பண்போடும் இசைப் பண்போடும் அமைந்துள்ளன! மாதிரிக்கு ஒரு பாட்டு; கணவனைப் பிரிந்து தாய் வீடு சென்றுவிட்ட மனைவியை எண்ணி, ஒரு படகோட்டி பாடுவதாக அமைந்திருக்கிறது. அந்தக் கண்டோலாப் பாட்டின் ஏக தேச மொழிபெயர்ப்பைப் பாருங்கள் :

என்னைப் பிரிந்து சென்றாய் நீ
ஏனோ பிரிந்து சென்றாய் நீ !
உன்னை எண்ணி நிற்கின்றேன்
உள்ளம் உருகித் தவிக்கின்றேன் !
நின்னை எண்ணி இரவெல்லாம்
நிலவில் படகை விடுகின்றேன் !
அன்னை வீட்டில் வாழ்கின்றாய்
அங்கே என்ன சுகமுண்டு ?
பொன்னும் பொருளும் இருந்திடலாம்
புருஷன் இருப்பது வெனிஸ் அன்றோ!
மின்னும் ரத்தினம் இருந்தாலும்
மிகுந்த நகைகள் குவிந்தாலும்
அன்னை என்ன தந்தாலும்
ஆயிரம் பரிசுகள் கொடுத்தாலும்
கண்ணே உன்னைக் கைப்பிடித்த
கணவன் இருப்பது வெனிஸ் அன்றோ!

இப்படிப்பட்ட பாடல்கள் தவிர, இத்தாலி நாட்டுக் காவியங்களிலே வருகிற தலைவன் தலைவியின் காதலும் வீரமும் பற்றிய பல பாடல்களை அவர்கள் பாடினார்கள் !

அழகும், கலையும், ஆனந்தமும் நிறைந்த இந்தத் தெப்பத் திருநகரத்திலிருந்து மறுநாள் ஒரு சிறிய கப்பலிலே "லீடா" என்ற பட்டினம் சென்றோம். இதுவும் வெனிஸைச் சேர்ந்ததே. ஆனால் இந்த வட்டாரம் பெருஞ் செல்வந்தர்கள் வாழ்கிற பிரதேசம். பெரிய பெரிய மாளிகைகள், அங்காடிகள், உல்லாச இல்லங்கள், விலையுயர்ந்த பொருள்கள் குவிந்து கிடக்கும் வீதிக் கடைகள் இருந்தன. கடல் அலைகள் கிளிஞ்சல்களுக்குப் பதிலாகப் பொன்னையும் மணிகளையும் கொண்டு வந்து கரையிலே கொட்டிச் சென்றனவோ என்று சொல்லும்படியான தோற்றம்!

சென்னையில் 'பெட்டிக் கடை' உண்டல்லவா, மரக்கூண்டுகளிலே! அங்கேயும் இப்படிச் சில கடைகள் பார்த்தேன். இவற்றில் தேங்காயை உடைத்துக் கீற்றுக் கீற்றாக நறுக்கி வைத்து விற்றுக் கொண்டிருந்தார்கள்! ஒரு முழுத்தேங்காயின் கிரயத்துக்கு நம்மூரில் ஒரு தேங்காய்க் கடையையே விலைக்கு வாங்கி விடலாம்! ஆனாலும் அந்த அதிசயப் பட்டணத்துக்குள் இப்படி ஒரு வியாபாரமும் நடக்கிறதென்று, நானும் என்னோடு வந்த ஆங்கில நண்பர்கள் மூவரும் பெட்டிக் கடையில் ஒரு தேங்காய்க் கீற்றை வாங்கி ஆளுக்கொரு துண்டு வாயிலே போட்டு மென்றுகொண்டே, அந்தச் செல்வ வளமிக்க 'லீடா' பட்டினத்தின் கடற்கரைச் சாலையிலே, கம்பீரமாக நடந்தோம்.

(தொடரும்)



கணக்கு தீர்ந்தது!

தாமரை மணாளன்

‘கடவுளுக்கேற்கச் சொல்லுங்க. உங்கவிடம் பிடி கொடுத்து விட்டதாக இருநூறு ரூபாயைக் கொடுத்துவிட்டு ஐந்நூறு ரூபாயை ஏத்துக் கொள்ளப் பார்க்கிறீங்களே!' என்று ஆத்திரத்துடன் கேட்டான் முனியன்.

கோமதிநாயகமும் முறைப்புடன்தான் பதிலளித்தார். ''என்னப்பா கூச்சல் போடறே? உன் பணம் யாருக்கு வேண்டும்? நீ வாங்கிய தொகைக்கு அசலும் வட்டியும்தான் எடுத்துக் கொள்கிறேன்.''

''இருநூறுக்கு வட்டி முந்நூறு ரூபாயா?''

''அதெல்லாம் அதிகமாகப் பேசாதே! என்கிட்ட வழக்கம் அப்படித்தான். ஆறு மாதங்களுக்கும் வட்டி நூற்றைம்பது. அந்த வட்டியை நீ ஒழுங்காகக் கொடுத்திருந்தால் அதை லேவாதேவி பண்ணியிருப்பேன். அதன் மேல் எவ்வளவோ வட்டி வந்திருக்கும். உன்னிடம் இருநூறு ரூபாய் முடங்கினதால் எனக்கு முந்நூற்றுக்கு மேலேயே நஷ்டம். அதையெல்லாம் வீணாகக் கிளறாதே. உன் கணக்குத் தீர்ந்து போச்சு'' என்று கூறிவிட்டு முனியன் சற்றுமுன் கையெழுத்துப் போட்டுக் கொடுத்த ஸ்டாம்ப் பத்திரத்தைப் பெட்டிக்குள் வைத்துப் பூட்டினார் கோமதிநாயகம்.

''உங்க இஷ்டப்படி செய்யுங்க. எல்லாருக்கும் கணக்குத் தீர்க்கிறதுக்கு ஒருத்தன் இருக்கிறதை மறந்துடாதீங்க'' என்று வயிற்றெரிச்சலுடன் கத்திவிட்டு வேகமாகப் போய் விட்டான் முனியன்.

அவன் போவதை அலட்சியமாகப் பார்த்துக் கொண்டிருந்தார் கோவன்று. அவர் மனம் முனியனின் கடன் தீர்ந்த அதிசயத்தைப் பற்றிய நினைவில் திளைத்தது.

கோமதிநாயகத்துக்குச் சொந்தத் தொழில் வட்டி லேவாதேவி என்றாலும் பரம்பரை உத்தியோகம் ஒன்றும் இருந்தது. அவர்தான் கிராமப் பட்டாமணியம். அவருடைய சொந்தத் தொழிலுக்கும் பட்டாமணியம் உத்தியோகத்துக்கும் எவ்வித விசேஷத் தொடர்பும் கிடையாதுதான். ஆனால் அவருக்கும் முனியனுக்கும் இடையே விருத்த லேவாதேவி விவகாரத்தில் அவருடைய உத்தியோகம் செய்த உதவி ரொம்ப விசேஷமானது.

கோமதிநாயகத்தின் வட்டித் தொழில் ஒரு தனி ரகம். அசலைத் திருப்பிக் கொடுக்கக் கூடியவர்களுக்குக் கடன் கொடுப்பதில் அவர் அவ்வளவு சிரத்தை காட்டுவதில்லை. ஒழுங்காக, வட்டியை என்றால் வட்டியை மட்டுமே கொடுக்கக் கூடிய சக்தியுள்ள புள்ளிகளிடம் தான் — அவர் தொழில் விருத்தியடைந்திருந்தது. அரைக்கால் வட்டி; அதாவது ரூபாய்க்கு மாதத்துக்கு இரண்டணா. இந்த விதத்தில் ஆயுள் முழுதும் வட்டியை மட்டும் கொடுத்துக் கொண்டிருப்பவர்கள் தேவலாமா, 'சட்டுப் புட்டென்று' அசலைத் திருப்பிக் கொடுத்துவிடுபவர்கள் தேவலாமா?

முனியன் அவரிடம் இருநூறு ரூபாய்க்குக் கடன் பட்டிருந்தான். முனியனிடம் அந்த இருநூற்றுக்குப் பெறுமதி இல்லாதது கோமதிநாயகத்துக்குத் தெரியும். இருந்தாலும் மாதாமாதம் அவனிடமிருந்து வட்டியாக

இருபத்தைந்து ரூபாய் வசூலிக்கத்தக்க ஆகாரத்தை நம்பித்தான் அவர் கடன் கொடுத்தார்.

எங்கேயோ வேலை பார்த்துக் கொண்டிருந்த முனியனின் மகன் தகப்பனுக்கு மாதம் தவறாமல் முப்பது ரூபாய் அனுப்பி வந்தான். சொல்லி வைத்தாற்போல் ஒவ்வொரு மாதமும் முனியனுக்கு மணியார்டர் வருவதைக் கண்டதும் கோவன்னாவுக்கு ஒரு நமைச்சல். அந்தப் பணத்தை உத்தேசித்து முனியனுக்குக் கடன் கொடுத்து வைத்தார்.

ஆனால் அவர் திட்டம் ஏமாற்றத்தில் முடிந்தது. அவர் பணம் கொடுத்த மறு மாதத்திலேயே முனியனுக்கு வந்து கொண்டிருந்த மணியார்டர் நின்றுவிட்டது. விசாரித்ததில், முனியனின் மகன், தான் பார்த்து வந்த வேலையை விட்டு எங்கோ ஓடிப் போய் விட்டதாகச் செய்தி கிடைத்தது.

தவியாய்த் தவித்தார் கோமதிநாயகம். அவரது இருபத்தைந்து வருட வட்டி லேவா தேவி அனுபவத்தில் இப்படி ஒரு தடவை கூட ஏமாந்ததில்லை. வட்டி வேண்டாம், முதல் தேறினால் போதும் என்று எவ்வளவோ முயன்று பார்த்தார். முனியனிடமிருந்து பைசாவும் பெயர வழியில்லை.

இதற்கிடையில் ஆறு மாதங்கள் ஓடி விட்டன. முனியன் கடனைப்பற்றி கோமதிநாயகம் கிட்டத்தட்ட நம்பிக்கை இழந்து விட்டார். அச்சமயம்தான் 'கொடுக்கல் வாங்கல்' கோமதிநாயகத்தின் பார்வையில் 'வெறும்' ஆளாக இருந்த முனியன், கொஞ்சம் பசையுள்ள முனியனாகப் பட்டா மணியம் கோமதிநாயகத்திடம் சிக்கினான்.

அந்தக் கிராமத்தில் முனியன் பெயருக்குக் கொஞ்சம் மந்தைவெளி நிலம் இருந்தது. காலணா வருமானமில்லாத தரிசு பூமி அது. அந்த நிலம் ரோடு போடுவதற்காக அரசாங்கத்துக்குத் தேவைப்பட்டது. நிலச் சொந்தக்காரருக்கு நஷ்டஈடு கொடுத்து நிலத்தை எடுத்துக் கொள்ளும் உத்தேசம் பட்டா மணியம் கோமதிநாயகத்திடம் விசாரணைக்கு வந்திருந்தது.

அந்த வாய்ப்பைப் பயன்படுத்தித்தான் முனியனின் கடனை வசூலிக்கத் திட்டமிட்டார் கோமதிநாயகம்.

முனியனை அழைத்துச் சாமர்த்தியமாகப் பேச்சுக் கொடுத்தார். 'உன் மந்தைவெளி நிலத்தைச் சர்க்காரிலே கேட்டிருக்கிறார்கள். உன் சார்பில் நானே மனுப் போட்டு நஷ்டஈட்டுத் தொகை ஏதாச்சும் கொடுக்கிறதை வாங்கி உன் கடனுக்கு ஈடு பண்ணிக் கொள்கிறேன். அதற்காக நீ எனக்கு அதிகாரப் பத்திரம் எழுதிக் கொடுத்து விடு' என்றார்.

முனியனும் வேறு வழியில்லாமல் சம்மதித்து அதிகாரப் பத்திரத்தில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தான்.

கையெழுத்துப் போட்டுக் கொடுத்த பிறகுதான், 'அந்த நிலத்து மேல் உத்தேசமா எவ்வளவு கிடைக்குங்க?' என்று கேட்டான்.

"ஐந்நூறு ரூபாய் கிடைக்கும். கிடைக்கிறது போதும். அதை வைத்து உன் கணக்கைச் சரி செய்து விடுகிறேன்" என்றார் கோவன்னா.

அப்பொழுதுதான் முனியனுக்குப் புரிகிறது. அந்தத் தரிசு நிலத்துக்கு அவ்வளவு தொகை கிடைக்குமென்று அவன் முதலில் எதிர்பார்க்கவில்லைதான். அதற்காக?

இருநூறு ரூபாய் கடனுக்கு ஐந்நூறு ரூபாயை வாங்கிக் கொண்டு கோமதிநாயகம் 'கணக்கைச் சரி செய்து' கொள்ள முன் வந்தபோது அவனுக்கு ஆத்திரம் பொங்கியது. வயிற்றெரிச்சலுடன் கத்தினான் முனியன்.

அவனுடைய ஆத்திரமும் வயிற்றெரிச்சலும் கோமதிநாயகத்தை என்ன செய்யும்? அவர் மனத்துக்குள் சிரித்துக் கொண்டார். இன்று, நேற்றா? இரண்டு மாமாங்கமாக லேவாதேவி பண்ணுகிறவராக்கும் அவர்! இந்த முனியனைப் போல் எத்தனை பேரைப் பார்த்திருப்பார்! ஒவ்வொருத்தனிடமும் பணத்தைக் கறக்கிற விதமாகக் கறந்துவிட மாட்டாரா? கடவுளைச் சாட்சி வைத்தல்லவா அவன் சாப்பிட்டான்! கனியாகப் பணத்தை எண்ணிக் கொடுத்தாரே, அவர் பக்கம் மாத்திரம் கடவுள் இருக்க மாட்டாரா, என்ன?

விறு விறென்று காரியங்களைக் கவனித்தார் கோமதிநாயகம். முனியன் நிலத்துக்காக ஐந்நூறு ரூபாய் பெற்றுக்கொள்ள உத்தரவும் வந்து விட்டது.

அன்று நிலவரி வசூலைக் கஜானாவில் செலுத்தப்போனவர், தமக்குச் சேர வேண்டிய தொகை ஐந்நூறு ரூபாயையும் பெற்றுக் கொண்டு வீடு திரும்பினார்.

வீடு திரும்பியதும், முதல் வேலையாகத் தன் கணக்குப் புத்தகத்தைப் புரட்டி முனியன் பேரேட்டில், 'பற்று ரூபாய் இருநூற்றுக்கும் வட்டிச் செலவு ஆகிய வகைக்கும் சேர்த்து வரவு ரூபாய் ஐந்நூறு. கணக்கு சரி' என்று எழுத ஆரம்பித்தார்.

இரண்டு வார்த்தைகள்தான் எழுதியிருப்பார். அச்சமயம் வீட்டுக்குள்ளிருந்து வந்த அவர் மனைவி, "ஊரிலிருந்து வந்துவிட்டீர்களா; உங்களுக்குச் சேதி தெரியுமோ?" என்று கேட்டாள்.

"என்ன?"

"நம்ம பெரிய பண்ணை முத்துசாமி செட்டியார் மாரடைப்பாலே இறந்து போயிட்டாராம்."

"ஆ! எப்போ?" என்று கேட்டார் கோமதிநாயகம்.

"நீங்க இருச்செந்தாருக்குப் பணம் எடுக்கப் போன கொஞ்ச நேரத்திலே உயிர் போயிட்டுது. மாரடைப்பாம்."

கல்லாய்ச் சமைந்து விட்டார் கோமதிநாயகம். முனியன் பேரேட்டில் அரைகுறையாக எழுதியதோடு பேனாவைக் கீழே வைத்து விட்டார்.



"பாவம், நல்ல மனுஷர். இப்படித் திடீரென்று போய்விட்டாரே..." என்று ஆரம்பித்தாள் அந்த அம்மாள்.

அவர் மனமும் கலங்கத்தான் செய்தது. ஆனால் அதற்குக் காரணம் பெரிய பண்ணை முத்துசாமி ரெட்டியாரின் 'நல்ல உயிர்' போய்விட்டதாலல்ல; ரெட்டியார் உயிரோடு கோமதிநாயகத்தின் உயிரான ரூபாய் அறு விவகாரம் ஒன்று அசந்தர்ப்பமாகப் பின்னிக் கொண்டிருந்ததுதான். அன்று காலையில் தான் அந்தச் சம்பவம் நடந்தது.

காலையில் கோமதிநாயகம் அவசரமாகக் கஜானாவுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த போது பெரிய பண்ணை முத்துசாமி ரெட்டியார் அவர் வீட்டுக்கு நிலவரி செலுத்த வந்திருந்தார். ஊருக்கே பெரிய மனிதர் ரெட்டியார். ரெட்டியாரின் அந்தஸ்தை உத்தேசித்து, அவசரம் அவசரமாக அவருக்காகக் கிஸ்தைப் பதிந்தார் கோமதிநாயகம்.

வழக்கமாகச் செலுத்தும் நிலவரி தவிர, புதிதாக விதிக்கப்பட்டிருந்த சில வரிகளும் ரெட்டியார் செலுத்த வேண்டியதிருந்தது. அவசரத்தில் எல்லாவற்றையும் சேர்த்துப் பதிந்து ரசீதைப் போட்டுவிட்டார் கோமதிநாயகம். ரசீதை வாங்கிப் பார்த்த ரெட்டியார் தாம் வழக்கமாகச் செலுத்தும் நிலவரித் தொகை மட்டுமே கையில் வைத்திருப்பதாகத் தெரிவித்தார். ரசீதோ பதிந்தாகிவிட்டது.

"உங்க பணத்துக்கென்ன? ரசீதைக் கொண்டு போங்கள். பணத்தைப் பிறகு கொடுத்து அனுப்புங்கள்" என்று கௌரவமாகக் கூறினார் கோமதிநாயகம்.

கஜானாவுக்குப் போனவர் திரும்புமுன் ஊரிலிருந்தவர் 'போய்விட்ட'தாக மனைவி செய்தி சொல்கிறாள்! ஆயாசத்துடன் நாற்காலியில் சாய்ந்தார் கோமதிநாயகம். அற்ப சொற்பமான தொகையா? முந்நூறு ரூபாய்! சாட்சி கூட இல்லாத பற்றுவிற்றே!

முன்னால் விரித்து வைக்கப்பட்டிருந்த கணக்குப் புத்தகத்தில் அவர் பார்வை ஓடியது.

திடீரென்று அவர் மனத்தில் ஒரு கிலி. முனியனிடம் அதிகமாக வசூலித்து விட்டதால், ரெட்டியாரிடமிருந்து அவருக்கு வர வேண்டிய பணத்துக்கு மோசம் வந்து விடுமோ?...அந்த எண்ணம் தோன்றியதும் மனம் துடித்தது. மறுகணமே மனத்தைத் தேற்றிக் கொண்டார். 'சேச்சே! என்ன பேதைமை! அதற்கும் இதற்கும் என்ன? ரெட்டியார் மகனிடம் விஷயத்தைச் சொன்னால் கொடுத்துவிட மாட்டானா? அவனும் தகப்பனாரைப்போல் நல்ல பிள்ளையாச்சே...!'

ரெட்டியார் வீட்டில் துஷ்டிக் களை குறைந்ததும் ரெட்டியார் மகனைச் சந்தித்து விவரத்தைச் சொன்னார் கோமதிநாயகம்.

'அப்பாவின் கணக்குப் புத்தகத்தைப் பார்த்து விட்டுத் தருகிறேன்' என்று ரெட்டியார் மகன் சொன்னதும், அவருக்கு நிம்மதியாக இருந்தது.

இருவரும் ரெட்டியாரின் கணக்குப் புத்தகத்தைப் புரட்டிப் பார்த்தார்கள்.

அதில், 'புது இனம் வரிக்காக, பட்டா மணியம் கோமதிநாயகத்துக்குக் கொடுத்தது ரூபாய் முந்நூறு' என்று கடைசியாக ரெட்டியார் கைப்பட எழுதியிருந்தது!

இடிவிழுந்து போனார் கோமதிநாயகம். அவருக்குப் பேச நா எழவில்லை. அவரிடம் கொடுக்காத பணத்தைக் கொடுத்து விட்டதாக ரெட்டியார் எழுதியிருக்கிறார். இனி எந்த ஆதாரத்தை வைத்துக் கேட்பது?

தயங்குவித்தவாறு பெருங் குழப்பத்துடன் வீடு திரும்பினார் கோமதிநாயகம்.

ரெட்டியார் மிகவும் நல்லவர் என்பதை அவர் மனமும் ஒப்புக்கொண்டது. ஆனால் கணக்குப் புத்தகத்தில் அப்படிப் பொய்யாக எழுதப்பட்டிருந்தது ஏன்?...சிந்திக்கச் சிந்திக்க, முனியன் ஆண்டவனைச் சாட்சிக்கு அழைத்ததுதான் அவர் மனத்தில் தோன்றிக் கொண்டிருந்தது.

இப்படி ஓர் அதிசயம் நடக்குமா? முனியனிடம் அவர் அதிகப்படியாக வசூலித்ததும் முந்நூறு ரூபாய்தான்; ரெட்டியார் விவகாரத்தில் அவருக்கு ஏற்பட்ட நஷ்டமும் முந்நூறுதான்!

தம்முடைய ஐம்பது வருட வாழ்வில் முதன்முறையாக அந்தரங்க சுத்தியுடன், "ஆண்டவா! நீதான் எனக்கும் முனியனுக்குமிடையே உள்ள கணக்கை ரெட்டியாரைக் கொண்டு தீர்த்து வைத்தாயா?" என்று கடவுளிடம் கேட்டார் கோமதிநாயகம்.

அதே நேரம், 'கடவுளே, மணியக்காரர் என்னிடம் மோசம் பண்ணிய பணத்தை, ரெட்டியார் மூலம் கொடுத்து, நீதான் என் கணக்கைத் தீர்த்து வைத்தாயா?' என்று முனியனும் மனம் உருகிக் கடவுளிடம் கணக்குக் கேட்டுக் கொண்டிருந்தான்.

ரெட்டியார் இறப்பதற்குச் சற்று முன் அவருக்கும் அவனுக்குமிடையே நடந்த நிகழ்ச்சியை எண்ணி அவன் மனம் உருகியது.

அன்று அவன் தற்செயலாகப் பண்ணையார் வீட்டுப் பக்கம் போய்க் கொண்டிருந்தான். அப்பொழுது மார்பைக் கையால் அழுக்கிப் பிடித்தவாறு வாசலில் நின்று கொண்டிருந்த ரெட்டியார் அவனைச் சைகையால் வீட்டுக்குள் அழைத்தார். அவர் பின்னால் அவன் சென்றான். அப்போது வீட்டில் ஒருவருமில்லை.

ஒரு நோட்டுப் புத்தகத்தில் ஏதோ எழுதினார் ரெட்டியார். பின் முந்நூறு ரூபாயை எண்ணி முனியனிடம் கொடுத்தவாறு, 'இதை...' என்று ஏதோ சொல்ல வாயெடுத்தார். அதற்குமேல் எதுவும் சொல்ல முடியாமல் கீழே சாய்ந்து விட்டார்.

கீழே சாய்ந்த ரெட்டியாருக்கு உடனே நினைவு தப்பிவிட்டது. சிறிது நேரத்தில் உயிரும் பிரிந்து விட்டது. திடீரென்று முனியனுக்கு ஒரு பயம் ஏற்பட்டது. தன்னிடம் பணத்தைக் கொடுத்ததும் அவர் உயிர் பிரிந்ததை வெளியில் சொன்னால் மற்றவர்கள் அதை எப்படி எடுத்துக் கொள்வார்களோ? ஆகவே பண விஷயத்தைப் பற்றி அவன் மறைத்துவிட்டான்!

அது அவனை உறுத்திக் கொண்டுதான் இருந்தது. கோமதிநாயகத்தால் வஞ்சிக்கப்பட்ட அவனுக்குக் கடவுளே ரெட்டியார் மூலம் அதே தொகையைக் கொடுத்து ஈடு செய்து விட்டார் என்று நினைத்துக் கொள்வதில் அவன் மனச்சாட்சிக்குக் கொஞ்சம் ஆறுதல் ஏற்பட்டது. ஒருவேளை, அதுதான் உண்மையோ, என்னவோ?

'லிப்கோ' வெளியீடுகள்





தசா புக்திகளும் ராமாயண பாராயணமும்

*[ஸ்தோத்திர மாலையுடன்]



1	2	3	4	5	6	7	8	9
சூரிய தசை	சந்திர தசை	குஜ தசை	ராகு தசை	குரு தசை	சனி தசை	புத தசை	கேது தசை	சுக்கிர தசை

ஒவ்வொன்றிற்கான 9 புத்தகங்கள் விலை ஒவ்வொன்றும் ரூ. 2

ஒவ்வொருவரும் அவரவர் தசைக்கேற்ற ஒரு புத்தகம் வாங்கினால் போதுமானது.

ஸகல காரிய ஸித்தியும்

ஸ்ரீமத் ராமாயண பாராயணமும்

[*ஸ்தோத்திர மாலையுடன்] விலை ரூ. 3

உபன்யாஸக சக்ரவர்த்தி

சேங்காலிபுரம் பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்கள்

அன்புடனும் மகிழ்ச்சியுடனும் வழங்கிய ஆசியுரை :

"....வெகு அழகான முறையில் சிறு குழந்தைகள், ஸ்திரீகள், பெரியவர்கள் யாவரும் நித்யம் பாராயணம் செய்யும்படி வெளியிட்டுள்ளனர் ...ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரக்ஷையாக இருக்கும்..."

---


*ஸ்தோத்திர மாலை மட்டும் ரூ. 1.30 எல்லாவற்றுக்கும் தபால் கூலி வேறு

பிரதிகள் கிடைக்கும் இடங்கள்


தி லிட்டில் ஃப்ளவர் கம்பெனி (லிப்கோ), (போன்: 88538) ரங்கநாதன் தெரு, சென்னை-17; M. தாமோதரம் & கம்பெனி, அப்பா பில்டிங்ஸ், எஸ்பிளனேட், சென்னை-1; ஞான கலா நிலையம், 8, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர், சென்னை-4; ஹிக்கின்பாதம்ஸ் (பிரைவேட்) லிமிடெட், (போன்: 86558) மௌண்ட் ரோடு, சென்னை-2; ரெயில்வே புத்தக ஸ்டால்கள்; C.R. நடராஜன் & ஸன், (போன்: 3610) பெரிய கடைத் தெரு, கோயம்புத்தூர்-1; கலைக் பதிப்பகம், (போன்: 2324) 241, ராஜ வீதி, கோயம்புத்தூர்-1; P.K.A. குழந்தைவேல் நாடார், மெயின் ரோடு, திண்டுக்கல்; சிவலிங்க விலாஸ் புத்தகசாலை, (போன்: 399) ரோடு; ஸ்ரீ வெங்கடேஸ்வர புக் டிபோ, டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்; M. நடராசசுந்தரம் பிரதர்ஸ், புதுமண்டபம், மதுரை; பிரபாத் ஸ்டோர்ஸ், காலேஜ் ரோடு, நாகர்கோவில்; A.K. சந்திரய்யா செட்டியார், கோட்டை, சேலம்-1; M. ஆறுமுகம் பிள்ளை, திருநெல்வேலி ஜங்ஷன்; S. கிருஷ்ணஸ்வாமி & கம்பெனி, தெப்பக்குளம், திருச்சி-2; சைவப்பிரகாசம் பேப்பர் ஸ்டோர், 207, கிரேட் காட்டன் ரோடு, தூத்துக்குடி; K.V. பிரஸ் புக் டிபோ, (போன்: 111) லாங் பஜார் வேலூர்; மற்றும் அநேக (இலங்கை, மலேயா உட்பட) புத்தகக் கடைகள்.

* லிப்கோ நடமாடும் புத்தக "வான்"களிலும் கிடைக்கும்.

NALIN



மயிலாப்பூர் வக்கீல் திரு கே. சுப்பிரமணியம் அவர்களின் புதல்வர் திரு நரசிம்மன் செள. சத்திய பாமாவை மணம் புரிந்தார்.




குரும்பூர் கல்கி ஏஜன்ட் ஆல் பெர்ட் பெர்னாண்டஸ் அவர்களுக் கும் மேரி கிறிஸ்டி பெர்னாண்டஸுக் கும் திருமணம் சிறப்பாக நடந்தது.



புதுதில்லி திரு ஏ. ஜி. கோபாலன் அவர்களுக்கும் செளபாக்கியவதி சுகந்தாவுக்கும் விவாகம் வெகு சிறப் பாக நடைபெற்றது.



சித்தாசிரியை ஆர். எஸ். ஞானும் பாளுக்கும் திரு லக்ஷ்மணஸ்வாமிக் கும் மேட்டுப்பாளையத்தில் விவாகம் விமரிசையாக நடைபெற்றது.



எழுத்தாளர் திரு வேங்கடரமணி (வேணி) அவர்களுக்கும் செளபாக் கியவதி சாவித்திரிக்கும் திருமணம் சிறப்புடன் நடந்தேறியது.



ஆலப்புழை வக்கீல் திரு பத்ம நாபய்யர் அவர்களின் புதல்வர் திரு ஹரிஹரன் செளபாக்கியவதி மீனாக்ஷியை மணந்து கொண்டார்.



பம்பாய் திரு வி. ஆர். சுப்பிரமணி அவர்களின் புதல்வர் திரு கிருஷ்ண மூர்த்தி சௌ. பார்வதியை மணம் புரிந்துகொண்டார்.




பம்பாய் திரு ஹரிஹரன் அவர்களின் புதல்வி சௌ. லக்ஷ்மிக்கும், திரு கிருஷ்ணனுக்கும் விவாகம் வெகு விமரிசையாக நடந்தேறியது.



திரு ஜி. வி. ராமன் அவர்களின் புதல்வர் திரு சுப்பிரமணியத்துக்கும் சௌ. ஜயலக்ஷ்மிக்கும் விவாகம் வெகு விமரிசையாக நடந்தது.



தஞ்சை அட்வகேட் திரு நாராயணசுவாமி அய்யரின் புதல்வர் நடராஜனுக்கும்] சௌ. சரோஜாவுக்கும் திருமணம் நடந்தது.



கணேஷ் கம்பெனி மானேஜிங் டைரக்டர் திரு சுப்பையா அவர்களின் புதல்வர் திரு கணேஷ் பிரசாத் சௌ. சுந்தராம்பாளை மணந்தார்.



ஸ்ரீரங்கம் ஹைஸ்கூல் ஆசிரியர் திரு வெங்கட்ராமய்யரின் புதல்வர் நடராஜனுக்கும் சௌ ராஜலக்ஷ்மிக்கும் விவாகம் நடைபெற்றது.

அட்டைப்படக் கதை

வாதூலன்

அம்மா ஒட்டி

அம்மாவை ஹைதராபாத்திலிருந்து அழைத்து வரும்படி ரகுநாதனுக்கு எழுதிய கடிதம் மேஜைக் காற்றிலே படபடத்துக் கொண்டிருந்தது.

சுந்தரேசன் இரு முழங்கைகளையும் மேஜையில் ஊன்றியபடி எதிரே சுவரில் மாட்டியிருந்த காலண்டரைப் பார்த்தான். 'மூத்தண்ணா இன்றுதான் பம்பாயில் இறங்கியிருப்பான்; அடுத்த வாரம் இங்கு வரப் போகிறான். ம், அவன் வாய்க்குச் சர்க்கரை தான் போட வேண்டும்!'

"இந்த மாதிரி அம்மா ஒட்டியா இப்போ யார் இருக்காளோ அவர்கள்தான் நாளைக்குப் பெண்டாட்டி ஒட்டியா இருப்பா! அம்மாவை வைத்துக் கொள்ளப் போவதில்லை!"

கணீரென்று நேருக்கு நேராகச் சொன்ன மூத்தண்ணாவின் வார்த்தைகள் இப்போது தான் கேட்டிருந்தபோல் சுந்தரேசன் காதில் ஒலித்தன. எத்தனை அனுபவபூர்வமான சொற்கள் அவை?

சுந்தரேசனுக்கு அப்போது இருபது வயதிருக்கும். தாயுடன் எழும்பூரில் வசித்து வந்தான். அம்மாவுடனேயே இருந்து அவனுக்குப் பழக்கமாகி விட்டது. ஒரு வருஷமா இரண்டு வருஷங்களா? அப்பா காலமாகி ரகு அண்ணாவுக்கு ஹைதராபாத் மாற்றலான அன்றிலிருந்தே இந்த வாழ்க்கை அமைந்து அவன் மனத்துக்குப் பிடித்துப்போய் விட்டது.

மூத்தண்ணா அவனுக்குப் பெரியப்பா பிள்ளை. அவன் பெயரும் ரகுநாதன்தான். ஆனால் எல்லோருக்கும் மூத்த தமையனாக இருந்துவந்ததால் மூத்தண்ணா என்ற பெயரே நிலைத்து விட்டது. மூத்தண்ணாவுக்குச் சிறு வயதிலிருந்தே பெற்றோரை விட்டுத் தனியாக இருந்து பல ஊர்களைப் பார்த்து நிறைய அனுபவம். தன்னைப் போலில்லாமல் ஒரே ஊரிலேயே கிணற்றுத் தவளை மாதிரி இருக்கும் மற்றவர்களைக் கேலி செய்வான் மூத்தண்ணா என்று சுந்துவுக்குத் தெரியும்.

பின்னால் கல்லூரியில் சேர்ந்து இண்டர், பி. ஏ. போன்ற படிப்புகள் படிக்கக் கூட சுந்துவுக்கு வேறு இடம் செல்ல நேரமில்லை. சென்னையிலேயே படித்துப் பட்டமும் பெற்று விட்டான். ஆனால் உத்தியோகம்? எங்கே கிடைக்கிறதோ? ஒரு சமயம் மூத்தண்ணா சென்னை வந்திருந்தபோது அவனிடம் விசாரித்துப் பார்த்தான்.

"எங்காவது வேலை பாரேன் அண்ணா!"

மூத்தண்ணா அந்தச் சந்தர்ப்பத்தைக் கை விடுவானா? "தரேன்!" என்றான் சுருக்கமாக.

"எங்கே? கம்பெனியிலா இல்லை—"

"இரு அவசரப்படறியே! எந்த ஊரிலேன்னு கேட்கலியே! பம்பாயிலே! தனியா இருந்து ஓட்டலிலே சாப்பிடணும்! இங்கே மாதிரி அம்மா வந்து வத்தக்குழம்பும் சாதமும் சமைச்சுப் போட மாட்டா! இனிமேலும் எந்தச் சட்டை போட்டுக்கிறதுன்னு அம்மாவைக் கேட்கவும் முடியாது! நீயேதான் எல்லாம் தோய்க்க வைச்சுக்கணும்! தெரிஞ்சுதா?"

சுந்தரேசன் பதிலே சொல்லவில்லை.

"எங்கே 'தயார்'ன்னு சொல்லி விடுவாயோன்னு பார்த்தேன்! இன்னும் கொஞ்ச நாள் அம்மாவையே ஊட்டச் சொல்லு சாதத்தை! என்ன?"

இரவு தாயாரிடம் நடந்ததைச் சொன்னான். "சரியென்று சொல்லிப் பார்க்கிறதுதானேடா?" என்று அம்மா கேட்டாள்.

"நிஜமாகவே அப்படிச் செய்துவிட்டால்?" என்று சுந்தரேசன் வினவினான்.

"அட என் அசடே!" என்று சொல்லி விட்டு அம்மா வாயை மூடிக் கொண்டாள். வெறும் நாக்கினால்கூடச் சம்மதம் தெரிவிக்கச் சுந்துவுக்குத் தைரியம் கிடையாதென்பது அவளுக்குத் தெரியும். என்றாலும் பிள்ளையை விட்டுக் கொடுத்துவிட முடியுமா?

"என்னடா இப்படிக் கேலி செய்து கொண்டு? உனக்குத் தெரியாத ஆசாமியா? இங்கே மெட்ராஸிலேயே பாரேன்!" என்று பிள்ளைக்குப் பரிந்து வந்தாள் தாயார்.

"நான் எப்படிப் பார்க்கிறது, சித்தி?... ஒரு வாரம் நீயில்லாமல் இவனைத் தனியாக இருக்கச் சொல்லு. பார்ப்போம்!"

அவன் சுபாவமறிந்த அம்மா பேச்சை மாற்றி விட்டாள். கடைசியில் எப்படியோ சுந்தரேசனுக்குச் சென்னையிலேயே வேலை கிடைத்து விட்டது. மறு வருடம்



அன்று ரகுநாதனுக்குத் திருமணம் நிகழ்ந்தது. அவர்களுக்குக் குடித்தனம் வைக்க உதவி செய்ய அம்மா போவதாக ஏற்பாடாயிற்று. அப்படியே முத்தண்ணாவிடத்திலும் கொஞ்ச நாட்கள் இருந்து விட்டு வர எண்ணினாள். அவனும் எவ்வளவோ வருஷங்களாகக் கூப்பிட்டுக் கொண்டிருக்கிறான். இப்போது போனால்தான் உண்டு; இதுபோன்ற சந்தர்ப்பம் இனிமேல் எப்போது கிடைக்கப் போகிறதோ? ஆனால் சுந்து எங்கே இருப்பது?

''இவனைக் கமலம் வீட்டில் விட்டுட்டுப் போகலாமா?'' என்று அம்மா முத்தண்ணாவிடம் கேட்டாள். கமலம் அவன் நாத்தனார்.

''என்ன சித்தி, நீயும் இப்படிப் பேசறே? இவனுக்கு வயசாகல்லே? எப்பத்தான் பழகிக்கிறது?'' என்று சொல்லிவிட்டு முத்தண்ணா சுந்தரேசன் பக்கம் திரும்பினான். ''என்னடா உன்னாலே தனியா இருந்து ஓட்டல்லே சாப்பிட்டுக் கொண்டு இருக்க முடியாது?''

அவன் குரல் சுந்தரேசனுக்கு ரோஷத்தை ஏற்படுத்தியது. ''சரி'' என்றான் முதலில். ஆனால் அடுத்த விநாடியே இயல்பான சுபாவம் வெளிப்பட்டது. ''அம்மா எவ்வளவு நாட்கள் இருப்பாள்?''

''ரகுவிட்டே ரெண்டு மாசம்! எங்கிட்ட ரெண்டு மாசம். பயமாயிருந்தா லேப்பிலே கொண்டுவந்து வச்சுக்கோ! இல்லேன்னா தனியா ரயிலேறி பம்பாய்க்கு வந்து விடு!'' என்றான் முத்தண்ணா.

தகுந்த பதில் கொடுக்க முடியாத நிலையில் கண்ணீர்தான் வந்தது சுந்தரேசனுக்கு.

''நீ சும்மா இருடா! எனக்கு இருப்புக் கொள்ளுமா அங்கே? வந்துடுவேன் ஒரு மாசத்திலே'' என்று அம்மா அவனை அடக்கினாள்.

முதல் தடவையாக அப்போதுதான் ஓட்டல் சாப்பாட்டை ருசிக்க அனுபவம் கிடைத்தது சுந்தரேசனுக்கு. ஆரம்பத்தில் சில நாட்கள் 'தனி' வாழ்க்கை புதுமையாக இருந்தது. புது மோகம் மாதிரி சீக்கிரம் இந்தப் பிரமையெல்லாம் அறுந்துப் போய் விட்டது. ஒரு நாளைப் போல் தினமும் வீட்டைப் பூட்டிக் கொண்டு காத தூரம் காப்பி குடிக்கவே நடக்க வேண்டியிருக்கிறதே! சே!

மூத்த பிள்ளை ரகு குடித்தனம் செய்யும் விதரணையைப் பார்த்து விட்டு, முத்தண்ணாவிடமும் கொஞ்சதினங்கள் இருந்து விட்டு அம்மா திரும்பினாள். தனிக் குடித்தன அனுபவங்களைப் பெண் தாயிடம் விவரிக்கிற மாதிரி, சுந்தரேசன் தன் 'வாழ்க்கை'யைப் பற்றித் தெரிவித்தான்.

எல்லாவற்றையும் கேட்டு அம்மா சிரித்தாள். ''நாளைக்குக் கல்யாணம் ஆனப்புறம் நீ எப்படி இருக்கப் போகிறேங்கிறதைப் பார்த்துத் தாண்டா கண்ணை மூடணும்!''

அவன் எப்படி இருக்கப் போகிறான் என்பதற்கு முத்தண்ணா விளக்கம் தந்துவிட்டான்!

''இந்த மாதிரி அம்மா ஒட்டியா இப்போ யார் இருக்கானோ அவங்கதான் நாளைக்குப் பெண்டாட்டி ஒட்டியா இருக்கப் போறா! அம்மாவை வைத்துக் கொள்ளப் போவதில்லே! உனக்குக் கல்யாணமான பிறகு அம்மா இருக்கப் போறது ரகுவிடத்தான்'' என்றான் உறுதியாக.

''பார்ப்போமே. அப்படி ஒருநாளும் நடக்காது'' என்றான் சுந்தரேசன் விருப்புடன்.

கண்ணில் மண் தூவிவிட்டு மறையும் குறும்புக்காரச் சிறுவனைப் போல் காலம் பழைய நினைவுகளைப் பறித்துச் சென்று விட்டது. சுந்தரேசன் வளர்ந்து வாலிபனானான். வாழ்க்கையை ஒரு புது நோக்குடன் ஆராயலானான். அந்த வயதுக்குரிய ஆசைகளும், எண்ணங்களும், கனவுகளும் உதிக்கலாயின. அவன் கனவுகளுக்கு ஒரு நனவாய் எண்ணங்களுக் கெல்லாம் ஓர் உருவாய், ஆசைகளை இயக்கும் ஒரு விசையாய்க் கோமதி வந்து சேர்ந்தாள்.

மறுமாசமே முத்தண்ணாவுக்கு ஜெர்மனி போக வாய்ப்பு வந்தது. உற்பத்தி விஷயமான நுணுக்கங்களை அறிந்து வர அலுவலகமே அவனை அனுப்பியது.

''நான் போயிட்டு வரேன் சுந்து; திரும்பி வரபோது நீங்கள் ரெண்டு பேரா இருக்கக் கூடாது! கூட ஒருத்தியும் வாயிலே விரலைப் போட்டுக்கொண்டிருக்கிறதை நான் பார்க்கணும்! ஆமாம் ஒருத்திதான்'' என்றான். பிறகு, ''மறந்தே போயிட்டேனே! நீ அம்மாவை வைத்துக்கொண்டு குடித்தனம் நடத்தும் அழகையும் பார்க்கணும்!'' என்று சொல்லிச் சுந்தரேசன் முதுகில் தட்டிக் கொடுத்து விட்டு விடைபெற்றான்.

''பார்க்கத்தானே போறே!'' என்றான் சுந்தரேசன். ஆனால் அவன் மனமெல்லாம் எங்கோ இருந்தது; கோமதி கண் கவர் வனப்புடன் மனக் கண் முன் தோன்றி மயக்கிக் கொண்டிருந்தாள். புது மோகமாயிற்றே!

சுந்தரேசன் கோமதியுடன் புது வாழ்வு நடத்த ஆரம்பித்தான். அம்மாவையும் வலுக்கட்டாயமாகக் கூட இருத்திக் கொண்டான். முத்தண்ணா சொன்னதை வேடிக்கையாக நினைத்துப் பார்த்துக் கொண்டான்.

அம்மாவுக்குக் கோமதியின் பல குணங்கள் பிடிக்கவில்லை. நேரங்கழித்து எழுந்திருப்பது, சுறுசுறுப்பில்லாமல் சோர்ந்து வழிவது, மரியாதையின்றிச் சில சமயம் நடந்து கொள்வது எல்லாமே அவளுக்குப் பிடிக்கவில்லை.

ஒருநாள் புதுத் தம்பதிகள் இருவரும் வெளியே கிளம்பினர். கோமதி இரட்டைப் பின்னல் வைத்துப் பின்னி, பவுடர் அப்பிக் கொண்டு சற்று மிகைப்படவே அலங்கரித்துக் கொண்டிருந்தாள்.

''என்னடி இது? துளிக்கூட நன்றாயில்லையே!'' என்றாள் மாமியார் கோமதியிடம்.

கோமதியின் முகம் கோபத்தினால் சிவந்தது. குனிந்தவண்ணம் பூட்ஸின் நாடாவைப் போட்டுக் கொண்டிருந்த சுந்தரேசனிடம் ''பாருங்கோன்னா! ஒருநாள் ஆசையா டிரஸ் செய்து கொண்டால்; இப்படி!'' என்றாள்.

''என்னம்மா! நான்தான் அவளை இப்படி அலங்கரித்துக்கொள்ளச் சொன்னேன்! என்ன தப்பு?'' என்று அம்மாவைப் பார்த்துக் கேட்டான். அவன் முகத்திலும் எரிச்சல் பொங்கியது.

''தப்பென்னடாப்பா! இந்த மாதிரி 'டிரஸ்ஸை'க் கண்டு கரிக்கக் கொட்டுவையே அந்த நாளிலே! இப்போ பிடிக்கப் போகச் சாக்கும்!'' என்று நிதானமாகச் சொன்னாள்.

மிருதுவாக மணமுடன் இருக்கச் செய்து புத்துணர்ச்சியளிக்கிறது...



குளித்த பின்னர் 'பினகா டால்கம்' பயன்படுத்துவதால் ஒருவித இன்பமும், புத்துணர்ச்சியும் கொள்ளச் செய்து பட்டுபோன்ற மேனியை உண்டாக்கும்.

நாள் முழுதும் வியர்வை நாற்றத்தைக் கட்டுப்படுத்தவல்ல 'பினகாவின்' மென்மையான மணம் எப்பொழுதும் சூழ, சூழ்ந்து, சூழ்ந்து சுகந்தரும்.

CIBA

பினகா

டால்க் டியுடோரண்ட் சேர்ந்துள்ளது


ரெக்ஸ் அருந்தி ...
குளுமையுடன் இருங்கள்

"ஆயிரம் சொல்லியிருப்பேன்! அப்போ தெல்லாம்! இப்போ செய்யற காரியத்துக்கு அப்போ சொன்னதை வைச்சுக் காரணம் கற்பிக்க முடியுமா? ஏன் நீ கூடத்தான் இந்த மாதிரி தொண தொணக்கமாட்டே முன்பு!"

அம்மாவுக்கு, கோமதி முன்னிலையில் இவ்வாறு கத்து சொன்னது என்னவோ போலாகியது. 'போகட்டும்! சிறிசு! மேலும் இது சகஜம்தானே!' என்று தேற்றிக்கொண்டாள்.

நாட்கள் செல்லச் செல்லச் சுந்தரேசன் தன் பலவீனத்தைத் தானே உணர்ந்து கொண்டான். முத்தண்ணா சொன்னதுபோல், அந்தக் காலத்தில் அவ்வளவு ஒட்டுதலாக அம்மாவிடம் இருந்து வந்ததால்தான் இன்று மனைவியை எதிர்த்து ஒரு வார்த்தை கூடச் சொல்ல முடியவில்லையோ என்றும் தோன்றியது. ஒவ்வொரு தடவை தகராறு நேரும் போதும் 'அடுத்த முறை நிச்சயம் கோமதியைக் கோபித்துக் கொள்ள வேண்டும்! ரொம்ப அதிகப்பட்டுப் போகிறது அவளுக்கு!' என்று நினைத்துக்கொள்வான்; ஆனால் நடைமுறையில் வரும்போது அவள் பார்வைக்கு முன், சற்று வாடும் முகத் தோற்றத்தின் முன் எல்லா சங்கல்பமும் வலுவிழந்தது.

வரவர எந்தச் சின்ன விஷயத்திலும் கோமதிக்கும் அம்மாவுக்கும் ஒத்து வராமற் போயிற்று. தினமும் வீட்டுக்கு வந்தால் யாராவது ஒருவர் முனகுவார்கள். என்ன செய்வதென்று புரியாமல் தர்ம சங்கடத்தில் திண்டாடுவான் சுந்தரேசன். இடையிடையே அம்மாவை ராதுவண்ணாவிடத்தில் விட்டு வைத்தால் தேவலை என்று தோன்றும்; ஆனால் அப்படித் தோன்றும்போது முத்தண்ணாவின் வார்த்தைகள் காதில் ஒலிக்கும். 'சே! ஒரு நாளும் அம்மாவை அனுப்ப மாட்டேன்' என்று சொல்லிக் கொள்வான்.

ஆனால் தானாகவே அம்மா சென்றுவிடச் சந்தர்ப்பம் ஏற்பட்டு விட்டது.

அன்று வீட்டுக்கு வரும்போது மிகவும் அலுப்புடனும் சோர்வுடனும் வந்தான் சுந்தரேசன். தலை வலித்துக் கொண்டிருந்தது.

"கோமு இல்லை?" என்று கேட்டான்.

"இல்லையே" என்றாள் தாயார் மெதுவாக.

"எங்கே தொலைந்தாள்?"

"என்னவோ புதுப் படமாமே, ரெஜியுடன் கூடப் போனாள்!"

"அதான் நான் ஞாயிற்றுக்கிழமை அழைத்துக்கொண்டு போறேனென்று சொல்லியிருந்தேனே! அதற்குள் அவசரமா?" என்று சுந்தரேசன் கோபத்துடன் கத்தினான்.

அம்மா மௌனமாக டிபன் காப்பியைக் கொண்டு வைத்தாள். "எனக்கு ஒன்றுமே வேண்டியதில்லை!" என்று எரிந்துவிழுந்தான்.

கோமதி வீடு திரும்ப ஏழு மணிக்கு மேலாகி விட்டது. வந்ததும் அவளிடம் "ஏன் இத்தனை நாழி?" என்றான். குரலில் இலேசான கோபம் கலந்திருந்தது. ஆனால் அதைக் கலப்பதற்குள் சுந்தரேசன் பட்ட பாடு!

கோமதியின் இமையோரத்தில் கண்ணீர்த் துளி தெரிந்தது. "இதோ பாருங்கள், நீங்கள் கேட்டீர்களே என்று நைலான் 'சாக்ஸ்'க்கு அலைந்து வாங்கி யிருக்கிறேன்!" என்ற அவள் கையின் வழவழப்பையும் 'சாக்ஸின்'



சென்னை என்பீல்ட் மோட்டார் சைக்கிள் உற்பத்தி ஸ்தாபனத்தின் தலைவரும் மற்றும் அதைச் சார்ந்த பல இதர கம்பெனிகளின் டைரக்டருமான திரு கே. ஆர். சுந்தரமய்யர் தமது தொழிலை மேலும் அபிவிருத்தி படையச் செய்வதற்கும் முக்கியமாக மோட்டார் சைக்கிள் ஸ்கூட்டர் முதலியவை உற்பத்தியில் நுணுக்கங்களைக் கண்டறியவும் சென்ற ஜூன் 15ம் தேதி விமான மூலம் மேல் நாடுகளுக்குப் பயணமானார். இங்கிலாந்து, பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, இத்தாலி முதலிய நாடுகளுக்கு விஜயம் செய்திருக்கிறார். திரு சுந்தரமய்யரின் குடும்பத்தினரும் ஏராளமான நண்பர்களும் விமான நிலையத்துக்கு வந்து அவரை அன்புடன் வழி அனுப்பினர்.

வழவழப்பையும் ஒருங்கே ஸ்பரிசித்தன சுந்தரேசனின் விரல்கள்.

திடீரென்று என்ன தோன்றியதோ, திரும்பி அம்மாவைப் பார்த்தான். அவள் விழிகள் எதிரேயிருக்கும் ராமர் படத்தில் நிலைத்திருந்தன. ஆனால் அவள் தன்னை மனத்துக்குள்ளேயே எள்ளி நகையாடிக் கொண்டிருக்கிறாளென்று அவனுக்குத் தோன்றியது. ஒருநாள் எங்கோ கதா காலட்சேபத்துக்குச் சென்று நேரம் கழித்து வந்ததற்காக அம்மாவை மிகவும் கோபித்துக் கொண்டு சாப்பிடாமல் படுத்து விட்டது நினைவுக்கு வந்தது: அந்த நினைவை இப்போதைய நிகழ்ச்சியுடன் ஒப்பிட்டுக் கேலி செய்தன, முத்தண்ணாவின் வார்த்தைகள். 'பெண்டாட்டி ஒட்டியாக இருக்கப் போகிறாய்!' என்று.

எல்லாமாகச் சேர்ந்து பலவீனத்தை ஆத்திரமாக மாற்றியது. "தள்ளிப் போ! நீயும் உன் 'சாக்ஷாம்!' சொன்னபடி கேட்காம சினிமாவுக்குப் போய், இப்ப கொஞ்ச வேறு வந்துவிட்டாயோ? போ உள்ளே!" என்று பளீரென்று கன்னத்தில் அறைந்தான்.

சற்றும் எதிர்பாராத கோமதி திகைத்துப் பின் வாங்கினாள். "என்னடா இது!" என்று ஓடிவந்த அம்மா கோமதியின் கையைப் பிடித்து உள்ளே அழைத்துச் சென்றாள்.

சுந்தரேசன் மௌனமாக அம்மாவைப் பார்த்தான். 'இப்போ உனக்குத் திருப்தி தானே!' என்று அந்தப் பார்வை கேட்டது.

இதற்குப் பின் சில நாட்கள் பேச்சு மூச்சில்லாமல் உயிரற்றுக் கழிந்தன. பிள்ளையின் போக்கு அம்மாவுக்குப் புரிந்தது. அவளிடம் கோபித்துக் கொண்டால்தான் தனக்குச் சந்தோஷம் என்று எண்ணுகிறான் போலிருக்கிறதே அசட்டுப் பிள்ளை! ஆனால் இப்படியே எவ்வளவு நாட்கள் நீடிக்க விடுவது...?

இதற்கு ஒரே வழி ஹைதராபாத்துக்குச் செல்வதுதான் என்று கருதி அவன் அம்மா புறப்பட்டு விட்டாள். அப்போது ரகுநாதனிடம் சென்றவள்தான். எப்போதாவது நடுவில் சுந்துவைப் பார்க்க வேண்டுமென்று தோன்றும்போது வருவாள். அப்படி இவள் வந்து இருக்கும் சில நாட்கள் விடுமுறையைப் போல இன்பமாகக் கழியும். ஒருவருக்கொருவர் தூரத்துப் பச்சையாகவும் கண்ணுக்குக் குளிர்ச்சியாகவும் இருந்தனர்.

சுந்தரேசனுக்கு இப்போது கோமதியுடன் மனம் விட்டுப் பழக வாய்ப்பும் கிடைத்தது. தன் தவறுகளைத் தானே உணர்ந்து திருத்திக் கொள்ளக் கோமதியும் பழகிக் கொண்டாள். இருவருமே ஒருவர் மனத்தை ஒருவர் புரிந்து கொண்டு வாழ்க்கை நடத்தினர். எல்லாம் இன்பமாக, குதூகலமாகக் காட்சியளித்தது.. இன்னும் சில மாதங்களில் புதிய ஜீவனொன்றும் உதிக்கப் போகிறது.

ஆனால் சலனமற்ற குளத்தில் கல்லைவிட்டெறிந்தாற் போல் திடீரென்று அந்தச் செய்தி வந்தது. முத்தண்ணா ஜெர்மனியிலிருந்து திரும்பி விட்டான்; அடுத்த வாரம் இங்கு வரப் போகிறான்!

மறந்து போன நினைவுகள் இப்போது பூதாகாரமாகத் தோன்றிச் சுந்தரேசனை அரித்தன. போகுமுன் அண்ணா சொன்ன வார்த்தைகள்? 'நீ அம்மாவை வைத்துக் கொண்டு குடும்பம் நடத்தும் அழகைப் பார்க்கணும்!'

அம்மா இல்லாமல்தானே அவன் இப்போது அழகாகக் குடித்தனம் நடத்துகிறான்! முன்பொரு தடவை 'ரகுவிடந்தான் இருக்கப் போகிறாள்' என்றதற்கு 'ஒரு நாளும் நடக்காது!' என்று சுந்தரேசன் வீறாப்பாகப் பேசினானே! இன்றைக்கு முத்தண்ணா சொன்னபடிதான் நடக்கிறது! தன் வீறாப்பு கோமதியை மணந்ததும் மறைந்து போய் விட்டது.

ஹூஹூம்! அதற்கு இடம் கொடுக்கவே கூடாது! பின் வேறு வழி? யோசித்து மனம் ஒரு முடிவுக்கு வந்தது. முடிவின் வடிவம்

தலை அலங்கரிப்புக்குத் தகுந்த ஹேர் ஆயில்



தினந்தோறும் தலையில் எண்ணெய் தடவி நன்றாகத் தேய்த்து வருவதால் இந்திய மக்கள் அடர்ந்த, கருமையான, வளர்ச்சியுள்ள கேசத்தைப் பெற்றிருக்கின்றனர்.

மயிர்க்கால்களுக்கு எண்ணெய் போஷாக்கு அளிப்பதால் கேசம் அடர்த்தியாக வளருகிறது. ஆகையால்தான் புருஷர்கள் தங்கள் மயிர்க்கால்களின் இயற்கையான எண்ணெயோடு கலந்து ஊட்டமளிக்கக்கூடிய நல்லதோர் எண்ணெயைத் தேர்ந்தெடுக்கின்றனர்.


டாடாவின் ஹேர் ஆயில்கள் உங்கள் கேசத்திற்குப் போஷாக்கு அளித்து அடர்த்தியாகவும் ஆரோக்கியத்துடனும் வளரச் செய்கின்றன. கேசத்திற்குப் பளபளப்பு அளிப்பதோடு நன்றாகப் படியும்படி இருக்கச் செய்கின்றன.

டாடாவின் கோகோனட் மற்றும் கேஸ்டர் ஹேர் ஆயில்கள் நறுமணம் கமழும் மூன்று சைஸ்களில் கிடைக்கின்றன.

டாடாவின் ஹேர் ஆயில்கள்



THOY-11-TAM



"...சந்தேகமே இல்லை இது
பின்னி துணிதான்!..."
"நான் இதுபோன்ற சிறந்த டிரில்லை பார்த்ததே இல்லை. என் வேலைக்கு தோற்றம்தான் பிரதானம். அதை அளிக்கக் கூடியது பின்னியின் டிரில் ஒன்றுதான்! அதிக நாள் உழைக்க வல்லதும், நேர்த்தியுடன் விளங்குவதுமான இதைத் தவிர வேறு ஒன்றையும் என்னால் வாங்க இயலாது.
மற்றொன்று, பின்னி துணிகள் பணத்திற்கேற்ற சிறந்த மதிப்பு உடையது! அதனால்தான் பின்னி துணிகளிடத்தில் எனக்கு உயிர்!"
பின்னியின்
டிரில்
• வெள்ளை
• காக்கி
• மற்றும் பல நிறங்களில் கிடைக்கும்
QUALITY FABRICS
BINNY & CO. (MADRAS) LTD.
உங்களுக்குத் தேவையான பின்னி துணிகளை இந்த அடையாளம் காணப்படும் அனுமதி பெற்ற கடைகளிலிருந்து கண்ட்ரோல் விலைக்கே வாங்கவும்.
பக்கிங்ஹாம் & கர்னடிக் கம்பெனி லிமிடெட்
உரிமையாளர்: பின்னி & கம்பெனி (மதராஸ்) லிமிடெட்
JWT/BC/D/1303a



அமெரிக்காவிலுள்ள இந்திய வர்த்தக ஒத்துழைப்பு மிஷனின் ஆதரவில், தேசிய உற்பத்தித் திறன் கவுன்ஸில் சார்பில் அமெரிக்காவிலும், இதர நாடுகளிலும் சுற்றுப் பிரயாணம் செய்வதற்காகத் தூது கோஷ்டியொன்று புறப்பட்டது. இக்கோஷ்டியில் கட்டிடக் கலை வல்லுநர் திரு எஸ். பி. சிட்னிஸ் அவர்களும் சென்றிருக்கிறார். அவர் அந் நாடுகளிலுள்ள உலோக இணைப்பு முறைகளையெல்லாம் ஆராய்ந்து வருவார்.

தான் மேஜையில் படபடக்கும் கடிதம்... இரவு சாப்பிடும் பொழுது "அண்ணாவுக்குக் கடிதம் எழுதி விட்டீர்களா?" என்று வினவினாள்.

"எழுதியாச்சு! ஏன்?"

"ஒன்றுமில்லே! அம்மா இப்போ எதற்கு வரணும்? முத்தண்ணாவுக்காகவா!" என்று கோமதி சிரித்தாள். "பள்ளியிலே 'இன்ஸ்பெக்ஷன்' பார்க்க வரபோது ஆசிரியர்கள் பையன்களைத் தயார் பண்ணி வைப்பார்கள்; இடத்தைச் சுத்தப்படுத்தி வைப்பார்கள்! அது மாதிரி நீங்கள் முத்தண்ணாவுக்காக—"

கோமதி முடிக்கவில்லை. பாதிச் சாப்பாட்டில் எழுந்து விட்டான் சுந்தரேசன். அவள் கேலி உடம்பில் ஊசியேற்றியது போல் அவன் மனத்தில் போய்த் தாக்கியது.

கோமதி சொன்னது விளையாட்டுக்குத்தான் என்றாலும் எந்த வுண்மை! என்றோ முத்தண்ணாவிடம் சொன்ன வார்த்தைக்காக, அவனைத் திருப்திப்படுத்துவதற்காக அம்மாவை இப்போது அழைக்கிறானே யொழிய, உண்மையில் ஆசையாகவா கூப்பிடுகிறான் அம்மாவை? இல்லை. அப்படியானால் முத்தண்ணாவுக்காகவா வாழ்கிறான் அவன்? அதுவுமில்லை. தனக்காக, தன் மனைவிக்காக, நாளைக்குப் பிறக்கப்போகும் குழந்தைக்காகத் தன் குடும்பத்தின் காப்புக்காக வாழ்கிறான். இந்த நிலையில் இப்படிக் கடிதம் எழுதியது எத்தனை பைத்தியக்காரத்தனம்!

அன்று அந்த வயதில் அம்மாவின் ஆதரவும் அரவணைப்பும் மட்டுமே தேவையாயிருந்தன.

ஒரே திசையில் பாயும் நதி போல, அவன் அன்பும் அம்மாவிடமே வெளிப்பட்டது. அன்றுகிடைத்த அதே நிறைவையும் அமைதியான வாழ்க்கையையும் இப்போது கோமதி தருகிறாள். அதனால் அம்மாவிடமுள்ள அன்பு குறைந்து விட்டதென்று அர்த்தமா என்ன? இல்லவே இல்லை. முன்பு வெகுளித்தனமாக வெளிப்பட்ட பற்றும் பாசமும் இப்போது அடக்க நிலையை எட்டியிருக்கின்றன; மற்றப்படி மாறாமல்தான்இருக்கிறது அன்பெல்லாம். முத்தண்ணாவுக்காக இப்போது அம்மாவை அழைத்து வந்து, வெளிப்படக்காண்பித்துக் கொள்வானேன்? வேண்டாம்!

சுந்தரேசன் தீர்மானித்து விட்டான்.

மறுநாள் காலையில் "அம்மா வரப் போகிறார்களோ இல்லையோ?" என்றாள் கோமதி.

"இப்போது இல்லே!"

"கடிதத்தைப் போடப் போவதில்லையா?"

"போடத்தானே போறேன்! ஆனால் அம்மா இப்போ வரமாட்டாள்! உனக்கு வேணுங்கிறபோது வரவழைச்சுடறேன்!" என்று சிரித்தபடியே கோமதியைக் கூர்ந்து பார்த்தான் சுந்தரேசன்.

"நீங்க சொல்றதே புரியவில்லே!"

"இதோ" என்று அவன் முகத்தை நிமிர்த்தினான். "இப்போ புரியும் பார்" என்று சொல்லி அவள் முன்னால் அந்தக் கடிதத்தைக் கிழித்தான் சுந்தரேசன். தன் வாழ்நாளிலேயே செய்த புத்திசாலித்தனமான காரியம் அதுதான் என்று அவனுக்குத் தோன்றியது.

அகில இந்திய ரேடியோவில் பணியாற்றிப் பிரபலமடைந்துள்ள திரு விக்டர் பரஞ்சோதி சமீபத்தில் லண்டன் மாநகரில் "ராயல் ஓவர்ஸீஸ் லீக்" இன் சார்பில் தாம் தயாரித்துள்ள "பரஞ்சோதி கோஷ்டியினரின்" இன்னிசையை ஓவர்ஸீஸ் மாளிகையில் ரசிகர்களுக்கு வழங்கினார். இந்த நிகழ்ச்சியை பி. பி. ஸி. வெளிநாட்டு ஒலி பரப்புப் பகுதியினர் ஒலிப்பதிவு செய்திருக்கின்றனர்.





சிரிப்பதா?

சிலர் சிரித்தார் சிலர் அழுதார்
நான் சிரித்துக் கொண்டே அழுகின்றேன்

பரீட்சையில் ஜெயித்தவர் சிரித்தார் - அந்தர்
பல்டியடித்தவர் அழுதார் - நான்
ஜெயித்ததை எண்ணிச் சிரிக்கின்றேன் - ஒரு
சீட்டுக்கு ஏங்கி அழுகின்றேன் (சிலர்)

ராத்திரி பகலாய் உழைத்தேன் - முதல்
ராங்கையும் பள்ளியில் பிடித்தேன்
பிடித்ததை எண்ணிக் குதிக்கின்றேன் - கத
வடைத்ததை எண்ணிப் பதைக்கின்றேன் (சிலர்)

கையினில் ஜாதகச் சீட்டு - பொங்கும்
கருத்தினில் சஞ்சலப் பாட்டு
வெய்யிலில் நாயாய்த் திரிந்திடுறேன் - மனம்
வேம்பாய்க் கசந்து திரும்பிடுறேன் (சிலர்)

தரிசனந் தருவா ரென்று - தினந்
தலைவரின் வாசலில் நின்று
துருவனைப் போலே தவஞ் செய்தேன் - அவர்
தோன்றி என் நெஞ்சை வதஞ் செய்தார் (சிலர்)

கணக்கினில் நூற்றுக்கு நூறு - தமிழ்க்
கருணர்கள் தந்தது நூறு - மொத்த
எண்ணிக்கை நானூற்றுப் பதினாறு - பார்த்துப்
புண்ணியவான் கையை விரித்தாரு (சிலர்)

கற்றதை கெஜம் முழம் போட்டு - பாழுங்
காலேஜுப் படிப்புக்குச் சீட்டு - தருங்
காலம் மலையேறிப் போயாச்சாம் - வேறு
கன்ஸிடரேஷன்கள் வந்தாச்சாம் (சிலர்)

சாதிக்கும் மதத்துக்கும் சீட்டாம் - தம்பி
சமர்த்துக்கும் முயற்சிக்கும் வேட்டாம் - தாம்
தந்தையின் பதவிக்கு வெய்ட்டுகளாம் - பெருந்
தலைகளின் உறவுக்குச் சலுகைகளாம் (சிலர்)



அழுவதா?

சுரபி



ஆட்சிக்கு ஆணி வேராம் - அவர்
அத்தை பாட்டிக் கண்டை வீடாம் - கலைக்
காட்சிக்குப் பணமள்ளிக் கொடுத்தவராம் - எதிர்க்
கட்சிக்குப் படுகுழி பறித்தவராம் (சிலர்)

சாதியோ என்னை விடாது - தந்தை
தாயை மாற்ற முடியாது
சம்திங் கொடுக்கவோ கிடையாது - இந்தச்
சண்டாளன் போகிற கதி யேது? (சிலர்)

இஞ்சினீர் கேட்டேன் காலி - உயிர்
எடுக்கும் படிப்புக்கும் வேலி
மிஞ்சிய சரக்கை வடிகட்டி - பலே
விம்புடன் கொடுத்தார் கடைசட்டி (சிலர்)

எல்லாரும் ஓர் குல மென்பார் - இங்கு
எல்லாரும் ஓர் நிறை என்பார் - நம்மைக்
கொல்லாமல் கொல்லும் போட்டியிலே - பணக்
கோலால் அளந்து கணக்கிடுவார் (சிலர்)

ஆண்டவன் கோயிலைத் திறந்தார் - கத
வடைத்தவர் மனத்தையுந் திறந்தார் - கலை
தாண்டவமாடுங் கோயிலின் வாயிலில்
தன்னல மாடுகள் படுக்க விட்டார் (சிலர்)

நேர்மை நியாயம் சரம் - கல்
நெஞ்சில் என்றது ஊறும் - கலைப்
போர்வைக ளொன்று உருமாறும் - என்
போன்றவர் கனவென்று நிறைவேறும் (சிலர்)

விருந்து கிடைத்தவர் சிரிப்பார் - அதற்கு
விதியில்லாதவர் அழுவார்
திருவழுதிருந்தும் வெறும் வயிறுனேன்
சிரித்துக்கொண்டே நான் அழுகின்றேன். [(சிலர்)





திருமூலர் தவமொழி

ராஜாஜி - சோமு

13

உலக சுகங்களை நாடிச் செல்லும் மனத்தை அப்படிச் செல்லாமல் இழுத்துப் பிடித்துத் தெய்வத்தை நோக்கிச் செலுத்தினால் எத்தகைய நலன்கள் விளையும் என்பதை எடுத்தோதும் திருமூலர், உடம்பின் நிலையற்ற தன்மையை எடுத்துக்காட்டிக் காற்றுள்ளபோதே தூற்றிக் கொண்டு நெல்லைச் சேகரித்துக்கொள்வதுபோல இந்த மானிட உடம்பு இருக்கும் பொழுதே ஆன்ம நலத்தைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்கிறார். இதற்காக முதலில், உடம்பு நிலையற்று மறைந்துபோகும் தன்மையுடையது என்பதை நம் இதயத்தில் நன்றாகப் பதியும்படி பாடுகிறார்.

ஊரெலாம் கூடி
ஒலிக்க அழுதிட்டு

[ஒலிக்க அழுதிட்டு—கதறி அழுது.]

உடலில் இருந்த உயிர் பிரிந்து சென்றதும் என்ன நேர்கிறது? ஊரார்கள் எல்லாரும் வந்து கூடுகிறார்கள். கதறியழுகிறார்கள்.

ஊரெலாம் கூடி
ஒலிக்க அழுதிட்டு,
பேரினை நீக்கிப்
பிணம்என்று பேரிட்டு—

உயிர் இருக்கும் வரைதான் ஒருவனைப் பெயர் சொல்லிக் கூப்பிடுகிறார்கள். உயிர் நீங்கியபிறகு அவனுக்குப் பிணம் என்ற அஃறிணைப் பெயர்தான்!

பேரினை நீக்கிப்
பிணம்என்று பேரிட்டு,
சூரையங் காட்டிடைக்
கொண்டுபோய்ச் சுட்டிட்டு—

[சூரையங்காடு—சூரை முதலியன படர்ந்துள்ள சுடுகாடு.]

சுடுகாட்டுக்கு எடுத்துச் சென்று உடலைச் சுடுகிறார்கள். அப்படிச் சுட்டெரித்து விட்டு அதற்குமேல் என்ன செய்கிறார்கள்?

நீரினில் மூழ்கி
நினைப்பொழிந் தார்களே

[நீரினில் மூழ்கி—தண்ணீரில் மூழ்கிக் குளித்து. நினைப்பு ஒழிந்தார்களே—இறந்தவனுடைய நினைப்பையே ஒழித்து விடு திரும்புகிறார்கள்.]

உறவினர்கள் தண்ணீரில் மூழ்கி அந்தத் தண்ணீரைக் கொண்டு இறந்தவனைப் பற்றிய நினைவையே கழுவி விடுகிறார்கள் என்று மனத்தில் உண்மை பதியும்படி பாடுகிறார்.

'அழுதிட்டு', 'பிணமென்று பேரிட்டு,' 'சுட்டிட்டு,' என்ற அடுக்குகள் ஒன்றன்மேல் ஒன்றாக வந்து, 'ஒழிந்தார்களே' என்று உருக்கத்தோடு பாட்டு முடிகிறது!

ஊரெலாம் கூடி
ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப்
பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக்
கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி
நினைப்பொழிந் தார்களே!

உடலின் சோகக் கதையை மேலும் சித்திரிக்கிறார் திருமூலர்.

சமைக்கச் சொன்னார், மனைவியை. சமையல் ஆயிற்று. சாதத்தைச் சாப்பிட்டார். அழகியான மனைவியோடு சற்று உறவாடினார். இடது பக்கம் மெதுவாக வலிக்கிறதே என்றார். கீழே படுத்தார். அவ்வளவுதான். எழுந்திருக்கவில்லை.

அடப்பண்ணி வைத்தார்
அடிசிலே உண்டார்

[அடுதல்—சமைத்தல், அடப்பண்ணி வைத்தார்—சமைக்கும்படி சொன்னார். அடிசில் — சமைத்த உணவை.]

அடப்பண்ணி வைத்தார்
அடிசிலே உண்டார்
மடக்கொடி யாரொடு
மந்தணம் கொண்டார்

['மடக்கொடி' என்பது மனைவியைக் குறிக்கும் செய்யுள் முறைப் பிரயோகம். மடக்கொடியாரொடு—மனைவியோடு. மந்தணம்— தனிமை; அந்தப்புரத்தைக் குறிக்கும் ஆகுபெயர். மந்தணம் கொண்டார் — தனித்து உறவாடினார்.]

இடப்பக்க மேஇறை
நொந்ததே என்றார்.

[இடப்பக்கமே—இடது பக்கத்திலே இறை—சற்று, கொஞ்சம். நொந்ததே—வலிக்கிறதே.]

இடப்பக்க மேஇறை
நொந்ததே என்றார்
கிடக்கப் படுத்தார்
கிடந்துஒழிந் தாரே

[கிடக்கப் படுத்தார்—நீட்டிப் படுத்தார். கிடந்து ஒழிந்தாரே—படுத்தவர் மறுபடியும் எழுந்திருக்காமல் இறந்தொழிந்தார்.]

மனித வாழ்வின் நிலையாமையை உணர்த்தும் பாட்டு நாடக வேகத்துடன் மனத்தைக் கவரும் பாணியில் அமைந்திருக்கிறது. சொற்கள் நீண்டு போவதை அடக்க, ஒவ்வொரு வினைச்சத்துக்கும் வினைமுற்றின் உருவத்தைத் தந்து பாடியிருப்பதைக் கவனிக்க வேண்டும். இதுவே பாட்டுக்கு நாடக வேகம் தருகிற இலக்கிய முறை.

வாழ்க்கையின் நிலையாமையை மறந்து விஷய சுகங்களிலே ஈடுபட்டுக் காலத்தை வீணாக்குகிற பேதை மக்களுக்குக் கண்ணைத் திறந்து காட்டுகிறார் தவயோகி.

அடப்பண்ணி வைத்தார்,
அடிசிலே உண்டார்,
மடக்கொடி யாரொடு
மந்தணம் கொண்டார்,
இடப்பக்க மேஇறை
நொந்ததே என்றார்,
கிடக்கப் படுத்தார்,
கிடந்தொழிந் தாரே!


நரிவேட்டை ⑬
கதை: ஜெயந்தி
சித்திரம்: வினு
யாருடைய ரகசியச் சூழ்ச்சிகளை அம்பலப்படுத்தும் முயற்சியில் குமார் ஈடுபட்டிருக்கிறானோ அந்த ஸாஷாவுக்கு எதிரில் ஷியாமாவை வஞ்சகமாக அழைத்து வந்து நிறுத்துகிறார்கள் இரட்டையர்கள்.
பெண்ணே! ரொம்பத் துடுக்குத்தனமாகப் பேசுகிறாய். இது உனக்கு நல்லதல்ல!
என் விருப்பத்துக்கு விரோதமாக என்னைக் கூட்டி வரச் செய்திருப்பது உங்களுக்கு நல்லதல்ல!
ஷியாமாவின் துணிவைக் கண்டு திகைக்கும் ஸாஷா பின்னர் சிரிப்பை வரவழைத்துக் கொள்கிறான்.
பலே! பொல்லாத பெண்ணாக இருக்கிறாயே! இப்படி வா, சொல்கிறேன்!
ஜன்னல் வழியே சுட்டிக் காட்டுகிறான் ஸாஷா.
இந்தப் பங்களாவுக்குள் நீ சுதந்திரமாக நடமாடலாம். ஆனால் வெளியே அடியெடுத்து வைக்க முற்பட்டால் இந்த நாய்களை உன் மீது ஏவி விட நேரும்!



எதற்கு என்னை இப்படிச் சிறை வைக்கிறீர்கள் என்றாவது நான் தெரிந்து கொள்ளலாமோ?
குமார் எனக்கு ரொம்பவும் தொந்தரவு கொடுக்கிறான். அது எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை.
இதற்குரிய தண்டனையை என்றாவது அடையாமல் போகமாட்டீர்கள்!
தண்டனை!... என்னைச் சுலபமாகக் கைது செய்து விடலாம், குமார். ஆனால்...
...அதற்கு முன் அவன் உன்னை இழக்கத் தயாராக இருக்க வேண்டும்.
அடப் பாவி!
அன்றிரவு ஹோட்டல் டைனிங்ஹாலில் சோகமே உருவாக உட்கார்ந்திருக்கிறாள் லக்ஷ்மி.
சாப்பிட வாம்மா! எல்லாம் ஆறிப் போகிறது.
எனக்கு ஒரு இழவும் வேண்டாம். நீ வீட்டுக்குப் போகலாம்.
ஏன் இப்படி எரிந்துவிழுகிறாய்?... எட்டாம் நம்பர் அறைக்காரனும் இன்னும் சாப்பிடவில்லை.
யார், ரவியா? அவர் இனி வரவே மாட்டார். அடிபட்ட நாய் திரும்பாது!
வரமாட்டாரா? அவர் பெட்டி இங்கே இருக்கிறதே?
தூக்கி எறி சனியனை எங்கேயாவது!
சட்டென்று ஒரு யோசனை தோன்றுகிறது லக்ஷ்மிக்கு.
குமாரின் அன்புக்கு ஏங்கும் லக்ஷ்மி வைராக்கியத்துடன் செயல்படுகிறாள்.
லக்ஷ்மி! இரு! அந்தப் பெட்டியைக் கொண்டா, இங்கே, சீக்கிரம்!


பெட்டி பூட்டி இருக்கிறது. பேனாக் கத்தியால் பூட்டை நெம்பித் திறக்கிறார்கள். உள்ளே....
மர்மமாய் இருக்கிறதே! அவ்வளவும் போட்டோ பிலிம் சுருள்கள்!
இதென்ன? துணி மணி ஒன்றும் காணோம்?
லக்ஷ்மி! நான் உடனே குமாரைப் பார்க்க வேண்டும். நீ வீட்டுக்குப் போ.
இரவு நேரம். நான் துணைக்கு வருகிறேன்.
ஸில்வானியா ஹோட்டலில் குமாரின் அறைக்குள் நுழைந்து பெட்டியை வெறுப்புடன் கீழே போடுகிறாள் வின்மி. பிலிம் சுருள்கள் சிதறுகின்றன.
ரவியுடைய பெட்டி இது.
இப்போதாவது உங்களுக்கு என் மீதுள்ள சந்தேகம் தீரும் என்று நம்புகிறேன். போய் வருகிறேன்.
வின்மி! நில்!
குமார் மீதுள்ள ஆதங்கத்தில் நிற்காமல் சென்று விடுகிறாள் வின்மி. இன்ஸ்பெக்டருக்குப் போன் செய்கிறான் குமார்.
ஹலோ!... சட்டர்ஜி பேசுகிறேன்!
இன்ஸ்பெக்டர் ஸார், நான் தான் குமார், முக்கிய விஷயம். உடனே வருகிறீர்களா?
ஹோட்டல் டெஸ்மோவுக்கு வின்மியும் லக்ஷ்மியும் திரும்புகையில் அவர்களுக்காகக் காத்திருக்கிறான் ரவி.
அறையில் என் பெட்டியைக் காணோமே? எங்கே அது? மரியாதையாகக் கொடுத்து விடு! இல்லாவிட்டால்...
தொடரும்

இருபத்தொன்றுவது அகில இந்திய காதி, கைத்தறி, சுதேசி கைத்தொழில் பொருட்காட்சி, சேலம் 1961

ஆரம்பக் கல்வி நிதிக்காக சேலம் நகராட்சி மன்றத்தால் நடத்தப்பெறுவது

6 - 8 -1961 முதல் 10 - 9 -1961 முடிய 36 நாட்கள்

சேலம் நகரில் மாரியம்மன் திருவிழாவின்போது சேலம் நகர சபையாரால் சிறப்பான முறையில் பொருட்காட்சி நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அப்போது சேலம் நகரைச் சுற்றியுள்ள தாலூக்காக்களிலிருந்து ஏராளமான மக்கள் கூடுகிறார்கள்.

நகரின் மையமாய் அமைந்துள்ள பரந்த போஸ் மைதானத்தில் அமைந்துள்ள வ. உ. சி. நகரில் பொருட்காட்சி அமைக்கப்படுகிறது. பஸ் நிலையம், தபால் நிலையம், பாங்குகள், சினிமா கொட்டகைகள், உணவு விடுதிகள் முதலியன அருகில் உள்ளன. பொருட்காட்சிக் கலை அரங்கில் தலைசிறந்த கலைஞர்களைக் கொண்டு நாள்தோறும் இசை நடன, நாடக நிகழ்ச்சிகள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கடைகள் மற்றும் தேவையான விபரங்களுக்கு பொருட்காட்சி காரியதரிசிக்கு உடனே எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

நகராட்சி அலுவலகம்
சேலம், 15-6-1961

ஆணையரின் பொறுப்பாளரும் செயலாளரும்

மணிபல்லவம்

11. வழித்துணை வாய்த்தது!

சினங்கொண்டு பாய்ந்த நகைவேழம்பரை எதிர்த்துத் தடுத்த போது 'சிங்க நோக்கு' என்று இலக்கிய ஆசிரியர்கள் சிறப்பித்துச் சொல்லியிருக்கும் நேராய் நிமிர்ந்த கம்பீரப் பார்வையை நீலநாக மறவரிடம் கண்டான் ஓவியன் மணிமார்பன். பக்கங்களிலும், பின்புறமும், விலகவோ, திரும்பவோ செய்யாமல் எதிரே மட்டும் பார்க்கும் அந்தப் பார்வையே வாளாகவும், வேலாகவும் கூர்மை பெற்றுச் சென்று நகைவேழம்பரைத் தாக்குவதையும் அவன் கவனித்தான்.

தான் ஓர் ஓவியன் என்ற முறையில் விலங்குகளின் அரசனாகிய சிங்கத்தின் உருவத்தைப் பன்முறை தன் கையால் வரைந்திருக்கிறான் அவன். கம்பீரமான அரசர்களின் உருவங்களையும், வீரர்களின் உருவங்களையும்கூட வரைந்திருக்கிறான். ஆனால் குறுவாளை ஓங்கிக் கொண்டு சீறி வந்த நகைவேழம்பரை இடது கையால் அலட்சியமாகத் தடுத்து நிறுத்திய நீலநாக மறவரின் கம்பீரத்தை ஓவியத்தில் வரைவதற்கு முடியுமா என்று மலைத்தான் அவன். கொடுமைக்காரராகவும், கொலைகாரராகவும் தோன்றித் தன்னைப் பயமுறுத்தி நடுங்கச் செய்த அதே ஒற்றைக் கண் மனிதர், கையை அசைக்கவும் முடியாமல் நீலநாக மறவரின் இரும்புப் பிடியில் திணறுவதை இப்போது அவன் கண்டான். அழுத்திப் பிடிக்கப் பெற்ற எதிரியின் பிடியில் நரம்புகள் புடைத்து இரத்தம் குழம்பும் தமது கை வலுவிழந்து உணர்வு குன்றுவதை நகைவேழம்பர் புரிந்து கொண்டாலும் ஆற்றலின்றி இருந்தார். அவர் கை நடுங்கியது. விரல்கள் பிடி நழுவி விரிந்தன. குறுவாள் கீழே நழுவி விழுந்து ஈரமண்ணில் குத்திக் கொண்டு நின்றது.

நீலநாகமறவர் பிடியை விட்டு முறித்த வாழை மட்டையை உதறுவது போல் அந்தக் கையை உதறினார். விடுபட்டதும் குபீரென்று கீழே குனிந்து மீண்டும் வாளை எடுக்க முயன்ற நகைவேழம்பரை அவர் அப்படிச் செய்ய முயல்வார் என்றே எதிர்பார்த்தவர் போல் எச்சரிக்கையாயிருந்த நீலநாகமறவர் பின்னுக்குப் பிடித்துத் தள்ளினார். மலை மோதியது போன்ற அந்தத் தள்ளுதலால் தடுமாறி மண்ணில் மல்லாந்து சாய்ந்தார் நகைவேழம்பர். இதற்குள் படைக்கலச் சாலையின் கதவைத் திறந்து கொண்டு அங்கிருந்த இளைஞர்களெல்லாம் கூட்டமாக வெளிவரவே, நகைவேழம்பரோடு கூட வந்திருந்த யவன ஊழியர்கள் மெல்லப் பின் வாங்கினார்கள். நகைவேழம்பரும் மண்ணைத் தட்டி விட்டவாறு எழுந்து நின்றார். அளவற்ற கோபத்தால் அவருடைய உதடு துடித்தது.

"இப்படிச் செய்ததற்கு உங்களைப் பழி வாங்காமல் விடப் போவதில்லை. நான் யாரென்று உங்களுக்குத் தெரியாது! சமயம் வாய்க்கும்போது தெரியச் செய்



நா. பார்த்தசாரதி

கிறேன்" என்று நீலநாகமறவரை நோக்கி இரைந்து கூக்குரலிடுவதுபோல் முழங்கினார் நகைவேழம்பர். அதைக் கேட்டு நீலநாகர் நகைத்தார்.

"பேசிப் பயனில்லை. முடியுமானால் செய்துகொள். கீழே விழுந்துவிட்ட இந்த வாளையும், உன் தைரியத்தையும் சேர்த்து எடுத்துக்கொண்டு மரியாதையாக வந்த வழியே போவதுதான் இப்போது நீ செய்ய வேண்டிய செயல்!"

குறுவாளை எடுத்துக் கொண்டு திரும்புவதற்கு முன்னால், 'நீதானே இவ்வளவுக்கும் காரணம். என்றாவது மறுபடியும் என்னிடம் அகப்பட்டால் உன்னை நிர்மூலமாக்கி விடுவேன்' என்று குறிப்பிடுவது போலக் கடுமையாக ஓவியனைப் பார்த்து விட்டுச் சென்றார் நகைவேழம்பர். நீலநாகரின் முதுகுக்குப் பின்னால் மறைந்துகொண்டு அந்தப் பார்வையின் தாக்குதலிலிருந்து தப்பினான் ஓவியன்.

"ஒற்றைக் கண்ணிலேயே இப்படி நஞ்சைக் கக்குகிறானே : இந்தக் கொடியவனுக்கு இரண்டு கண்களும் இருந்துவிட்டால் எதிரே தென்படுகிற நல்லவர்களையெல்லாம் இவன் பார்வையே சுட்டெரித்துவிடும்" என்றார் நீலநாகமறவர்.

ஓவியன் நாத்தழுதழுக்க அவருக்கு நன்றி சொல்லலானான் :-

"என் உயிரையும், என் நம்பிக்கைகளையும் அழியாமல் காப்பாற்றி எனக்கு அடைக்கலம் அளித்த கருணை வள்ளல் நீங்கள். உங்களுக்கு எப்படி நன்றி சொல்லுவதென்று தெரியவில்லை."

"தெரியாத காரியத்தைச் செய்யாமல் விட்டுவிடுவதே நல்லது தம்பீ! நீ நன்றி சொல்ல வேண்டுமென்பதற்காக நான் உனக்கு உதவி செய்யவில்லை. உள்ளே போகலாம் வா. இன்றிரவு இங்கேயே என்னுடன் தங்கிவிட்டுப் போ. உன்னைப் பார்த்தால் மிகவும் பயந்த சுபாவமுள்ளவனாகத் தெரிகிறாய். இந்த நேரத்துக்குமேல் இத்தனை எதிரிகளையும் வேறு வைத்துக்கொண்டு நீ வெளியே போவது நல்லதல்ல" என்று கூறி இளங்குமரனின் ஓவியத்தோடு, மணிமார்பனையும் அழைத்துக்கொண்டு படைக்கலச் சாலைக்குள் சென்றார் நீலநாகமறவர்.

"இந்த ஓவியம் இளங்குமரனே நேரில் நின்று கொண்டிருப்பது போல் நன்றாக வரையப்பட்டிருக்கிறது தம்பீ. இதை வரைந்தவர் யாராயிருந்தாலும் பாராட்டுக்குரியவர்" என்று அந்த ஓவியத்தைப் பார்த்துக் கொண்டே கூறினார் நீலநாகமறவர். உடனே ஓவியன் மணிமார்பன், தான் அந்த ஓவியத்தை வரைய நேர்ந்த நிகழ்ச்சியையும், தானும் இளங்குமரனும் சந்தித்த பின் ஒவ்வொன்றாக நிகழ்ந்த சம்பவங்களையும் நீலநாக மறவருக்கு விவரித்துச் சொன்னான்.

அவர் எல்லாவற்றையும் கேட்டுவிட்டு நெட்டுயிர்த்தார். 'ஓகோ! இவ்வளவு நடந்திருக்கிறதா? இளங்குமரன் இவற்றில் ஒன்றையுமே என்னிடம் கூறவில்லையே?"

"இப்போது அவர் எங்கே போயிருக்கிறார் ஐயா?"

"எந்த இடத்துக்குப் போனால் அவன் நிம்மதியாகவும், அமைதியாகவும் இருக்க முடியுமோ, அங்கே அவனை அனுப்பியிருக்கிறேன். நீ பாண்டிய நாட்டைச் சேர்ந்தவனாக இருந்தாலும் திருநாங்கூர் அடிகளைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பாய் என்று நினைக்கிறேன். ஞான நூல்களைக் கற்பதற்காக அவருடைய பூம்பொழிலில் அவரோடு போய்த் தங்கியிருக்கிறான் இளங்குமரன்."

"எங்கள் மதுரை மாநகரத்து வெள்ளியம்பல மன்றத்தில் நாங்கூர் அடிகளின் சமயவாதச் சொற்பொழிவுகளை நானும் கேட்டிருக்கிறேன். அற்புதமான மனிதர் அவர்....."

"அவரிடமிருக்கும் அற்புதங்களைக் கற்றுக்கொண்டு வருவதற்குத்தான் இளங்குமரன் போயிருக்கிறான்."

"இப்போதுள்ள சூழ்நிலையில் அவர் இங்கே காவிரிப்பூம் பட்டினத்தில் இருப்பதைக் காட்டிலும் திருநாங்கூரில் இருப்பதே நல்லது ஐயா! என்ன காரணத்துக்காகவோ பட்டினப்பாக்கத்துப் பெருநிதிச் செல்வரும், இப்போது இங்கே துரத்திக்கொண்டு வந்தாரே இந்த ஒற்றைக்கண் மனிதரும் அவரை அழித்து ஒழித்து விடுவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். இதோ இப்போது நீங்கள் வைத்துக் கொண்டிருக்கிறீர்களே, இந்த ஓவியத்தில் அவருடைய கழுத்தின் வலது பக்கத்துச் சரிவில் வரையப்பட்டிருக்கிற கறுப்பு மச்சத்தை முதலில் நான் வரையவில்லை. படத்துக்கு அது அழகாயிராது என்றுதான் நான் வரையாமல் இருந்தேன். ஆனால் இந்த ஒற்றைக் கண்ணரும் இவரை வைத்துக் காப்பாற்றுகிற பெருநிதிச் செல்வரும் என்னைப் பயமுறுத்தி வற்புறுத்தி அவருடைய கழுத்தில் இந்த மச்சத்தை வரையச் செய்தார்கள். அவரைப் பற்றிப் பேசிக்கொள்ளும்போதெல்லாம் அந்த இருவருடைய கண்களிலும் ஏதோ பழி வாங்கத் துடிப்பதுபோல் வெறி தோன்றுவதை நான் சில நேரங்களில் கவனித்திருக்கிறேன். அதனால் தான் எனக்கு அச்சமாயிருக்கிறது. அப்பப்பா! இப்போது நினைத்தாலும் எனக்குக் குடல் நடுங்குகிறது, ஐயா! அந்த

மாளிகையில் இந்த ஒற்றைக் கண் மனிதருடைய பாதுகாப்பில் நான் இருந்த ஒவ்வொரு கணமும் சாகாமலே செத்துப் போய்க் கொண்டிருந்தேன். நல்ல வேளையாக அந்தப் பெண்ணரசி எனக்கு விடுதலையளித்துப் பரிசும் கொடுத்து வெளியே அனுப்பினாள். அவ்வளவு பெருஞ்செல்வத்தைச் சேர்த்து வைத்துக் கொண்டிருப்பவர்கள் ஏன் தான் இப்படிச் சூழ்ச்சிக்காரர்களாகவும், கொடியவர்களாகவும் இருக்கிறார்களோ?''

''உலகத்தில் இரண்டுவகையான செல்வர்கள் இருக்கிறார்கள் என்பதை நீ அறிந்திருக்க நியாயமில்லை மணிமார்பா! தங்கள் செல்வச் செழுமைக்காக மட்டும் பெருமையும், செருக்கும் கொள்கிற செல்வர்கள் ஒரு வகை. தங்கள் செழுமைக்காக மட்டுமின்றிப் பிறருடைய அறிவுக்கும், குறைவுக்கும் சேர்த்துப் பெருமைப்பட விரும்புகிற செல்வர்கள் ஒருவகை. இந்த இரண்டாவது வகைச் செல்வர்களுக்குத் தாங்கள் வளர்ந்து வாழ்வதில் அடைகிற மனத்திருப்தியோடு பிறர் தளர்ந்து சீரழிவதைக் கண்டு கிடைக்கிற மிருகத்தனமான மகிழ்ச்சியும் அடையக் கிடைத்துக் கொண்டே இருக்க வேண்டும். இல்லாவிட்டால் மனம் நிறையாது.''

''ஆனால் இந்தக் கொடுமைக்காரர்களுக்கிடையிலே ஓர் அன்பு மலரும் மலர்ந்து மணந்து கொண்டிருக்கிறது ஐயா! அந்தப் பெண் சுரமஞ்சரி உங்கள் மாணவர் இளங்குமரன்மேல் உயிரையே வைத்திருக்கிறாள். உங்கள் மாணவரோ அந்தப் பெண்ணின் பெயரை எடுத்தாலே சீறி விழுகிறார். இளங்குமரனின் இந்த ஓவியத்தை வரைந்ததற்காக அவள் எனக்குக் கொடுத்த பரிசைப் பார்த்தாலே அவளுக்கு அவர் மேலிருக்கும் அன்பை உங்களால் புரிந்துகொள்ள முடியும். இதோ, பாருங்கள்...'' என்று சொல்லிவிட்டுத் தன் மடியிலிருந்த மணி மாலையை எடுத்து நீலநாகமறவருக்கு முன் நீட்டினான் ஓவியன்.

நீலநாகர் அதைக் கையில் வாங்கவில்லை. அவ்வளவாக விரும்பிப் பார்க்கவுமில்லை. ஏதோ சிறுபிள்ளை விளையாட்டைப் பார்த்துச் சிரிப்பதுபோல் மெல்லச் சிரித்தார்.

''தம்பி! நீ உன்னுடைய கலைத் திறனைக் காட்டி அதற்குச் சன்மானம் பெற்று வாழ்கிறவன். உனக்கு எவ்வளவு அதிகப் பெறுமானமுள்ள பொருளைப் பரிசு கொடுக்கிறார்களோ, அதையே அளவுகோலாகக்கொண்டு மனிதர்களின் பண்பை அளந்து பார்க்கிறாய். நானாகவோ, இளங்குமரனாகவோ இருந்தால் இத்தகைய பரிசுப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளவே இணங்கியிருக்க மாட்டோம். நம்முடைய திறமையைப் பாராட்டுகிறவர்கள் அப்படிப் பாராட்டுவதற்குத் தகுதி உடையவர்கள்தாமா என்று சிந்திப்போம். பிறரிடமிருந்து பரிசு என்று எதையாவது வாங்கிக் கொண்டால் அதுகாரணமாகவே அவர்களுடைய சிறிய தகுதிகளும் நமக்கு மிகப் பெரியவையாகத் தோன்றத் தொடங்குகின்றன. நடுநிலை பிறழ்ந்து, நமக்குக் கொடுத்துக் கொண்டே இருப்பவர்களுக்கு வசப்பட்டு விடுகிறது நம் மனம். ஏதாவது ஒரு பொருளைப் பெற்றுக் கொண்டு அதற்காக மனத்தைத் தோற்கக் கொடுப்பதைக் காட்டிலும் எதையுமே பெற்றுக் கொள்ளாமல் மனத்தை உறுதிப்படுத்திக் கொள்வது நல்லதென்று நாங்கள் நினைக்கிறோம்.''

அவருடைய சித்தாந்தம் மணிமார்பனுக்குப் புரியவில்லை. ஆனால் இளங்குமரனிடமிருந்த பிடிவாதமும், முரட்டுக் குணமும் யாரிடமிருந்து அவனுக்கு வந்திருக்க வேண்டுமென்று இப்போது புரிந்தது. இதே மணிமாலையை இளங்குமரன் ஒருமுறை வாங்கிக் கொள்ள மறுத்ததாகச் சுரமஞ்சரி கூறியதும் நினைவு வந்தது.

''எனக்குப் பரிசு கொடுத்திருக்கிறாள் என்பதற்காக அந்தப் பெண் சுரமஞ்சரியை நான் புகழவில்லை ஐயா! இளங்குமரன்மேல் அவளுக்கு இருக்கும் அன்பு மெய்யானது. இல்லையானால் தன் தந்தை இளங்குமரனைத் தேடிப் பிடித்துச் சிறை செய்ய எண்ணியிருப்பதை என்னிடம் சொல்லி, 'அவரை முன்னெச்சரிக்கையோடு இருக்கச் செய்யுங்கள்' என்று என்னை இங்கே அனுப்புவாளா?'' என்று மணிமார்பன் மறுத்துக் கூறியதைக் கேட்ட பின்பும் அவர் அதை ஒப்புக் கொண்டதாகத் தெரியவில்லை.

''அப்படி இவர்கள் வந்து சிறைப் பிடித்துக் கொண்டு போகிற அளவு வாயில் விரலை வைத்தாலும் கடிக்கத் தெரியாத பருவத்துப் பிள்ளையல்ல அவன். ஒருவேளை அவனை இவர்கள் சிறை செய்தாலும் நாங்களெல்லாம் தாங்கிக் கொண்டிருக்க மாட்டோம்.''

அவருடைய இந்த உறுதிமொழிகளைக் கேட்டபின் இளங்குமரனைப்பற்றிய பயத்தையும், கவலையையும் விட்டுவிட்டுத் தான் எப்படி ஊர் போய்ச் சேருவதென்ற சிந்தனையில் ஆழ்ந்தான் மணிமார்பன். மறுநாள் பொழுது விடிகிற வரை அந்த நகரத்தில் தங்கியிருந்து மணிமாலையை விற்றுப் பொற்கழஞ்சுகளாகக் கொண்டு போக வேண்டும்

என்ற எண்ணம் இப்போது அவனுக்கு இல்லை. போது விடிவதற்குள் பாண்டிய நாட்டுப் பயணத்தை இருளோடு இருளாகத் தொடங்கிவிட வேண்டுமென்று எண்ணினான் அவன்.

தன்னையும் தன்னிடமிருக்கும் மணி மாலையையும் சேர்த்துக் கைப்பற்றி விடுவதற்குக் கறுவிக் கொண்டு வந்த நகைவேழம்பர் நீலநாக மறவரிடம் தோற்றுப் போய்த் திரும்பியதோடு அடங்கிப் போய் இருந்து விடுவாரென்று அவனால் நினைக்க முடியவில்லை. இடை வழியில் எங்காவது மீண்டும் தன்னை அவர் மறித்துக்கொண்டு விட்டால் என்ன செய்வதென்ற பயம் அவனை வாட்டியது. சில நாட்களுக்கு முன்பு வரையிலாவது பூம்புகாரின் இந்திர விழாவுக்கு மதுரையிலிருந்து வந்தவர்கள் கூட்டம் கூட்டமாகத் திரும்பி யிருப்பார்கள். அவர்களோடு சேர்ந்து போயிருக்கலாம். இப்போது எங்கே போய், யாரை வழித்துணை தேடுவது? இங்கிருந்து பாண்டிய நாட்டின் தலை நகரம் நினைத்தவுடன் போய்ச் சேர முடிந்த இடமுமில்லை. திருவரங்கத்தில் ஒரு நாள், உறையூரில் ஒரு நாள், தென்னவன் சிறுமலைத் தொடர்களைக் கடந்து திருமால்குன்றத்தில் ஒரு நாள் என்று இடையிடையே ஓய்வுக்காகத் தங்கிப் பல நாட்கள் பயணம் செய்து வையையின் வடகரையைக் காண வேண்டும்.

பயணத்தைப் பற்றிய தன் கவலையை நீலநாகமறவரிடம் வெளி யிட்டான் அவன். "கவலைப்படாதே, மணிமார்பா! இந்த நகரில் இலவந்திகைச் சோலையின் மதிலுக்குப் பக்கத்தில் சைன சமயத்தைச் சேர்ந்த இல்லறத் துறவிகளாகிய சாவகர்கள் தங்கும் மடம் ஒன்று இருக்கிறது. அந்த மடத்திலிருந்து பாண்டி நாட்டுக்குப் போகிறவர்களின் கூட்டம் அநேகமாக நாள்தோறும் புறப்படும். விடிவதற்கு முன்னாலேயே உன்னை அங்கே கொண்டு போய் விட்டு விடுகிறேன். அவர்களோடு புறப்பட்டுச் செல்வது உனக்குப் பாதுகாப்பாக இருக்கும்" என்றார் நீலநாக மறவர்.

அடுத்த நாள் போது விடிவதற்கு நாலைந்து நாழிகைகள் இருக்கும்போதே தமது வழக்கம் போல் துயில் நீங்கி எழுந்து விட்ட அவர் மணிமார்பனையும் எழுப்பி அழைத்துக் கொண்டு இலவந்திகைச் சோலைக்குப் புறப்பட்டார். அங்கே மணிமார்பன் மதுரை செல்வதற்கு வழித்துணை கிடைத்தது.

"மறந்து விடாதே, தம்பி! எல்லையற்ற வாழ்க்கைக் கடலில் சந்தர்ப்ப அலைகள் மறுபடி உன்னையும், என்னையும், இளங்குமரனையும் சந்திக்கச் செய்யலாம். சந்திக்கச் செய்யாமலும் போகலாம். நீ வரைந்த இளங்குமரனின் ஓவியம் என்னிடம் இருப்பதால் அதைக் காணும் போதெல்லாம் உன் நினைவு வரும்" என்று விடைகொடுத்தார் நீலநாகர். ஓவியன் கண்ணில் நீர் நெகிழ அந்தக் கம்பீர மனிதரை நோக்கிக் கைகூப்பினான். பின்பு வழித் துணையாக வாய்த்த சாவகர்களோடு யாத்திரையைத் தொடங்கினான் மணிமார்பன்.

12. காவிரியில் கலந்த கண்ணீர்

மணிமார்பனைச் சாவகர்களின் வழித் துணையோடு மதுரைக்கு அனுப்பி விட்டு நீலநாகமறவர் புறவீதி வழியே ஆலமுற்றத்துப் படைக்கலச் சாலைக்குத் திரும்பிக் கொண்டிருந்தார். விடிவதற்கு இன்னும் நிறைய நேரம் இருந்தது. பகல் நேரத்தில் இது போன்ற பொது வீதிகளில் பலரும் காண நடந்து சென்று பழக்கமில்லை அவருக்கு. அவருடைய வாழ்க்கை முறை தனிப்பட்டதாக இருந்ததனால் விலகியும், ஒதுங்கியும் வாழ வேண்டியிருந்தது. அவர் வீரர்களுக்குள் துறவியாகவும், துறவிகளுக்குள் வீரராகவும் விளங்கி வந்தார்.

எனவே ஒளி பரவி விடிவதற்குள் பொது வீதிகளைக் கடந்து சென்று ஆலமுற்றத்தை அடைந்துவிட வேண்டும் என்று வேகமாக நடந்து கொண்டிருந்தார் அவர். வானத்தில் விடிவெள்ளி மின்னிக் கொண்டிருந்தது. விடிகாலையின் அமைதியில் தூரத்தே கடற்கரையின் அலையோசை ஒடுங்கியும், ஒடுங்காமலும், விட்டு விட்டு ஒலித்துக் கொண்டிருந்தது. தென்னை ஓலைகளும், மரங்களின் இலைகளும் வைகறைக் காற்றில் சலசலவென ஒலியெழுப்பி இலக்கணத்தில் அடங்காததொரு அழகிய மொழியைப் பேசிக் கொண்டிருந்தன. கொண்டைச் சேவல்கள் வீடுகளின் மாடங்களில் ஏறி விடிவதற்கு முன்பே விடிவுக் குரல் எழுப்பிக் கொண்டிருந்தன. வாயிற்புறங்களைத் தெளிப்பதற்காக வந்திருந்த பெண்களின் கைவளைகளும், காற்சிலம்புகளும், 'இந்த வீதியின் இருளில் கண்ணுக்குப் புலப்படாமல் கந்தர்வப் பெண்கள் நடனமாடிக் கொண்டிருக்கிறார்களோ' என்று நினைப்பதற்கேற்ற விதத்தில் கொஞ்சிக் கொஞ்சி ஒலித்தன.

தம்முடைய வழக்கப்படி ஒவ்வொரு நாளும் இந்த நேரத்தில் ஆலமுற்றத்துக் கடலருகில் நடந்து கொண்டிருப்பார் நீலநாகமறவர். கடற்கரையில் அலையோசையும் கரையோரத்துத் தாழம் புதரில் மடல்கள் காற்றில் மோதி அடித்துக் கொள்வதும் தவிர வேறு ஓசைகளை அவர் கேட்டதில்லை. இன்றோ நடந்து செல்லும் இடமும், சூழ்நிலையும், ஒலிகளும் வழக்கத்துக்கு மாறான புதுமைகளை அவர் உணரும்படி செய்தன. நீலநாகமறவர் புற வீதியிலிருந்த வீரசோழிய வளநாடுடையார் வீட்டு வாயிலுக்கு எதிரே நடந்து சென்ற போது, அங்கே ஒலித்துக் கொண்டிருந்த வளையொலியும், சிலம்பொலியும் சில கணங்கள் ஒலிக்காமல் நின்றன.



"தாத்தா!" என்று மிக இனிய பெண்குரல் ஒன்று அந்த இடத்திலிருந்து கூவியழைத்தது. அவர் திரும்பி நின்று பார்த்தார். நான்புலரும் நேரத்தின் வைகறை அழகுகளே ஒன்று சேர்ந்து ஒரு சின்னஞ் சிறு பெண்ணாகிக் குடம் நிறைய நீருடன் கை நிறைய ஏந்திக் கொண்டு நிற்பது போலத் தூக்கத்தில் சரிந்த குழல் துவள, குழலில் சரிந்த பூவுந்துவளப் பெண்ணொருத்தி நின்றாள்.

அரைகுறை இருளில் முகம் நன்றாகத் தெரியாததால், "யார் அம்மா நீ?" என்று நின்ற இடத்திலிருந்தே வினவினார் நீலநாகமறவர்.

"நான்தான் தாத்தா, வீரசோழிய வளநாடுடையாரின் மகள் முல்லை" என்று பதில் சொல்லிக் கொண்டே அவருக்கு அருகில் வந்தாள் அந்தப் பெண். குடத்துள் நீர்த்தரங்கம் குலுங்கி ஒலித்தது.


"என்ன வேண்டும் உனக்கு?"

"என் தந்தை இன்று காலை உங்களைக் காண்பதற்காகப் படைக்கலச் சாலைக்கு வரவேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்தார்."

"என்ன காரியமாகப் பார்க்க வேண்டுமோ?"

"உங்கள் படைக்கலச் சாலையில் இருக்கிறாரே; அருட்செல்வ முனிவரின் வளர்ப்புப் பிள்ளை-அவரைப்பற்றி உங்களிடம் ஏதோ பேசுவதற்காக உங்களைப் பார்க்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்தார்."

"ஆகா! நன்றாகப் பேசலாம். நான் இப்போது ஆலமுற்றத்துக்குத் தான் போய்க் கொண்டிருக்கிறேன். சிறிது நேரங்கழித்து உன் தந்தையைப் புறப்பட்டு வரச் சொல்லேன்" என்றார் நீலநாகமறவர். அவரிடமிருந்து இளங்குமரன் அப்போது எங்கிருக்கிறான் என்ற செய்தியை வரவழைத்து விடலாமென்றுதான் முல்லை அவரோடு பேச்சுக் கொடுத்தாள். ஆனால் அவருடைய மறுமொழிகள் அவளுக்கு ஏமாற்றத்தைத் தான் தந்தன. அவரோ ஒளி பரவுவதற்குள் திரும்பிப் போய்விட வேண்டுமென்ற அவசரத்தில் இருந்தார். கேள்வியைச் சிறிது நெருக்கமாகத் தொடுத்



தால்தான் எதிர்பார்க்கிற பதில் கிடைத்தாலும் கிடைக்கலாமென்று எண்ணியவளாய், "உங்களை அமரச் செய்து இந்த வீதி வழியாக 'அவர்' தேரைச் செலுத்திக் கொண்டு போன போது கூட நான் பார்த்தேன் தாத்தா!" என்று சிறு குழந்தை பேசுவது போல் பன்னிப் பன்னிப் பேசினாள் முல்லை.

அப்படியும் அவரிடமிருந்து அவள் எதிர்பார்த்த செய்தி வரவில்லை. அதற்குள், வாயிலில் பெண் யாருடனோ பேசுகிற குரல் கேட்டு வளநாடுடையாரே வெளியே வந்து விட்டார். "விடிந்ததும் விடியாததுமாக யாரோடம்மா பேசிக் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டவாறே வெளியே வந்த தந்தையை எதிர்கொண்டு ஓடிச் சென்று, "இதோ ஆலமுற்றத்துத் தாத்தா வந்திருக்கிறார் அப்பா!" என்று உற்சாகமாகக் கூவினாள் முல்லை. 'ஆலமுற்றத்துத் தாத்தா' என்று தங்கை கூறிய குரல் கேட்டுக் கதக்கண்ணனும் உள்ளேயிருந்து விரைந்துவந்தான். வராதவர் வந்திருப்பதைக் கேள்விப்பட்ட ஆர்வம் அவனுக்கு.

அதன்பின் நீலநாகமறவரால் இருவரையும் மீறிக்கொண்டு உடனே அங்கிருந்து போக முடியவில்லை.

"இளங்குமரனை நீங்கள் திருநாங்கூருக்கு அழைத்துக் கொண்டு போயிருப்பதாகக் கதக்கண்ணன் படைக்கலச் சாலையிலிருந்து தெரிந்து கொண்டு வந்து சொன்னான். இன்று நீங்கள் வரும்போது உங்களோடு அவனையும் திரும்ப அழைத்து வந்து விட்டீர்களல்லவா? நேற்றிலிருந்து இந்தப் பெண் முல்லைக்கு என்னால் பதில் சொல்ல முடியவில்லை. அந்தப் பிள்ளையோடு வம்புப் பேச்சு பேசி அவனைச் சண்டைக்கு இழுப்பது இவளுக்கு விருப்பமான பொழுது போக்கு. இப்போது சில நாட்களாக அவன் இந்தப் பக்கமே வரவில்லை. அதனால் முல்லைக்கு அவனிடம் பெரிய கோபமே மூண்டிருக்கிறது" என்று வளநாடுடையார்தாம் ஆவல் மேலிட்டால் பேசிக்கொண்டேயிருந்தார்.

நீலநாகமறவர் அமைதியாகவும், அழுத்தமாகவும் இருந்தார். அவரிடமிருந்து வார்த்தை பெயரவில்லை. அவர் என்ன பதில் கூறப் போகிறாரென்று அறிவதற்காகவே முல்லையும் அங்கிருந்து போகாமல் ஓரமாக ஒதுங்கி நின்று கொண்டிருந்தாள். வளநாடுடையார் விடாமல் மேலும் பேச்சை வளர்த்தார்:

"திருநாங்கூருக்குப் போயிருக்கிறீர்கள் என்று கேள்விப்பட்டவுடன் உங்கள் ஆசிரியர்பிரானாகிய பூம்பொழில் நம்பியடிகளின் நினைவுதான் எனக்கு உண்டாயிற்று. நீங்களும், இளங்குமரனும் அடிகளைக் கண்டு வணங்கி விட்டுத் திரும்பியிருப்பீர்கள்."

"அடிகளைக் காண்பதற்குத் தான் போயிருந்தோம். ஆனால் திரும்பியது நான் மட்டும்தான் வளநாடுடையாரே!"

"ஏன்? இளங்குமரன் வரவில்லையா?"

"இல்லை! அவன் இன்னும் சிறிது காலத்துக்கு எங்கும் வரமாட்டான். நாங்கூர் அடிகள் தமது ஞானத்தைப் பயிர் செய்யும் விளைநிலமாக அவனை ஏற்றுக் கொண்டிருக்கிறார்."

என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் அப்படியே திகைத்துப் போய் இருந்தார் வளநாடுடையார். பின்னைப் பருவத்திலிருந்து வேலும், வாளும் சுமந்து வீரனாகத் தன்னோடு தோழமை கொண்டு திரிந்த இளங்குமரன் வேறு வழிக்குத் திரும்பிவிட்டான் என்பதைக் கேட்டதும் கதக்கண்ணனுக்கு என்னவோ போலிருந்தது. 'எந்தத் துறையிலும் எல்லைமீறிய ஆழத்துக்கு உணர்வு பூண்டிருப்பவர்கள் விரைவில் இப்படி மாறிவிடுவார்கள் போலும்' என்று எண்ணினான் அவன். முரட்டுப் பிள்ளையாய் அடக்க முடியாத காட்டாறு போலக் காவிரிப்பூம் பட்டினத்து வீதிகளில் தன்னையொத்த இளைஞர்களுடன் சுற்றித் திரிந்த பழைய இளங்குமரனை நினைத்தான். கடைசியில் நீராட்டு விழாவுக்குப் போன தினத்தன்று உலக அறவியிலும், இலஞ்சி மன்றத்திலும் மனமுருகி நின்ற இளங்குமரனை நினைத்தான். 'என்னைப் போல் அகன்று போகும் உணர்ச்சி கொண்டவர் எப்படியாவது வாழ்ந்துகொண்டே இருப்போம். ஆனால் இளங்குமரனைப் போல் ஆழ்ந்து போகும் உணர்ச்சி கொண்டவர்கள் 'இப்படித்தான் இருக்க வேண்டும்' என்ற எண்ணத்தால் தாங்கள் வாழும் உயரத்தை மேலே மேலே ஓங்கச் செய்யாமல் இருக்க மாட்டார்கள் என்று தெரிகிறது' என நினைத்தான் கதக்கண்ணன்.

'இளங்குமரன் சுரமஞ்சரியின் மாளிகைக்குப் போயிருப்பானோ' என்று நினைத்து நிம்மதியிழந்திருந்த முல்லை

இப்போது இதைக் கேட்டு அதிர்ச்சியே அடைந்தாள்.

"அவன் திருநாங்கூருக்குப் போனது உங்களுக்கெல்லாம் மகிழ்ச்சி தரவில்லையென்று தோன்றுகிறது" என்று அவர்களிருந்த மௌனநிலையைக் கண்டு கூறினார் நீலநாகர்.

"இங்கே அடிக்கடி வந்து போய்ப் பழகிக் கொண்டிருந்த பிள்ளையைத் திடீரென்று இனிமேல் இந்தப் பக்கம் காண முடியாதென அறியும் போது மனத்துக்குத் துன்பமாக இருக்கிறது. வேறு ஒன்றுமில்லை."

சற்றே உடைந்து தளர்ந்த குரலில் இவ்வாறு கூறினார் வளநாடுடையார்.

"எனக்கு நேரமாகிறது. நான் புறப்படுகிறேன். முடிந்தால் மாலையில் ஆலமுற்றத்துப் பக்கம் வாருங்கள். பேசலாம்" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார் நீலநாகர்.

வளநாடுடையாரும், நீலநாகமறவரும் வேண்டிய உறவும், நெருக்கமும் உள்ளவர்களானாலும் மனத்திலும் நோக்கங்களாலும் அடிப்படை வேறுபாடுடையவர்கள். வளநாடுடையார் வீரருக்குள் வீரராக மட்டும் வளர்ந்து பெருமை பெற்றவர். நீலநாகரோ வீரருக்குள் மாவீரராகவும், துறவியாகவும் உயர்ந்தவர். நாங்கூர் அடிகளை அடைந்தது இளங்குமரனின் நல்ல காலம் என்று அவர் நினைத்ததைப் போல் வளநாடுடையாராலோ, கதக்கண்ணனாலோ, முல்லையாலோ நினைக்க முடியாததற்கு இவர்கள் இயல்பான மனவிட நிலைகளைக் கடந்து சிந்திக்க முடியாதவர்களாக இருந்ததுதான் காரணம்.

'இந்த மனிதர் என்னிடம் ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல் இளங்குமரனைத் திருநாங்கூர்ப் பூம்பொழிலிற் கொண்டுபோய்ச் சேர்த்து விட்டாரே? சோழ நாட்டிலேயே வலிமை மிக்க வீரன் என்று பேர் வாங்கும்படி அவனை ஆக்கிவிட வேண்டுமென்று நான் கனவு கண்டதெல்லாம் இனி வீணாக வேண்டியதுதானா? வருகிற புத்த பௌர்ணமியன்று அவனை மணிபல்லவத்துக்கு அழைத்து வருவதாக அருட்செல்வரிடம் நான் வாக்களித்திருப்பது என்ன ஆவது? என் பெண்ணை அவனுக்கு மணம் செய்து கொடுக்க எண்ணியிருக்கும் எண்ணம் என்ன ஆவது?' என்று மனத்துக்குள் எண்ணிக் குழப்பமடைந்து கொண்டிருந்தார் வளநாடுடையார்.

முல்லையை அவள் நின்று கொண்டிருந்த இடத்தில் காணாததால் கதக்கண்ணன் வீட்டின் பின்புறமுள்ள தோட்டத்துக்குச் சென்று தேடலானான். புறவீதியின் பின்னால் மரங்களடர்ந்த வனத்தின் நடுவே காவிரியிலிருந்து பிரிந்து வரும் வாய்க்கால் ஒன்று உண்டு.

முல்லையைக் கதக்கண்ணன் தேடிச் சென்றபோது நன்றாக விடிந்து விட்டது. அவள் காவிரி வாய்க்காலின் கரைமேல் குடத்தோடு அமர்ந்து தனிமையில் மெல்ல அழுது கொண்டிருந்ததைக் கண்டான் அவன். தங்கையின் நிலை அவனுக்குப் புரிந்தது.

"எதற்காக அழுகிறாய், முல்லை?"

"அழுகிறேனா? இல்லையே!" என்று கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அவனிடம் தன்னுணர்வை மறைக்க முயன்றாள் அவள். "இல்லையாவது? என்னிடம் ஏன் மறைக்கிறாய்? நீ அழுவதன் காரணம் எனக்குத் தெரியும்" என்று சொல்லியபடி ஆதரவாகத் தங்கையின் அருகில் அமர்ந்தான் அவன். முல்லை தலைகுனிந்தாள். அவளுடைய கண்ணீரின் கடைசி இரண்டு துளிகள் காவிரிக்காலில் விழுந்து கலந்தன.

"கலக்கமடையாதே, முல்லை! உன்னை நானே திருநாங்கூருக்கு அழைத்துப் போகிறேன். நாம் இருவரும் இளங்குமரனைச் சந்திக்கலாம்." தமையனின் குரல் அவன் காதருகே ஒலித்தது. (தொடரும்)

ஸந்தியா

வையவன்

சரத்சந்திரன் வேலையை ஒப்புக்கொண்டு இன்றைக்கு இரண்டு தினங்கள் ஆகிவிட்டன. தபால் ஆபீஸிலிருந்து வெளிவந்து 'மீராபாய் நிருத்யமண்டலி'யின் நிழலில் அமர்ந்து கொண்டு தனது தபால் வினியோகத்தைத் தொடங்குவான். ஒவ்வொருவரையும் இரண்டிரண்டு தரம் பேர் கேட்டுத் தெரிந்து ஓரளவு அறிமுகம் செய்துகொள்ள முயல்வான். தனது உத்தியோகத்தின் பளுவை, மேற்படி இலாகாவில் சேராதபோதிருந்தே அவன் உணர்ந்தவன். விஸ்தாரமான வாழ்வின் ஒரு கோடியிலிருந்து இன்னொரு கோடிக்குத் துயரத்தின் வலிய சுமைகளையோ, மகிழ்ச்சியின் இனிய சிப்பங்களையோ உணர்ச்சியற்றுப் பட்டுவாடா செய்ய வேண்டிய ஒரு சிப்பந்திதான் அவன். தாது இன்னதென்று அறியாத் தூதனும் உரியோரிடம் தபாலைச் சேர்க்கும் போது அவனுக்குள் பல உணர்ச்சிகள் மோதுவதுண்டு.

எங்கே ஒரு கண்ணாடி அணிந்த, தாய்மையின் பெருமை கனிந்த முகம், தன் கரத்தைத் தலையில் அறைந்து கொண்டு கீழே சாய்ந்து விடுமோ? எங்கே ஒரு கன்னிகையின் சௌந்தர்ய ஜோதி வீசும் நயன அலைகளில் நாணம் தென்படுமோ? எங்கே ஒரு வயதான கிழவியின் ஆதுரங்களும் ஆதங்கங்களும் கல்மிஷமற்று நிறைவேறிய காரணத்தால் மங்கிய விழிகளில் நன்றி உணர்வு பொங்குமோ? எங்கே ஓர் இளம் மனைவியின் சிவந்த அதரங்களில் ஓர் இன்மொழிப் புன்னகை மின்னிவிட்டு விடுமோ? இப்படியெல்லாம் எண்ணமிடுவான் சரத்சந்திரன், விலாசதாரரிடம் கடிதங்களைச் சேர்ப்பிக்கும்பொழுது.

முன்னிரண்டு தினங்களில், இவ்விதம் ஏதும் நிகழாததிலிருந்து, தான் வாழ்க்கையின் அகரப் பிரவாகத்துக்கு அப்பாலிருந்து வெறும் கற்பனைகளை நம்பிக் கொண்டிருக்கிறோமோ என்ற ஐயம் அவனுக்கு உதித்தது.

அன்றைய தினம் அவன் 'மீராபாய் நிருத்ய மண்டலி'க்கருகில் அவசரக்காரர்களுக்கான தபால் பட்டுவாடாவை முடித்து விட்டுக் கிளம்பியபோது மணி எட்டரை. கடிதங்களில் பாதி தீர்ந்து விட்டன. அபூர்வமாக அன்றைக்கு இரண்டே இரண்டு மணியார்டர்கள் இருந்தன. முதலாவது மணியார்டரில் சுவாரஸ்யமில்லாத ஒரு சேட்டின் பெயர் இருந்தது. இரண்டாவதில் தான் 'அந்தப் பெயர்' இருந்தது. ஆம். அந்தப் பெயர் தான். அவனுக்கு வெகுவாய்ப் பிடிக்கிற அந்தப் பெயர்! சௌ. சந்தியா!

அந்தப் பெயரைப் படித்த மாத்திரத்தில் மூடு திரையிட்டிருந்த எத்தனையோ பழைய நினைவுகள் எழுந்தன.

"என்ன ஸார், ஏதாவது இருக்கா?" என்று ஒரு வக்கீல்குமாஸ்தா சிந்தனையைக் கலைத்தார்.

"ஆம்...ம். உங்களுக்கா? ஒன்றுமில்லையே ஏ...அடடே ஒன்று இருக்கு. இந்தாங்க!"

அதற்கப்புறம் கடமையின் ஞாபகத்தில் மற்றவை மறந்து போயின. ஏழெட்டுத் தபால்களுடனும், கடைசியாக மிஞ்சிய அந்த ஒற்றை மணியார்டருடனும் அவன் 'ராதா மந்திரம்' என்ற வீட்டருகே வந்து நின்றான்.

'சார் போஸ்ட்' என்று மரியாதையோடு ஒரு விரலால் கதவைத் தட்டினான். கதவைத் திறந்துகொண்டு ஒரு பெண்ணுருவம் வந்தது. சரத்சந்திரன் திகைத்து நின்றான்.

"நீங்களா, அண்ணா?" என்று சந்தியா தான் முதலாவதாகப் பேசினாள். சரத்சந்திரனுக்கு அப்போது பேசத் தோன்றவில்லை. நிர்மலமான அந்தக் குளிர் முகத்தில், கண்களும் இதழ்களும் சோகத்தின் சோர்விலேயே சற்றே குவிந்திருந்த பொழுதிலும், நெற்றித் திலகம் லட்சுமீகரமாகத் தனிப்பட்டு ஜொலித்துக் கொண்டிருந்தது. அவளுடைய சங்கக் கழுத்திலுள்ள மஞ்சள் கயிறு அவன் பார்வையைச் சற்று நிலைக்க வைத்தது.

'சந்தியா சௌபாக்கியவதி....'

மறுபடியும் மெதுவாக சந்தியா, "அண்ணா" என்றாள். சரத்சந்திரனின் நினைவுத் துயில் நீங்கியது. "ஆமாம், சந்தியா! உன் அண்ணன் தான், தொலை தூரத்திலிருந்து உனக்கு அருகில் வந்திருக்கிறேன்."

சந்தியாவின் இதழ்களில் ஓர் உருக்கமான புன்னகை விடுபட்டது. "உள்ளே வாருங்கள், அண்ணா!" என்று அவள் வீட்டுக்குள், அவனுக்கு வழிகாட்டிச் சென்றாள். நிஜமாய் அங்கே ஆலயத்தின் கம்பீரம் திகழ்ந்தது.

அவள் நாற்காலியை எடுத்துப் போட்டாள்.

"கொஞ்சம் இருங்கள் அண்ணா, காப்பி கொண்டு வருகிறேன்!" - சந்தியா மெதுவாய்த் திரும்பினாள்.

அவன் உணர்ச்சிகள் சட்டென்று கிளர்ந்தன.

அவனறிந்த அந்தச் சந்தியா...அவளுக்கு ஏதோ நேர்ந்து விட்டது. சரத்சந்திரன் நினைவின் பின்னிழுப்பில் நெடுந்தூரம் சென்றான்.

அந்தத் தினங்கள்!

பெட்டியின் அடியில் வைத்து மறந்து போய் மற்றொரு தினம் பிரித்துப் பார்க்கையில் கருகிச் சருகான போதும், கம்மென்று மகிழ மலர்களின் மணம் மட்டும் சிரஞ்சீவியாய் இருக்கும். சரத்சந்திரனுக்கு அப்படித்தான் அந்த நாட்களின் நித்திய வாசனை வீசுவது தெரியலாயிற்று.

உடம்பில் வெறும் பனியன் வேட்டியோடு, அவன் அந்தக் கிராமச் சூழ்நிலைக்கு ஏற்றாற் போல் ஆற்றங்கரை ஓரத்தில் நின்றான். அத்தை வீட்டுக்கு, அவர்கள் தொடர்ந்து வற்புறுத்தியதின் பேரில் வந்திருந்தான். படிப்பதற்கும் பேசுவதற்கும் ஒன்றுமில்லை அந்தக் கிராமத்தில். பார்க்க, கேட்க நிறைய இருந்தன. யுக யுகாந்திரங்களாக மலரின் முறுவலிலும், இளந்தளிர்களின் பசுமையிலும், நூதனக் கனவுகளை நெஞ்சில் தாவும் தென்றலின் சுகத்திலும் இயற்கை தன் ரகசியங்களைப் பேசிக்கொண்டுதான் இருக்கிறது. அதைக் கேட்டு அனுபவிப்பதற்காகச் சரத்சந்திரன் அங்கே நின்றான்.

அப்போது அது நேர்ந்தது.

'சலுங், சலுங்'கென்ற மெட்டியின் இனிய சந்தங்களும், வளையல்களின் கீதமும் அவ்வப்போது கேட்டுக் கொண்டிருந்தன.

ஒரு பெண். இடக்கரம் இடுப்பில் அமர்ந்திருந்த குடத்தை அணைத்திருக்க, அவள் விழிகளை மலர்த்தி நின்றாள். சரத்சந்திரன் உணர்வற்றுப் போய்விட்டான்.

"நீங்கள்தான் கங்கா வீட்டுக்கு வந்திருக்கிறீர்களா?"

"ஆம் நீங்கயாரு, கங்காவின் தோழியா?"

"ஆமாம், 'சந்தியா!' உங்களிடம் நிறைய புத்தகமிருக்கிறதாமே! எனக்கு வாசிக்க ஒண்ணு தர்றீங்களா?"

"வாங்க, தர்றேன்."

காலையில், டிபன் சாப்பிட்டுவிட்டு வேலை எதுவுமில்லாததால் ஈஸிசேரில் சாய்ந்து கொண்டிருந்தான் சரத்சந்திரன். சந்தியா சொன்னபடி புத்தகம் வாங்கிச் செல்வதற்காக வந்தாள்.

"என்ன சந்தியா? இந்தக் காலை வேளையில் எங்கே வந்தாய்?" என்று கேட்டபடியே ஏதோ வேலையாகச் சமையல் அறையிலிருந்து வெளியே வந்தாள் கங்கா. அவள் சரத்சந்திரனுக்கு முறைப் பெண். மனத்தில் இன்பக் கனவுகளை வளர்த்து வருபவள்.

"சந்தியாவா?" என்று திரும்பினான் சரத்.

"ஒண்ணுமில்லே கங்கா. உங்க அத்தான் புத்தகம் தர்றேன்னு சொன்னார்; அதுக்காக வந்தேன்!" என்று வெட்கம் நிறைந்த புன்சிரிப்புடன் அவள் பேசினாள்.

"புத்தகமா?" கங்கா கசப்புடன்கேட்டாள்.

"ஆமாம் கங்கா! ஊரிலிருந்து எடுத்து வந்தேன் பாரு; அதிலே நல்லதா எடுத்துக் கொடு. இவங்க 'செலக்ட்' பண்ணிக் கட்டும்" என்றான் சரத்சந்திரன்.

கங்கா அரை மனசாகச் சென்றது அவள் நடையிலேயே தெரிந்தது. புத்தகங்களுடன் திரும்பி வந்தாள். முகத்தில் ஆற்றாமை வெடித்துக் கொண்டு நின்றது. புத்தகத்தைப் பெற்றுக் கொண்டதும் கைகுவித்து அவனுக்கு வணக்கம் செலுத்திவிட்டுச் சந்தியா விடைபெற்றுக் கொண்டாள்.


அவள் போனதும், கங்காவின் முகத்தைப் பார்க்காமலே சரத்சந்திரன் கேட்டான்.

"கங்கா, இந்தப் பெண் யாரு?"

பளிச்சென்று பதில் வந்தது. "அன்னைக்கே அதைக்கேட்டுத் தெரிஞ்சுக்கலையா சந்திரன்?"

"என்னைக்கு?"

"ஆற்றங்கரையிலே பார்த்த அன்னைக்கு!"



"ஓ, உங்கள் ஊரிலே எதுவுமே உடனடி ஒலி பரப்பாகிவிடும் போலிருக்கிறதே!..."

கங்கா மௌனம் சாதித்தாள்.

"கேள்விக்குப் பதிலைக் காணுமே!"

"பக்கத்துத் தெருவிலே நீல வர்ணமடிச்ச வீடு. அவங்க அப்பா ஒரு தமிழாசிரியர். இவ பெயர் சந்தியா. எஸ். எஸ். எல். சி. வாசிச்சிருக்கா. வயசு பதினெட்டு ஆகிறது. அவங்க வீட்டிலே சீர்செனத்தி அவ்வளவா செய்ய மாட்டார்கள். சங்கீதம் தெரியும்."

படபடவென்று பொரிந்து விட்டுக் கங்கா நடந்தாள். சட்டென்று அவனுக்குப் புரிந்தது. 'சந்தியாவின் இரு நிறைந்த எழிலை, கனிவைக் முழுவதும் எவ்வளவு சுலபத்தில் கேவலமாக்கி விட்டாள்? சே, என்ன பெண்கள்!'

சோதனை போல் மறுநாள் அவன் ஆற்றங்கரையில் உலவிக் கொண்டிருந்தபோது தமிழாசிரியர் அவனைச் சந்தித்தார். அவர் பெயர் ரத்தினசாமி. பரஸ்பர அறிமுகத்தில் ஆரம்பித்த பேச்சு எங்கெங்கோ சுற்றிக் கொண்டு போய்த் தமிழார்வத்தில் வந்து நின்றது. ரத்தினசாமியின் அமைதியான ஆழம் நிறைந்த பேச்சு அவனை மிகவும் உற்சாகப்படுத்தியது. சரத்சந்திரனது தமிழார்வத்தை அவரும் உணர்ந்து கொண்டார். பேசிக் கொண்டே அவர் வீடுவரையில் இருவரும் வந்து விட்டனர். அவர் வீட்டுக்கு அழைத்தார். சரத்சந்திரனுக்கு மறுக்கத் தோன்றவில்லை. அப்போது மட்டுமில்லை; அதற்கப்புறம் எப்போதுமே!

சந்தியா அவர்களுடைய பேச்சுக்களில் அனேகமாக எப்போதும் கலந்து கொள்வாள். களங்கமற்ற அந்தக் கிண்கிணிபோன்ற குரலில் அவள் வாதாடுவதே ஒரு வேடிக்கை. தண்மை வீசும் அந்தக் கண்களில், அடம் பிடிக்கிற நினைவுகளைக்கூடத் தாலாட்டி விடும் அதிசயமான தாய்மை இருந்தது. சரத்சந்திரன் அடிக்கடி தமிழாசிரியர் வீட்டுக்கு வரலானான். சந்தியாவுக்கும் அவனுடைய வருகை பெரிதும் மகிழ்ச்சியைத் தந்தது.

அன்றொரு தினம்.

ஆற்றங்கரைக்குச் சற்றுத் தூரத்தில் அவளும் அவனும் உட்கார்ந்து ஏதோ வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருந்தனர். அந்த இடத்தில் ஜன நடமாட்டம் இல்லை.

அவளோ அன்றி சரத்சந்திரனோ கங்காவை அங்கே எதிர்பார்க்கவில்லை. கங்கா இடுப்பில் குடத்தோடு அவர்கள் எதிரில் வந்து நின்றாள். முகத்தில் வெறுப்பும், நிந்தனையும் கொதித்தன. "வா கங்கா!" என்று சுபாவமாகச் சந்தியா அழைத்தாள்.

"நாளெல்லாம் பார்த்தாச்சா?" கங்காவின் கேள்வியே கத்திபோல் இருந்தது. அதன் கூர்மை சரத்சந்திரனைத் தாக்கியது. அவன் தலையிட விரும்பினான். அதற்குள் "எதற்கு?" என்று குழந்தைபோல் சந்தியா கேட்டாள்.

அவள் மேலும் ஏதேனும் அபத்தமாக வளர்த்துவதற்கு முன் "கங்கா!" என்று நொந்த தொனியில் சரத்சந்திரன் தடுத்தான்.

"என்னை ஏன் தடுக்கிறீங்க? எனக்கு மட்டும் புதுசா தெரிஞ்சுட்டதா என்ன? ஊருக்கே தெரிஞ்சதுதானே!"

வார்த்தைகளுக்கு இவ்வளவு விஷமா? பதற்றத்துடன் சந்தியாவைத் திரும்பிப் பார்த்தான் சரத்சந்திரன். அவள் எழுந்து நின்று விட்டிருந்தாள். முகம் தாழ்ந்திருந்தது. என்ன யுத்தம் அவளுடைய இதயத்தில் நடந்து கொண்டிருந்ததோ?

சந்தியாவை வீட்டில் சேர்த்துவிட்டுச் சரத்சந்திரன் தன் வீடு திரும்பினான். சிறிய பிள்ளையார் விக்கிரகம் பிரதிஷ்டை செய்திருந்த ஒரு பெரிய ஆலமரத்தின் வேரில் மூவர் உட்கார்ந்து கொண்டிருந்தனர். அவனை எதிர் பார்த்தது போல் அவர்கள் விசுக்கென்று எழுந்தனர். "ஏய் தம்பி, எங்கேயிருந்து வாரே?" என்று கேட்டனர்.

இந்தப் போலீஸ் கேள்வி அவனுக்குப் பிடிக்கவில்லை. இடமாக நின்றபடி பதிலளித்தான். "ஏன் கேக்கறே?"

அதற்குப் பதிலாக ஒருவன் பொறி கலங்கும்படி பளீரென்று அவனுடைய கழுத்தின் மேல் அறைந்தான். "என்னடா, ஊரை குட்டிச்சுவராக்கப் பாக்கிறயா? இந்தக் காதலைச் சமுத்திரக் கரையிலே வச்சுக்க. அடுத்த வாட்டி நடக்கமாட்டே, நவுந்து நவுந்துதான் போவணும். மருவாதையா ஓடு போய்ச் சேர்ந்துவிடு."

அன்னியமான ஆணுக்கும் பெண்ணுக்கும் மத்தியில் உலகம் எழுப்பியிருப்பது ஒரு கதவு தான். அந்தக் கதவின் வெளியில் அன்பு நிற்க வேண்டும். அந்தக் கதவைத் திறந்தால் எல்லாருக்கும் ஒரே அர்த்தம்தான் தெரிகிறது. காதல் என்பது அவ்வளவு சாமான்யமாகி விட்டது. அதன் புனிதம் இலேசாகிக் காற்றில் மிதக்கும் சருகாகிவிட்ட பின்னால் மனிதருக்கு இளக்காரமும், வெறுப்பும் அதனிடம் ஏற்படலாயின.

சரத்சந்திரன் கூசிக் குறுகினான். வெளியில் கண்ணீர் தெரியவில்லை. அந்த ஊர் வாசம் போதும் போதுமென்று ஆகிவிடவே, மூட்டை கட்டிக் கொண்டு பயணத்துக்கு ஆயத்தமானான். ஒரு கேள்வி மிஞ்சியிருந்தது.

'சந்தியா இதனால் மாறிவிட்டாளா? ஒருவேளை அவள் அன்பின் ரகசியத்தில் மெய்யாகவே பிரேமையின் இழைகள் ஓடினவா?'

அதை உணர்ந்து கொண்டால்தான் நிம்மதி கிட்டும் போலிருந்தது. ஆனால் அவளை வெளியே காண முடியவில்லை. நேரே அவள் வீட்டுக்கே புறப்பட்டுச் சென்றான். தம்புரா சிரியர் அப்போது படி இறங்கிக் கொண்டிருந்தார். இவனைக் கண்டதும் அவர் முகம் சிறிது கனிந்தது.

"வணக்கம்!"

பதிலுக்கு அவர் கைகூப்பினார். ஏதோ பேசினான். ஒன்றிரண்டு வார்த்தைகளின் மனமற்ற மறுமொழி வந்ததும், அந்த நிலையே, அவ்வீட்டில் அவன் நுழைவதற்கு இருந்த சுவாதீனத்தைப் பறிமுதல் செய்துவிட்டது.

"போய்விட்டு வருகிறீர்களா?" அவர் கரம் குவித்தார். பளிச்சென்று கன்னம் புளிக்க அடி விழுந்தாற் போல் அது சரத்சந்திரனுக்கு உறைத்தது.

'கடைசியில் அவர்கூட உலகத்தோடு சேர்ந்து கொண்டார்.'

ஏட்டிக்குப் போட்டி!

பட்டினிப் பிரச்னை பற்றி சம்பத் பேசாதது ஏன்? — மதியழகன் கேள்வி

பரிசுப் பத்திரக் கொள்முதலில் மோசடி கர்ணம் - உதவி தாசில்தார் பிணைக்கு. — ஒரு ரசமான நிகழ்ச்சி

ராமேசுவரம் - கடல் ஸ்நானத்தின் போது ரூ. 135 அபேஸ்! — செய்தி

படத் தணிக்கையின் போக்கு: தயாரிப்பாளர் பீதி. — தலைப்பு

மூன்றாவது திட்டத்தில் பால் பண்ணைகள் அதிகரிக்கும். — செய்தி

சென்னை நகர பஸ்கள் இனி இரவு பதினொரு மணிவரை ஓடும். — அறிக்கை

புகையாத அடுப்புக் கரி. — நெய்வேலியில்

செத்து சாட்டியவர் பேசுவானேன்!

பிணைக்கு காசுக்கு சம்பந்தமாய்த்தான் இருக்கும்.

அதற்கும் சேர்த்து ஒரு முழுக்குப் போட்டுவிடுவதுதானே!

தயாரிப்பாளர் போக்கு பற்றிப் படத் தணிக்கையாளர்கள் பீதி அடைந்துள்ளனரே!

பண்ணைகள் அதிகரிக்கலாம். பால் அதிகரிக்குமா?

பிரயாணிகள் இனி இரவு பதினொரு மணி வரை பஸ் ஸ்டாண்டில் நிற்கலாம்.

இதில் ஏதேனும் உண்மை இருக்கத்தான் வேணும்: நெருப்பில்லாமல் புகையாது என்கிறாள் பார்வதிப் பாட்டி.



மேலும் தயங்குவது நாகரிகமா என்று மின்னல் போல அவன் திரும்பிவிட்டான். அந்த ஊரில் நிற்க, இனி ஒன்றுமே இல்லையென்று ஆகிவிட்டது. மனக் கேள்வி, பதிலால் சாந்தி பெற இயலாததால், தன் பதிலையே கேள்வியாக்கி ஒரு கடிதமாக எழுதி, அவள் பேருக்கு அந்த ஊர் தபாலாபீஸிலேயே சேர்த்துவிட்டுக் கிளம்பிவிட்டான்.

"இந்தாருங்கள், அண்ணா!"

சந்தியா காப்பிக் கோப்பையுடன் முன் வந்து நின்றதும் சரத்சந்திரன் நிமிர்ந்து பார்த்தான். அவள் முகம் புகையுண்டு இருந்தது. அவன் காப்பியை வாங்கிப் பருகினான்.

"எப்போதிருந்து இந்த வேலையில் இருக்கிறீர்கள், அண்ணா?" என்று வேறு போக்குக்குப் பேச்சை இழுத்தாள்.

"அடே, இப்போ வந்த காரியத்தையே மறந்துட்டேனம்மா; உனக்கு ஒரு மணி யார்டர் வந்திருக்கு!" என்று சரத்சந்திரன் எடுத்து நீட்டினான்.

யந்திரம் போல அதை வாங்கிக்கொண்டு, கையெழுத்திட்டுத் தந்தாள் சந்தியா. திரும்பி அதை வாங்கிச் சரி பார்க்கும்போது நீர் பட்டுக் கையெழுத்து கலங்கியிருந்ததைக் கண்டான். ஐயப்பட்டு மணியார்டர் அனுப்பிய விலாசத்தைப் படித்தான் சரத்சந்திரன்.

என்ன ஆச்சரியம்? அதே ஊரிலிருந்து, அவன் பார்க்கிற பகுதி ஒன்றின் இன்னொரு தெருவிலிருந்து அந்த மணியார்டர் அனுப்பப் பட்டிருந்தது. ஏதோ சட்ட சம்பந்தமான சாட்சியங்களுக்காக அப்படி அனுப்புவதுண்டு. சரத்சந்திரன் பெயரைப் படித்தான். ஏ. விசுவநாதன். சந்தியாவுக்கு யார் இப்படி அனுப்புகிறவர்கள்?

"இது யாரம்மா?"

"என் புருஷர்."

சரத்சந்திரனுக்குப் பொறி அதிர்ந்தது. அவளுடைய கண்ணீர் அர்த்தமாயிற்று. தொண்டையில் ஒரு வேதனை இரைக்க கம்மியபடி அவன் கேட்டான் "ஏன்?"

"அண்ணா!" அவள் குரல் உடைந்தது. "நம்மைப் பற்றி யாரோ அவரிடம் திரித்துச் சொல்லி விட்டார்கள் அண்ணா! ஏழு மாசம் ஆகிறது. உயிரை இந்த உடம்பிலே ஒட்டவச்சு வதைக்கறதுக்காக மாசந் தவறாமல் மணியார்டர் அனுப்பிடறார்; அப்பா போய் எத்தனையோ வேண்டியாச்சு. ஒரே பிடியா நின்னுட்டார்!"

சரத்சந்திரன் மனத்தில் புயல் மூண்டது. கடும் புயலே மூண்டது. சற்று நாழிகை அங்கே நின்றான். ஒரு தரம் அவளை நோக்கினான். பின் ஒரு தீர்மானம் ஆனது போல, "அம்மா! நான் சாயந்திரம் வருகிறேன்!" என்று கூறி விட்டு வெளியே புறப்பட்டான்.

மன வேகத்தில் நேரே அந்த விலாசத்தைத் தேடிக் கொண்டே நடந்தான். அது சின்னது. மங்களூர் ஓடு வேய்ந்த வீடு. எதையும் கவனியாது சரேன்று உள்ளே நுழைந்தான்.

"ஐயா, விசுவநாதன் இருக்கிறாரா?"

"யாரது?" உள்ளிருந்து ஒரு தடித்த குரல் கேட்டது. அதைத் தொடர்ந்து யாரோ எழுந்து வரும் சத்தம். ஒரு மனிதர் பனியனும் மூக்குக் கண்ணாடியுமாய்ச் சிவந்த மேனியோடு வந்து நின்றார்.

"விசுவநாதன் என்பது?"

"நான்தான்; ஏதேனும் தபாலா ...?"

"அதெல்லாம் இல்லை. உங்களோடு கொஞ்சம் பேச வேண்டும்!"

"அப்படியா, உள்ளே வாருங்கள்!" விசுவநாதன் அவனை வெளி அறைக்குள் அழைத்தார். நாற்காலியைச் சுட்டிக் காட்டி உட்காரச் சொன்னார். சரத்சந்திரன் நின்றபடியே பேசினான். "என்னை நேரிடையாக உங்களுக்குத் தெரிந்திராது!"

"ஆமாம்!" என்றார் அவர்.

"நான்தான், உங்கள் எண்ணப்படி சந்தியாவின் காதலன்!"

விசுவநாதனின் முகம் சிவந்தது.

"அவசரப்படாதீர்கள்! நான் ரொம்பக் காலம் வேதனைப்பட்டவன். ஒரு பெண்ணோடு காதலன் மட்டும்தான் பழகவேண்டும் என்று நம்மவர்கள் சட்டம். நான் பனை மரத்தின் கீழ் பால் பருகினேன், உம்மைப்போன்ற கவனிப்பில்லாதவர்களுக்கு. நம்புங்களென்றால் முடிகிறதா?"

விசுவநாதன் விரலை உயர்த்தி 'கெட் அவுட்' என்று கர்ஜித்தார்.


"இருங்கள் ஐயா! இன்னும் கொஞ்சம் பாக்கி! இன்றைக்கு நான் வருத்தப்படுகிறேன். ஏன் முன்னாடியே காதலிக்காமல் போய்விட்டோமென்று வருத்தப்படுகிறேன். ரத்னஹாரத்தைப் பாதையிலே வீசி எறிகிறவர்களுக்கு மத்தியில், அதன் அற்புதத் தேஜஸை முன்னமே ஏன் காதலிக்க வில்லை என்று வருத்தப்படுகிறேன். மாசா மாசம் மணியார்டர் எழுதி விடுகிறீரே, எதை இழந்து விட்டோம் என்று உமக்குப் புரிகிறதா ஐயா?"

விசுவநாதன் சிலையானார்.

அதற்கு மேல் நிற்க அவனால் ஆகவில்லை. உடம்பு ஆடியது. சீக்கிரமே வெளியேறினான். அந்தத் தெரு திரும்பிய பின்னும் உள்ளத்தின் அக்கினியைச் சொல்லி முடியாது. மனம் நடுநடுங்கியது. ஆத்திரத்தில் அந்தப் புனித உறவை, உருவத்தைச் சிதைத்து விட்டதாக அவனுக்குத் தோன்றியது. அவன் அப்படிப் பேசினானா? அப்படி அவன் முகம் காட்டியதா?

எந்த நிஜத்தை, எந்தத் தாய்மையின் சாட்சாத்காரத்தை, ஹிருதய பூர்வமாய் அவன் நிரூபிக்க வேண்டுமோ, அதற்குப் பதில் ஒரு பொய்யை, ஒரு மகத்தான மாசைத் தானே தன் முகத்தில் பூசிக் கொண்டானே?

'டெட்டால்'



தொற்றுநோயிலிருந்து அவனைப் பாதுகாத்துக்கொள்ள உதவுகிறது



அவன் மிகவும் சுத்தமாகத்தான் இருக்கிறான். ஆனால், அவன் வசிக்குமிடத்தின் தரை எப்படி இருக்கிறது? போதிய அளவிற்கு சுத்தமாகக் காணப்பட்டபோதிலும், கோடிக்கணக்கான, கண்ணுக்குத் தெரியாத விஷக்கிருமிகள் தயாராகப் பதுங்கி இருக்கின்றன. அசட்டை செய்து விடாதீர்கள். உலகத்திலேயே மிகவும் நம்பிக்கை வாய்ந்த கிருமிநாசினி 'டெட்டாலை,' தரைகளை அலம்பிவிடவோ துடைக்கவோ உபயோகிக்கப் படும் தண்ணீருடன் கலந்துகொள்ளுங்கள். 'டெட்டால்' விஷக்கிருமிகளை கொல்ல கூடியது.

DT. 4 D.

அட்லான்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட் (இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது)

JWT AEL 3500


சோப் உபயோகிப்பதால்
கூந்தல் சோபையை
இழக்கிறது
'ஹேலோ'
கூந்தலைப் பளபளப்பா
கச்செய்கிறது!
HALO SHAMPOO
அமெரிக்காவில்,
ஏராளமாக
விற்பனை
யாகும்
ஷாம்பு
மறைந்துகிடக்கும் உங்கள் கூந்தலின் அழகை ஹேலோ பிரகாசிக்கச் செய்கிறது.


தலைவலி,
சளி, ஜுரம்,
இன்புளுயன்சா
வயிற்றுப்போக்கு
முதலியவைகளுக்கு
சிவபதி
மருந்து
பாரத் இண்டஸ்டிரியல் ஒர்க்ஸ், 32, மஹால் 5வது தெரு மதுரை-1

வேங்கடம் முதல் குமரிவரை



மதுரை மீனாக்ஷி

சென்னை அரசாங்கத்தின் சார்பில் அமெரிக்காவுக்கு ஆறு பேரை அனுப்புவதென்று தீர்மானம் ஆயிற்று. எதற்கென்று தெரியுமா? இப்போது எதற்கெடுத்தாலும் வெளிநாடுகளுக்கு ஆட்களை அனுப்பி அவர்கள் அங்குள்ள விஷயங்களைக் கற்று நிபுணத்துவம் அடைய நினைக்கிறார்களே, அதுபோல் ஆறு பேர் நகர நிர்மாணம் எப்படி என்று ஆராய, அப்படி அவர்கள் படித்து வந்ததைக் கொண்டு நம் நாட்டில் நகரங்களை அமைக்க அந்த அறிவு உதவும் என்று கருதினார்கள். இதற்காக ஆறு பேர்களைத் தேர்ந்தெடுக்க ஆறு வருஷங்கள் ஆயின. எவ்வளவோ! போட்டி. யார் யாரெல்லாமோ சிபாரிசு. இவ்வளவும் நடந்து ஆறு பேரைத் தேர்ந்தெடுத்துத் தீர்ந்தது. பேப்பரில் முடிவான உத்தரவு போட வேண்டியவர் முதல் மந்திரி. ஆகவே கடைசியில் "பைல்" அவரிடமும் போயிற்று. அவர் "பைலை"ப் படித்துப் பார்த்தார். நடந்திருக்கும் விஷயங்களைக் கவனித்தார். கடைசியில் குறிப்பு எழுதினார். அவர் எழுதிய குறிப்பு இதுதான். 'தமிழ் நாட்டில் நகர நிர்மாணம் எப்படி இருக்க வேணும் என்று படிக்க அமெரிக்கா போய்த்தான் தெரிய வேணுமா? இந்த ஆறு பேரும் நேரே மதுரைக்குச் செல்லட்டும். அங்கு நகரம் அமைந்திருக்கும் முறையைக் காணட்டும். நகர நிர்மாணம் எப்படி இருக்க வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளட்டும்.' ஆறு பேரும் ஏமாந்தார்கள். அவர்களை அனுப்பக் கங்கணம் கட்டிக் கொண்டு நின்றவர்களும் ஏமாந்தார்கள். உண்மைதானே. நகர நிர்மாணம், அதிலும் தமிழ்நாட்டின் நகர நிர்மாணம் எப்படி இருக்க வேண்டும் என்பதை அமெரிக்கா போய்த்தான் தெரிந்து கொள்ள வேண்டுமா? மதுரைக்குச் சென்றால் தெரிந்துகொள்ள முடியாதா? நல்ல நகர நிர்மாணத்துக்கு எடுத்துக்காட்டாக அல்லவா மதுரை நகரம் அமைந்திருக்கிறது. ஊருக்கு நடுவே கோயில். கோயிலைச் சுற்றிச் சுற்றி வீதிகள். அந்த வீதிகளிலெல்லாம் அங்காடிகள் என்றெல்லாம் அமைந்திருப்பது அழகாய் இல்லையா? அப்படி நகர நிர்மாணத்துக்கே சிறப்பான எடுத்துக்காட்டாய் இருப்பது பழம் பெருமையுடைய மதுரை. அதனையே ஆலவாய், நான்மாடக்கூடல் என்றெல்லாம் அழைத்திருக்கிறார்கள். அந்த ஆலவாயிலே இறைவன் தனது அறுபத்திநான்கு திருவிளையாடல்களை நிகழ்த்தியிருக்கிறான். பாண்டிய மன்னர்கள் அரசு செய்த இடம். இன்னும் எவ்வளவோ பெருமைகளை உடையது மதுரை. அந்த மதுரைக்கே செல்கிறோம்.

மதுரை செல்வதற்கு வழி நான் சொல்லி அன்பர்கள் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. மதுரை நகருக்கு நடுநாயகமாய்க் கோயில். அதைச் சுற்றி ஐந்து வீதிகள். ஒவ்வொரு வீதியும் ஒவ்வொரு உத்சவத்துக்கு ஏற்பட்டது. ஆடி மாதம் முளைக் கொட்டு விழா. அது நடக்கிற வீதி ஆடி வீதி. இது கோயில் மதிலுக்குள்ளேயே இருக்கிறது. அடுத்த சுற்று மாசி வீதி. மாசியில் நடக்கும் மக விழா இப்போது இவ்வீதியில் நடப்பதில்லை. சித்திரை வீதியில் நடக்கிறது. சித்திரையில் நடக்கும் பெருந் திருவிழா, பிரமோத்சவம்தான். இந்த வீதியில் நடக்கிறது. மாசிவீதியை அடுத்த சுற்று ஆவணி மூலவீதி. பெயரே தெரிவிக்கிறது, ஆவணி மூலப் பெருவிழா இதனில் நடக்கும் என்று. இதனையும் அடுத்தது சித்திரை வீதி. சித்திரைப் பெருவிழா, மாசி விழா இந்தச் சித்திரை வீதியில் நடக்கின்றன. இவற்றுக்கெல்லாம் வெளியேதான் வெளி வீதி. பஸ் போக்குவரத்துக்கெல்லாம் ஏற்றதாக அகன்ற பெரிய வீதி இது. பஸ்ஸில் சென்றாலும், ரயிலில் சென்றாலும் ஒவ்வொன்றாக இவ்வீதிகளைக் கடந்தே கோயிலுக்கு வரவேணும். ஊருக்கு முன்பே கோயிலின் நீண்டுயர்ந்த கோபுரங்கள் எல்லாம் தெரியும். மாசி வீதி வந்ததும் கோயில் வாயில்களும் தெரியும். நான்கு பக்கத்திலும் வாயில்கள் திறந்தே இருக்கும். இருந்தாலும் நாம் கோயிலுக்குள் செல்ல வேண்டியது கீழ வீதியில் உள்ள அம்மன் கோயில் வாயில் வழியாகத்தான். மற்றக் கோயில்களைப்போல் அல்லாமல் இந்த முதலில் மீனாக்ஷியைத்தான் வழிபட வேணும். அதன் பின்னர்தான் சுந்தரேசுவரர். மீனாக்ஷிதானே பாண்டிய ராஜகுமாரி. சுந்தரேசர் அவள் தன் நிழலிலே தானே ஒதுங்கி வாழ்கிறார்? அம்மன் கோயில் முகப்பில் அஷ்ட சித்தி மண்டபம். கௌமாரி, ரௌத்திரி, வைஷ்ணவி, மகாலட்சுமி, யக்ஞரூபிணி, சாமளை, மகேசுவரி, மனோன்மணி ஆளுக்கொரு தூணை ஆக்கிரமித்துள்ளனர். இவர்களுக்கு இடையிலேதான் பழக்கடைகள் முதலியன. இதனைக் கடந்து மீனாக்ஷி நாயக்கர் மண்டபம். அதற்கடுத்தது முதலி மண்டபம். குடந்தைமுதலியாரால்கட்டப்பட்டது. அங்கு பிக்ஷாடனர், தாருகா வனத்து ரிஷிகள், ரிஷி பத்தினிகள், மோகினி முதலியோரது சிலைகள் இருக்கின்றன. இந்த முதலி மண்டபத்தையும் கடந்து வந்தால் பொற்றாமரைக் குளத்துக்கும், அதைச் சுற்றிய மண்டபத்துக்கும் வந்து சேருவோம். பொற்றாமரையை வலம் வந்து கோயிலுள் செல்ல வேணும். பொற்றாமரை என்ற பெயருக்கு ஏற்பத் தங்கத்தால் தாமரை மலர் ஒன்று குளத்தின் நடுவில்

தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான்

இருக்கும். இங்குதான் வள்ளுவரது குறளைச் சங்கப் புலவர்கள் ஏற்றிருக்கின்றனர். ஆதலால் சலவைக் கல்லில் ஆயிரத்து முந்நூற்று முப்பது குறளும் பொறித்து வைக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சலவைக் கல் பணியும் அந்தப் பொற்றாமரையும், திருப்பனந்தாள் மடத்து அதிபர் அவர்களது கைங்கர்யம். பொற்றாமரையை வலம் வந்து கிளிக்கட்டு மண்டபம் வழியாக மீனாக்ஷியம்மன் சந்நிதிக்குச் செல்லவேணும். அங்கு வருவார் எல்லோரும் வசதியாக நின்று காணக் கிராதிகளெல்லாம் போட்டு வைத்திருக்கிறார்கள். கருவறையில் மீனாக்ஷி நிற்கிற கோலம் கண்கொள்ளாக் காட்சி. வலக்கையில் கிளியுடன் கூடிய செண்டு ஒன்று ஏந்தி அவள் நிற்கின்ற ஒயில், மிக்க அழகானது. கருணை பொழியும் கண்கள் படைத்தவள் அல்லவா? கண்ணை இமையாது மக்களைக் காக்கும் அருள் உடையவள் ஆயிற்றே. இவளையே, தடாதகை, அங்கயற்கண்ணி என்றெல்லாம் அழைக்கிறார்கள். அன்னையை வணங்கி அவள் திருக்கோயிலை வலம் வரும்போதே கோயில் திருப்பணி செய்த திருமலை நாயக்கரைச் சிலை வடிவில் அவரது இரண்டு மனைவியருடனும் காணலாம். மீனாக்ஷியின் சந்நிதியை விட்டு வெளி வந்து வடக்கு நோக்கி நடந்தால் நம்மை எதிர் நோக்கி இருப்பார் முக்குறுணிப் பிள்ளையார். விநாயக சதுர்த்தியன்று முக்குறுணி அரிசியை அரைத்து மோதகம் பண்ணி அந்த நைவேத்தியத்தை ஏற்றுக் கொள்கிறவர் ஆனதால் முக்குறுணிப் பிள்ளையார் என்று பெயர் பெற்றிருக்கிறார். பெயருக்கு ஏற்ற காத்திரமான வடிவம். அவருக்கு வணக்கம் செலுத்தி, சுவாமி கோயில் பிராகாரத்தில் நடக்கலாம். மேற்குப் பிராகாரத்தில் ஏகாதச லிங்கங்கள் இருக்கின்றன. வடமேற்கு மூலையில் உள்ள மண்டபத்தில் கடைச் சங்கப் புலவர்கள் நாற்பத்தி ஒன்பதுபேரும் சிலை உருவில் இருக்கிறார்கள். கோயில் முன்பக்கம் வந்தால் கம்பத்தடி மண்டபம். இதிலுள்ள சிற்ப வடிவங்களைக் காணக் கொஞ்சம் அவகாசம் வேண்டும். ஆதலால் கோயிலுள் நுழைந்து முதலில் சொக்கலிங்கப் பெருமானை வழிபாடு செய்துவிட்டு, அவகாசத்துடனேயே இம் மண்டபத்துக்கு வருவோம். மூலத்தானத்தில் லிங்க உருவில் இருப்பவர் சொக்கர். அவரைப் பல பெயர் சொல்லி அழைக்கிறார்கள்.

புழுகுநெய்ச் சொக்கர் அபிடேகச்
சொக்கர்; கர்ப்பூரச் சொக்கர்,
அழகிய சொக்கர், கடம்பவனச்
சொக்கர், அங்கயற்கண்
தழுவிய சங்கத் தமிழ்ச்
சொக்கர் என்று என்று சந்ததம் நீ
பழகிய சொற்குப்—பயன் தேர்ந்து
வா இங்கு என் பைங்கிளியே.



சுகவரன்

என்று அத்தனை பெயரையும் அழகாகச் சொல்கிறது ஒரு பாட்டு. சொக்கர் என்றாலே அழகியவர் என்றுதானே பொருள். அதனாலேயே அவரைச் சுந்தரேசுவரர் என்றும் அழைக்கிறார்கள். இவர் இத்தலத்து அதிபதியாய் எழுந்தருளியது நல்ல ரஸமான கதை அல்லவா? மலயத்துவஜ பாண்டியன் மகளாகத் தடாதகை பிறக்கிறாள், வளர்கிறாள். தடாதகை தந்தைக்குப்பின் தானே மகுடம் சூடிக்கொண்டு பாண்டிய நாட்டை அரசு செய்கிறாள். அப்படி அரசு செய்யும் போது திக்விஜயம் செய்யப் புறப்படுகிறாள். திக்விஜயத்தில் அரசர்கள் மாத்திரம் அல்ல. திக்கு பாலகர்களுமே தலை வணங்குகிறார்கள். வெற்றிமேல் வெற்றி பெற்று இமயத்தையே அடைகிறாள். பாரேதியில் முழங்குகிறாள். மேருவை வலம் வருகிறாள். கடைசியில் கைலாசத்துக்கே வந்து விடுகிறாள். அங்கு கைலாசபதி சாந்த ரூபத்தோடு பினாகபாணியாக அவள் முன் வந்து சேருகிறார். எல்லோரையும் வெற்றிகண்ட பெண்ணரசி, இந்தச் சுந்தரன் முன்பு நாணித் தலை கவிழ்கிறாள். தடாதகையின் பின்னாலேயே மதுராபுரிக்கு வந்துவிடுகிறார் சுந்தரர். சோமசுந்தரராக மதுரைத் தடாதகையை மணம் புரிந்து கொள்கிறார். மலயத்துவஜன் ஸ்தானத்தில் தடாதகையின் சகோதரனான சுந்தரராஜனே கன்யாதானம் செய்து தாரை வார்த்துக் கொடுக்கிறார். அன்றுமுதல் சோமசுந்தரர் தம் மனைவியின் நிழலிலேயே ஒதுங்கி வாழ்கிறார். இந்தத் திருமண வைபவத்தைத் தான் இன்றும் சித்திரைத் திருவிழாவாக மதுரையில் மக்கள் கொண்டாடுகிறார்கள். இப்படி நடக்கும் தங்கையின் திருமணத்துக்கே தந்தப் பல்லக்கு, முத்துக்குடை, தங்கக் குடம் முதலிய சீர்வரிசைகளுடன் அழகர் கோயிலில் இருந்து சுந்தரராஜன் வந்து சேருகிறார். இத்திருமணக் கோலத்தைப் பரஞ்சோதி முனிவர் சொல்லில் வடிக்கிறார்.

அத்தலம் நின்ற மாயோன்
ஆதி செங்கரத்து நங்கை
கைத்தலம் கமலப்போது
பூத்ததோர் காந்தள் ஒப்ப
வைத்தரு மனுவாய் ஓதக்
கரக நீர் மாரிபெய்தான்
தொத்தலர் கண்ணி விண்ணோர்
தொழுது பூமாரி பெய்தார்.

இதனையே கல்லில் வடித்து நிறுத்துகிறான் ஒரு சிற்பி. அச்சிற்ப வடிவமே கம்பத்தடி மண்டபத்தில் தென்கிழக்குத் தூணில் நிற்கிறது.

கம்பத்தடி மண்டபத்துக்குவருமுன் கோயில் உள்ளே வெள்ளியம்பலத்தில் கால் மாறி ஆடிக் கொண்டு நிற்கும் கற்பகத்தையும் கண்ணாரக் கண்டு வணங்கலாம். வலது காலையே ஊன்றி நடம் ஆடிக் கொண்டிருந்த

தைக் கண்டு வருந்திய ராஜசேகர பாண்டியனைத் திருப்தி செய்யக் கால் மாறி ஆடினான், அந்த நடராஜன் என்பது வரலாறு. கம்பத்தடி மண்டபத்தில் எண்ணரிய சிற்பங்கள், எல்லாம் சிலை வடிவில். அக்னி வீரபத்திரர், ஊர்த்துவத் தாண்டவர், காளி, காலசம்ஹாரர், காமதகனர், பிக்ஷாந்திகர் முதலிய சிற்ப வடிவங்கள் எல்லாம் அழகானவை. கம்பத்தடி மண்டபத்துக்கு வடக்கே நூற்றுக்கால் மண்டபம் இருக்கிறது. அதனையே நாயக மண்டபம் என்பர். அடுத்த வெளிப் பிராகாரத்துக்கு வந்தால் அங்குதான் அரிய நாத முதலியார், ரதி முதலிய சிற்பங்களைத் தாங்கிய ஆயிரக்கால் மண்டபம், வீர வசந்தராய மண்டபம். சுவாமி சந்நிதிக்கும், அம்மன் சந்நிதிக்கும் இடையேதான் கல்யாண மண்டபம். இதை யெல்லாம் பார்த்தபின் ஆடிவீதியில் ஒரு சுற்றுச் சுற்றினால் வடக்கு வாயில் பக்கம் சங்கீதத் தூண்களையும் காணலாம். இனி வெளியே வந்தால் பிரபலமான புது மண்டபம் இருக்கிறது. அங்கே எல்லா இடத்தையும் கடைகளே அடைத்துக் கொண்டிருக்கும். இதற்கிடையிலே உள்ள ஊர் மண்டபத்தில் திருமலைநாயக்கரது குடும்பம், கல் யானைக்குக் கரும்பு அருத்திய சித்தர், கரிக் குருவிக்கு உபதேசித்த குருநாதன் சிலாவடிவங்களையும் காணலாம்.

கோயிலை நன்றாகப் பார்த்து விட்டோம். இத்தலத்துக்கு மதுரை என்று ஏன் பெயர் வந்தது என்று தெரிய வேண்டாமா? சிவ பெருமான் தன் சடையில் சூடிய பிறையில் உள்ள அமுதத்தைத் தெளித்து இந்நகரை நிர்மாணித்ததால் இந்நகரமானது மதுரமாக இருந்திருக்கிறது. இன்னும் கன்னி, கரியமால், காளி, ஆலவாய் என்னும் நால்வரும் பிரபலமாக இருக்கும் இடம் ஆனதால் நான்மாடக்கூடல் என்றும் பெயர் பெற்றிருக்கிறது. கன்னியான மீனாக்ஷி இருந்து அரசு புரிந்ததும் கன்னிபுரீசம் என்றும், சிவபெருமான் சுந்தரபாண்டியனாக இருந்து அரசாண்ட காரணத்தால் சிவராஜதானி என்றும் பெயர் பெற்றிருக்கிறது. இத்தலத்தில் மாதமொரு திருவிழா. எப்படிக் காஞ்சி கோயில்கள் நிறைந்த நகரமோ அது போல் இந்த நகரம் விழாக்களால் சிறப்பான நகரம். மதுரையில் மீனாக்ஷி கோயிலைப் பார்ப்பதோடு அங்குள்ள திருமலை நாயக்கர் மஹால், வண்டியூர்த் தெப்பக்குளம், கூடல் அழகர் கோயில் முதலியவைகளையும் பார்க்கத் தவறக் கூடாது. கூடல் அழகர் ஊரின் மேற்கோடியில் இருக்கிறார். மூன்று தளங்களில் நின்றும், இருந்தும், கிடந்தும் சேவை சாதிக்கிறார்.

இக்கோயிலில் உள்ள கல்வெட்டுகள் 44. இன்னும் திருமுகச் செப்புப் பட்டயங்களும் உண்டு. பராக்கிரம பாண்டியன், செண்பக மாறன், குலசேகர தேவர், மல்லிகார்ச்சுன ராயர், கோனேரின்மை கொண்டான், விசுவ நாத நாயக்கர், திருமலை நாயக்கர் முதலியோரது திருப்பணிகள் இக்கோயிலும் மண்டபங்களும். இவைகளின் விவரங்களெல்லாம் திருப்பணி மாலை என்ற பாடலில் வரிசையாக அடுக்கடுக்காகச் சொல்லப் பட்டிருக்கின்றன. இத்தனை சொல்லியும் ஒன்றைச் சொல்லவிட்டு விட்டால் இத்தலத்தின் வரலாறு பூரணமாகாது. இத்தலத்தின் பெருமையே இங்கு இறைவன் நடத்திய அறுபத்தி நான்கு திருவிளையாடல்களின் பெருமைதான். இதனை வடமொழியில் ஹாலாஸ்ய மகாத்மியத்திலும், தமிழில் பரஞ்சோதியார் எழுதிய திருவிளையாடல் புராணத்திலும் காணலாம். இந்திரன் வழிபட்டது, மீனாக்ஷியைத் திருமணம் செய்தது, பிட்டுக்கு மண் சுமந்தது, வன்னியும் கிணறும் இலிங்கமும் அழைத்தது, கால் மாறி ஆடியது முதலியவை முக்கியமானவை. இவைகளுக்கெல்லாம் தனித்தனி திருவிழாக்களே நடக்கின்றன. கோயிலின் பல பாகங்களில் இதற்குரிய சிற்ப வடிவங்களும் இருக்கின்றன. அவைகளைத் துருவிக் காண ஆசையும், அதற்கு வேண்டிய அவகாசமும் வேண்டும்.




பத்ரகாளி

இத்தலத்துக்கு அப்பரும், சம்பந்தரும் வந்திருக்கிறார்கள். மாணிக்கவாசகர் வரலாறு முழுக்க முழுக்க இத்தலத்தில் நடந்தது தானே. சம்பந்தர் இங்கு வந்ததும், பாண்டியனைச் சைவனாக்கியதும், சமணர்களைக் கழுவேற்றியதும் பிரசித்தமான காரியமாயிற்றே. கூன் பாண்டியன் மனைவி மங்கையர்க்கரசியும், மந்திரி குலச்சிறையாரும் இந்தத் தலத்தில் பெருமை பெற்றவர்கள். மங்கையர்க்கரசியையும், அங்கயற்கண்ணியையும் சேர்த்தே பாடுகிறார் சம்பந்தர்.

மங்கையர்க்கரசி
வளவர்கோன் பாவை,
வரிவளைக்கை மடமணி
பங்கயச் செல்வி,
பாண்டிமா தேவி
பணி செய்து நாடோறும் பாட
பொங்கழல் உருவன்
பூத நாயகன், நால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற்கண்ணி
தன்னொடும் அமர்ந்த
ஆலவாய் ஆவதும் இதுவே.

என்பதுதானே அவரது பாடல். நானும் 'ஆலவாய் என்பது இதுதான்' என்று சுட்டிக் காட்டிவிட்டு நின்று கொள்கிறேன். மதுரையைப் பற்றி இவ்வளவுதானா சொல்லலாம். 'சொல்லிடில் எல்லை இல்லை' என்பதுதான் என் அனுபவம்.


1961
1957
1955
RISING SUN BRAND
சூரியன் மார்க்
மைதா
சூஜி — ஆட்டா

செஞ்சுரியின் வளர்ச்சி

1955-ல் பெரிய அளவில் மாவு அரைக்கும் தொழிற்சாலை ஒன்றைத் துவக்கிய நாங்கள் பொதுமக்களின் தொடர்ந்த நல்லெண்ணத்தினாலும், ஆதரவினாலும் இன்று ஆசியாவிலேயே மிகப் பெரிய மாவுத் தொழிற்சாலைகளில் ஒன்றாகத் திகழ்கின்றோம்.

நாளொன்றுக்கு 150டன் அதிகப்படியாக மாவு அரைக்கும் திறனுடைய எங்கள் தொழிற்சாலையின் இரண்டாவது பிரிவு துவக்கப்படுவதை மிக மகிழ்ச்சியுடனும் பெருமையுடனும் அறிவிக்கின்றோம்.

1955-ல் நாளொன்றுக்கு 35 டன்கள் மாவு அரைப்பதிலிருந்து1957-ல் 100 டன்களாக உயர்ந்து இன்று 250 டன்கள் மாவு அரைக்கும் திறன் அடைந்துள்ளோம்.


இந்த மகிழ்ச்சிகரமான நன்னாளில் சூரியன் மார்க் உணவுப் பொருட்களின் மிக உயர்ந்த தரத்தை என்னாளும் நிலை நிறுத்திக் காப்போம் என்று உறுதி எடுத்துக்கொள்கின்றோம்.

இப்பொழுது முதல் ஆதரவாளர்களின் பூரணத் தேவைகளையும் நிறைவேற்ற முடியும் என்று மனப்பூர்வமாக நம்புகின்றோம்.

மேலும் நாட்டின் நலனுக்கேற்ப வருடத்தில் ரூ. 40 லட்சம் மதிப்புள்ள அன்னியச் செலாவணியை சம்பாதிக்க முடியும் என்று எதிர்பார்க்கின்றோம்.

செஞ்சுரி பிளவர் மில்ஸ் லிமிடெட்,

த.பெ. எண்: 1558, 221, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, சென்னை-1.,
போன் : 31241, 31242, 31243, 4165 (4 லைன்கள்)
மில்ஸ் : ஓட்டேரி, பெரம்பூர், சென்னை-12.





நிதியும் நிம்மதியும்

ஏ.கே.வாசுதேவன்

அந்தக் கடிதத்தைப் படித்ததும் சிவராமன் அடைந்த பிரமிப்புக்கு எல்லை இல்லை. அவன் மனம் குதூகலத்தினால் துள்ளியது. வருடக்கணக்காக வாட்டி வந்த வறுமைக்கு வரம்புக் காலம் வந்து விட்டதென்பதை அவனால் நம்ப முடியவில்லை. மீண்டும் மீண்டும் அந்தக் கடிதத்தைப் படித்துப் பார்த்தான்;

சிவராமனுக்கு நான்கு குழந்தைகள். சொற்ப வருமானத்தில் காலந் தள்ளிய அவன் தனக்கு இப்படி ஒரு கருமி மூலம் அதிர்ஷ்டம் வரும் என்று கனவிலும் நினைக்கவில்லை.

"பாக்கியம், ஓடி வா! ஒரு சந்தோஷச் செய்தி" என்று உரக்கக் கூவினான் சிவராமன். அடுக்களையில் வேலையா யிருந்த அவள் படபடவென்று வெடித்துக் கொண்டிருந்த கடுகுக் கரண்டியோடு ஓடி வந்தாள்.

"இதோ பார்" என்று கடிதத்தை நீட்டினான் அவன். அந்தக் கடிதத்தைப் பார்த்து விட்டு விஷயம் புரியாது விழித்தாள் அவள்.

"எங்கள் மாமா தருமலிங்கத்தைத் தெரியுமா?" என்று ஆரம்பித்து விஷயத்தை விரிவாகக் கூறினான். பாக்கியம் திகைத்துப் போனாள். திகைப்புச் சிறிது அடங்கியதும், "இதோ பாருங்கள், பணத்தை என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்டாள்.

"ஏன்? பாங்கியில் போடப்போகிறேன்!"

"பாங்கியில் போட்டுப் போட்டுத்தான் உங்க மாமா பணம் பாசி பிடித்துக் கொண்டிருந்ததே! அந்தப் பணம் உங்களுக்கு வரப் போகிறது என்ற செய்தி வந்ததுமே அவருடைய குணமும் கூடவே வந்து விட்டதா?"

அவன் சிரித்துக் கொண்டே தயாராகப் போட்டிருந்த பட்டியலை வெளியே எடுத்தான்.

பாக்கியத்துக்கும் குழந்தைகளுக்கும் நகைகள், துணிமணிகள் இவற்றுக்காக ரூபாய் பத்தாயிரம்; முப்பதாயிரத்தில் ஒரு வீடு; ஐயாயிரத்துக்கு மேஜை, நாற்காலி; பத்தாயிரத்தில் ஒரு சிறிய மோட்டார்; முப்பத்தைந்தாயிரம் முதல்போட்டு ஒரு வியாபாரம்; கரண்ட் அக்கௌண்டில் பத்தாயிரம். மீதி ஒரு லக்ஷம் நிரந்தர டிபாஸிட்டில். பாக்கியத்தின் முகம் மகிழ்ச்சியினால் மலர்ந்தது.

"ஆமாம் வீடு எந்தப் பக்கத்தில் வாங்கப் போகிறீர்களாம்?"

"ஏன், மயிலாப்பூரில், அல்லது மாம்பலத்தில். இப்படி எங்கேயாவது....."

"நான் சொல்வதைக் கேளுங்கள். இந்தப் பட்டணத்தில் வாங்கினால் சரிப்படாது. பேசாமல் மதுரையிலே வாங்கி விடுங்கள்."

"ஏன்? மதுரையிலே உங்க அம்மா இருக்காளே, அதனாலேயா?" என்றான் பரிகாசமாக.

"இல்லே உங்கள் அக்கா இங்கே இருக்காளே அதனாலேதான்!" என்றாள் கடுகடு.

"இதோ பார், பாக்கியம்...."

"என்னத்தைப் பார்க்கிறது? அடிக்கொரு முறை உங்க அக்கா இங்கே வந்து பண்ணும் அட்டகாசம் என்னால் பொறுக்க முடியவில்லை.....!"

"மதுரையில் வீடு வாங்கினால் உங்க அம்மா அங்கே வந்து கூத்தடிப்பாளே! உங்கள் பரிவாரம் முகாம் போட்டு விடுமே....!"

"உங்கள் சோற்றுக்கு முகாம் போடும் படியாக அவர்கள் கதியற்றுப் போய்விடவில்லை. கொஞ்சமாவது நன்றி இருந்தால்..."

சிவராமனின் முகம் சிவந்தது. "என்னடி நன்றி!" என்று உறுமியபடி வெளியேறினான்.

அன்றைக்கு ஆரம்பித்த தகராறு முற்றி, தம்பதிகளிடையே பேச்சு வார்த்தையே நின்று போய் விட்டது.

ஒரு வாரம் கழிந்தது. விஷயம் வர வர வலுத்துக் கொண்டே போயிற்று. குடும்ப வாழ்க்கை நரக வாழ்க்கையாகி விட்டது.

இந்த நிலையில்தான் ஒரு கடிதம் வந்தது. அதைப் படித்த அவனது இதழ்களில் புன்னகை அரும்பியது. ஒரு வார காலத்துக்குப் பிறகு மனைவியை அன்பாகக் கூப்பிட்டான்.

"பாக்கியம்! ஓடி வா! நல்ல சமாசாரம்!"

அவள் பதில் பேசவில்லை; வரவுமில்லை.

"ஏய் கழுதை, உன் கோபத்தை அப்புறம் வைத்துக் கொள். நமக்கு உண்மையாகவே நல்லகாலம் வந்து விட்டது" என்று கூறிக் கொண்டே அவன் சமையலறைக்கு ஓடினான்.

அவள் மெதுவாகத் தலை நிமிர்ந்தாள்.

"சொலிஸிடர் எழுதியிருக்கிறா. எனக்கு இரண்டு லக்ஷம் ரூபாய் சேர வேண்டுமென்ற மரண சாஸனத்துக்குப் பிறகு இன்னொரு சாஸனத்தில் தம் சொத்து முழுவதையும்..."

"அவர் சொத்து பூராவும் எழுதிவைத்தால் கூட எனக்கு ஒரு பைசா வேண்டாம். என் தம்பி இப்ப வருவான், நான் போகிறேன்."

"அடேயப்பா என்ன ரோஷம்!....அவர் தமது சொத்து பூராவையுமே தருமத்துக்கு எழுதி விட்டாராம்" என்றான் சிவராமன்.

அவள் பெருமூச்சு விட்டாள்.

"இதையா நல்ல சமாசாரம் என்றீர்கள்?"

"இதோ பார் பாக்கியம், நமக்கும் பணத்துக்கும் ராசி கிடையாது. இவ்வளவு காலம் நாம் எவ்வளவு இன்பமாக இருந்தோம்? ஐசுவர்யம் வருகிறது என்றவுடன் நிம்மதி போய்விட்டது. ஆனால் இப்போது மீண்டும் அந்த நிம்மதி வந்துவிட்டது. ஏழைக்கு எளிமையில்தான் இன்பம்" என்று கூறி அவள் கண்ணீரைத் துடைத்தான் சிவராமன்.


மிக அழகிய...
அடர்ந்த நீண்ட ஒளியுள்ள கூந்தல்!
பிரதிதினமும் கால்கேட் பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில் தடவி வந்தால், கூந்தலானது அடர்த்தியாகவும், நீளமாகவும் வளருவதுடன் இளமையின் ஒளியுடனும், அற்புத இலவிப்புடன் விளங்குவதைக் கண்டு நீங்கள் பரவசமடைவீர்கள். அது உங்கள் கூந்தலின் இயற்கை அழகை எடுத்துக்காட்டி எல்லோரையும் பிரமிக்கச்செய்யும்.
மகிழ்ச்சியூட்டும் நறுமணம்—
உங்கள் குடும்பம்
முழுவதும் விரும்புவது!
COLGATE
HAIR OIL
கால்கேட்
பெர்பியூம்டு
காஸ்டர்
ஹேர் ஆயில்
எக்கானமி சைஸை வாங்கி பணத்தை மிச்சப்படுத்துங்கள்!


மிதமான ஆனால் விரைவில்
வயிற்றை ஒழுங்கு செய்வது
BAL
வயிற்றுவலி
புளிப்பு
உப்புசம்
இவற்றை நிச்சயமாக
குணப்படுத்தும் மருந்து
பால் ஷோலார்கா
கிரைப் மிக்சர்
நம்பிக்கையின் சின்னமான முத்திரை
ஸாண்டு பார்மசூடிகல்
ஒர்க்ஸ் லிமிடெட்,
கோகலே ரோடு தெற்கு, பம்பாய்-28.

எடை

எஸ். வைத்தியநாதன்


ஜானுவுக்குக் கல்யாணப் புடவைகள் முதல் நாளே பார்த்து எடுக்கப்பட்டிருந்தன. நல்லவேளை பார்த்துக் கொண்டு வந்து அவைகளை வீட்டுக்கு எடுத்துப் போவதாகச் சொல்லிக் கடையிலேயே வைத்துவிட்டு வந்திருந்தார்கள். மறுநாள் காலை சுபவேளையாக இருக்கவே, அவைகளை வாங்கி வருவதற்காகச் சரளா கடைக்குப் போயிருந்தாள்.

புடவைகளுடன் அவள் வீடு திரும்பியதும், "உன் மாமனார் வந்திருக்கிறாரடி சரளா! சற்று முன்தான் வந்தார். யாரோ தெரிந்தவர்களைப் பார்த்துவிட்டு வருகிறேன் என்று இப்போதுதான் வெளியே போயிருக்கிறார்!" என்றாள் அவள் அம்மா.

சரளா திகைப்புடன் "என்ன இப்படித் திடுதிப்பென்று? மூன்று மாசம் இருக்கப் போகிறேன் என்று சொல்லிவிட்டுப் போனவர் ஏன் ஒரு மாசத்திலேயே திரும்பி வந்து விட்டாராம்?" என்றாள்.

"திருவனந்தபுரம் அவருக்குப் பிடிக்கவில்லையாம்; உடம்புக்கும் ஒத்துக் கொள்ளவில்லையாம். ஆகையினால் கிளம்பி விட்டாராம். தஞ்சாவூரிலிருக்கும் அவருடைய பால்ய சிநேகிதர் ஒருவரைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று நேற்று தஞ்சாவூரில் இறங்கினாராம். போகும் வழிதானே கும்பகோணம், நம் எல்லோரையும் பார்த்து விட்டுப் போகலாம் என்று இங்கே வந்திருக்கிறார். ஜானுவின் கல்யாணத்துக்காக நீ இங்கு வந்திருப்பதையும் மாப்பிள்ளை அவருக்கு எழுதியிருக்கிறார்!"





புடவைகளை ஜானுவிடம் கொடுத்து பீரோவில் வைத்துப் பூட்டும்படி சொன்ன சரளா சிந்தனையிலாழ்ந்தாள்.

பூஜைவேளையில் கரடி புகுந்தமாதிரி அவளுடைய மாமனார் ராமையா எதிர்பாராத விதமாகத் திரும்பி விட்டார். அன்றிரவே பட்டணம் கிளம்பி விடுவார். அங்கு போய்ச் சேர்ந்ததும் சரளா பண்ணியிருக்கும் காரியம் அவருக்குத் தெரிந்து விட்டால்? வேறு வினையே வேண்டியதில்லை. மகனைப் பணம் அனுப்பாதே என்று தடுத்து விடுவதோடு அவள் பேரிலும் அல்லவா அவருக்குத் தப்பபிப்பிராயம் ஏற்பட்டுவிடும்? ஆயுசு வரை சொல்லிக் காட்டிக் கொண்டிருப்பாரே மகானுபாவன்!

விஷயம் இதுதான்:—

சரளாவின் தங்கை ஜானுவுக்குக் கல்யாணம் நிச்சயமாகி யிருக்கிறது என்றும் உடனே புறப்பட்டு வந்தால் சௌகர்யமா யிருக்கும் என்றும் அப்பாவிடமிருந்து கடிதம் கிடைத்த மறுநாளே அவள் பட்டணத்திலிருந்து கும்பகோணத்துக்குக் கிளம்பி வந்து விட்டாள். அவள் வந்து பத்து நாட்கள் ஆகின்றன. இன்னும் பதினைந்து நாட்கள் இருக்கின்றன முகூர்த்தத்துக்கு. வரன் மதுரையைச் சேர்ந்தவன்; அங்கேயே மோட்டார்க் கம்பெனி ஒன்றில் உத்தியோகமா யிருக்கிறான்.

வரதட்சிணை, சீர்வகையறாக்கள், கல்யாணச் செலவு எல்லாமாக ஆறாயிரத்தைந்நூறு ஆகலாம் என்று திட்டம் போட்டு அந்தத் தொகையைச் சேகரித்து வைத்திருந்தார் சரளாவின் தந்தை. ஆயினும் கல்யாண நாள் நெருங்க நெருங்க, மேற்படி தொகைக்குள் விவாகத்தை முடிப்பது ரொம்பச் சிரமமா யிருக்கும் என்று அவருக்குத் தோன்றியது. இன்னும் ஐந்நூறு ரூபாயாவது இருந்தால் தான் நல்லது; இல்லாவிட்டால் நிலைமை நெருக்கடியாகப் போய் அவமானப்பட நேரிட்டுவிடும் என்று பயந்தார் அவர். ஒவ்வொரு அயிட்டமும் அவர் எதிர்பார்த்துத் திட்டம் போட்டதற்கு மேலேயே ஓடிக் கொண்டிருந்தபோது அவர் பயப்படாமல் இருக்க முடியுமா?


அப்பாவின் நிலைமையைப் புரிந்துகொண்ட சரளா மிகவும் மனச்சங்கடத்துக்குள்ளானாள். அவருடைய கவலையைத் தீர்ப்பது தன் கடமை என்று எண்ணினாள். "ஐந்நூறு ரூபாய் நான் வாங்கித் தருகிறேன் அப்பா!" என்று தந்தைக்கு அபயமளித்தாள். நிலைமையை விளக்கிச் சென்னையிலிருக்கும் கணவன் கஜபதிக்கு ஒரு கடிதம் எழுதினாள். 'அவன் ஐந்நூறு ரூபாய் கொடுத்து உதவ வேண்டும். இரண்டொரு வருஷங்களில் சிறுகச் சிறுகவோ மொத்தமாகவோ தன் தந்தை திருப்பிக் கொடுத்து விடுவார்' என்று

குறிப்பிட்டுக் கூடிய விரைவில் பணத்தை அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொண்டிருந்தான்.

கஜபதி மாசம் நானூறு ரூபாய்சம்பாதித்துக் கொண்டிருந்தான். அது தவிர கனிசமான ரொக்கமும், சென்னை நகரில் இரண்டு வீடுகளும் இருந்தன அவனுக்கு. எனவே ஐந்நூறு ரூபாய் உதவுவது அவனுக்குப் பிரமாதமான காரியம் அல்ல. அதோடுகூட, கஜபதி சிறந்த குணக்குன்று. சரளாவிடமோ அவனுக்குக் கொள்ளை அன்பு. எனவே அவன் கனவிலும் ஒத்தாசை செய்வதைத் தடுப்பவர்கள் யாரும் இல்லை.]

"பரீக்ஷைக்கு முன்"

"பரீக்ஷைக்குப் பின்"



"மதுரா கணபதி! நான் இந்த வருஷம் பரீக்ஷையில் பாஸ் ஆகிவிட்டால் பத்து தேங்காய் உடைக்கிறேன்!"

"பாஸ் ஆகிவிட்டேன். பத்து தேங்காய் வாங்கக் காசு கிடைக்க அருள் புரிந்தால் தேங்காய் உடைக்கடறேன்!"

அவன் தாயார் பல வருஷங்களுக்கு முன்னமேயே காலமாகி விட்டிருந்தாள். தந்தை தான் இருந்தார். அவரும் ஒரு மாசத்துக்கு முன்னால் திருவனந்தபுரத்திலிருக்கும் தம் மகளின் அழைப்புக்கிணங்க அங்கே போயிருந்தார். மூன்று மாதங்கள் அங்கு இருந்துவிட்டு வரப் போவதாகச் சொல்லிவிட்டுப் போனார் அவர். எனவே அவர் கஜபதியைப் பணம் கொடுக்காதே என்று தடை செய்வார் என்று பயப்படுவதற்கு இடமில்லை. அவர் திருவனந்தபுரம் போனதே சரளா பிறந்த வீட்டாரின் நல்ல காலந்தான்! — இப்படியெல்லாம் எண்ணியிருந்த உற்சாகத்துடன் கணவனுக்குக் கடிதம் எழுதினாள் சரளா; ஆனால் எதிர்பாராத விதமாகத் திடீரென்று ராமையா திரும்பி வந்துவிட்டது சரளாவின் உற்சாகத்தைச் சிதற அடித்து விட்டது. அவர் வரவு அவளைப் பயந்து நடுங்கும்படி செய்து விட்டது.

மாமனாரின் சுபாவம் அவளுக்கு நன்றாகத் தெரியும்; ஆறு வருஷ அநுபவமல்லவா? அவர் மகா கஞ்சன்! வீட்டில் யாருக்காவது ஜுரம் தலைவலி என்று வந்து, சரளாவோ, கஜபதியோ டாக்டரைக் கூப்பிட வேண்டும் என்று அபிப்பிராயப் பட்டால், ராமையா "இதுக் கெல்லாம் எதுக்கு டாக்டர்! வீண் செலவு! சுக்கை அரைத்துப் பத்துப் போட்டு, மிளகையும் திப்பிலியையும் கஷாயம் வைத்துக் கொடுத்தால் சரியாய்ப் போய்விடும்" என்று தடை செய்து விடுவார். யாராவது தெரிந்தவர்கள் வீட்டுக்கோ, கடை கண்ணிக்கோ போவதாயிருந்தால் நடந்தே போய்வரும்படி உபதேசம் பண்ணுவார். "அரைமைல், ஒருமைல் கூடவா நடக்க முடியாது? நடந்தால் உடம்புக்கும் நல்லது. காசும் மிச்சம்" என்பார். ஒரு தடவை கஜபதி ஒரு ரூபாய் கொடுத்து வாசனைச் சுண்ணாம்பு பாட்டில் ஒன்று வாங்கி வந்து விட்டதைக் கண்டு குடியே முழுகிப் போய் விட்ட மாதிரி அவர் அலட்டிக் கொண்டதைச் சரளாவால் மறக்கவே முடியாது!

மாமனாருடைய லோபித்தனம் சரளாவுக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. பல முறைகள் கணவனிடம் அதைப் பற்றிக் கூறியிருக்கிறாள். ஆனால் தந்தையிடம் மரியாதை உள்ள கஜபதி அவளுக்குச் செவி கொடுப்பதில்லை. "அவர் பால்யத்தில் ரொம்பச் சிரமப்பட்டு முன்னுக்கு வந்தவர். எனவே பணத்தின் மதிப்பைப் பற்றியும் சிக்கனத்தின் அவசியத்தைப் பற்றியும் அவருக்குச் சில கருத்துக்கள் இருக்கின்றன. அவை உனக்கு உவப்பாக இல்லாவிட்டால் விட்டுவிடு! உனக்காகப் பரிந்துகொண்டு அவரிடம் நான் சண்டைக்குப் போவதென்பது ரசக் குறைவு; என்னால் இயலாத காரியம் அது" என்று அவன் தெளிவாக, உறுதியாகக் கூறி விட்டான். எனவே சரளா கஞ்ச மாமனாரைப் பற்றித் தனக்குள்ளேயே பொருமிக் கொள்வதோடு திருப்திபட வேண்டியதாகப் போய் விட்டது.

அத்தகைய தாராளப் பிரபு, அவள் பணம் கேட்டுக் கணவனுக்குக் கடிதம் எழுதிய மறுநாள், வேலை மெனக்கெட்டு ஏதோ கொள்ளை போய்விட்டது போல் அவசரமாகத் திருவனந்தபுரத்திலிருந்து கிளம்பி வந்திருக்கிறார். அன்று இரவு கும்பகோணத்திலிருந்து கிளம்பி மறுநாள் காலை சென்னை போய்ச் சேர்ந்து விடுவார். சரளா பணம் கேட்டு எழுதியிருப்பதைத் தந்தையிடம் சொல்லக் கூடாது என்ற 'இங்கிதம்' அவள் கணவனுக்குத் தெரியாது! எனவே அனேகமாய் முக்காலே மூணுவீசம் பங்கு அவன் அதைத் தந்தையிடம் சொல்லிவிடுவான். அந்தக் கஞ்சப் பிரபு ஐந்நூறு ரூபாய் என்றதும் மூர்ச்சையே போட்டு விழுந்துவிடுவார்! மூர்ச்சை தெளிந்து எழுந்ததும், "கடனே யாருக்கும் கொடுக்கக் கூடாதுடா! அதுவும் கொண்டு கொடுத்துச் சம்பந்தம் பண்ணின இடங்களில் பண விவகாரமே வைத்துக்கொள்ளக் கூடாது! பணத்தை உன் மாமனார் எந்தக்



செஸ்பிரோ பாண்ட்ஸ் ஸ்தாபனத்தார் அவர்களின் அழகு சாதனங்களைப் பாங்குற அமைத்துள்ள சென்னை நகர் விற்பனையாளருக்குப் பரிசு வழங்கிக் கௌரவித்தனர். இந்தப் போட்டியில் ஐந்நூறுக்கு மேற்பட்ட விற்பனையாளர்கள் கலந்துகொண்டனர். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு ஸ்தாபனத்தின் ஜெனரல் மானேஜர் திரு எஸ். எச். எஸ். மணி பரிசுகள் வழங்கினர்.

காலத்தில் திருப்பிக் கொடுக்கப் போகிறான்! காலணாக்கூடப் பெயராது! என்னாகிவிடும்! 'என்னிடத்தில் ஏது பணம்?' என்று எழுதிவிடு!'' என்று பிள்ளைக்கு உபதேசம் செய்வார்! அந்தச் சத்புத்திரனும் அப்பாவை மீறிப் பணம் அனுப்ப முற்படுவது துர்லபம்! அதோடு போகுமா விஷயம்? தாம் சுகமில்லாதபோது தம் மகனுக்குக் கடிதமெழுதி ஏமாற்றிப் பணம் பறிக்க முயல்வதாகச் சரளாவின் மீது அவருக்குத் தப்பபிப்பிராயம் வேறு ஏற்பட்டுவிடுமே! இந்த எண்ணம் சரளாவுக்கு அச்சத்தைக் கொடுத்தது. முதல் நாள் பணம் கேட்டுக் கணபதிக்கு எழுதிய கடிதத்திலேயே 'இந்த விவகாரம் ஒன்றும் உங்கள் அப்பாவுக்குத் தெரிய வேண்டாம்!' என்று ஒரு வரியைச் சேர்க்காமல் அசிரத்தையாக இருந்துவிட்டோமே என்று அவள் மிகவும் வருந்தினாள். அந்த ஒரு வரியை இப்போது இன்னொரு கடிதத்தில் எழுதிப் போட்டுவிடலாம் என்றால் கடிதம் போவதற்கு முன்னால் ராமையா பட்டணம் போய்விடுவார்! அந்தக் கடிதம் எக்கச்சக்கமாக அவர் கையில் கிடைத்துவிட்டால்? எனவே அவரை உபசாரம் செய்து இரண்டு நாட்கள் கும்பகோணத்திலேயே தங்கவைத்துக்கொண்டு, அவருக்குத் தெரியாமல் கணவனுக்கு எச்சரிக்கை செய்து கடிதம் எழுதுவது ஒன்றுதான் வழி என்ற முடிவுக்குச் சரளா வருவதற்கும் வெளியே போயிருந்த ராமையா திரும்பி வருவதற்கும் சரியாக இருந்தது.

''என்ன அம்மா சரளா! சௌக்கியமாக இருக்கிறாயா? தங்கைக்குக் கல்யாணம் வந்திருக்கிறாற்போல் இருக்கிறது!'' என்று விசாரித்தார் ராமையா.

''ஆமாம்! எல்லாம் உங்கள் ஆசீர்வாதந்தான்! சரியான சமயத்தில் கடவுள்தான் உங்களைக் கொண்டு வந்து விட்டிருக்கிறார். கல்யாணம் வரை இருந்து யோசனை சொல்லி நடத்தி வைத்துவிட்டுப் போகணும் நீங்கள்!'' என்றாள் சரளா உபசாரமாக.

''உங்கப்பாவுக்குத் தெரியாத யோசனையா? நான் இருப்பதற்கில்லையம்மா! இன்றிரவே புறப்பட்டாகணும்!''

'ஆமாம், புறப்பட்டாகணும்! ரொம்பத் தலை போகிற காரியம் இருக்கிறதல்லவா!' என்று உள்ளூற எண்ணியவாறே சரளா ''இன்று ராத்திரியே என்ன அவசரம்! இரண்டு நாட்களாவது இங்கே இருந்துவிட்டுத்தான் போகணும் நீங்கள்!'' என்றாள்.

''இல்லையம்மா! போய்த்தான் ஆகணும். சிதம்பரத்தில் என் தங்கை மீனாட்சி இருக்கிறாள் அல்லவா? அவளைப் பார்த்து ரொம்ப நாட்களாச்சு! அங்கே போய் இரண்டு நாட்கள் தங்கிவிட்டு அப்படியே பட்டணம் போவதாக உத்தேசம். குழந்தைகளும் நீயும் இங்கு வந்திருப்பதாகக் கணபதி கடிதம் போட்டிருந்தான். எல்லாரையும் பார்த்துவிட்டுப் போகலாம் என்றுதான் இங்கு இறங்கினேன்!'' என்றார் ராமையா.

சிதம்பரத்தில் இரண்டு நாட்கள் தங்கிவிட்டுப் பட்டணம் போகப் போவதாக அவர் சொன்னது சரளாவுக்குத் தாங்க முடியாத மகிழ்ச்சியை அளித்தது! அன்றே கணவனுக்குக் கடிதம் எழுதிவிடலாம். எனவே மாமனாரைத் தங்கிவிட்டுப் போகும்படி மேலும் வற்புறுத்தவில்லை அவள்!

அன்று மத்தியானமே மாமனாருக்குத் தெரியாமல் கணவனுக்கு ஒரு கார்டு எழுதித் தபாலில் சேர்த்துவிட்டாள் சரளா.

'உங்கள் அப்பா இங்கு வந்திருக்கிறார். இன்றிரவு கிளம்பிச் சிதம்பரம் போகிறார். அங்கு இரண்டு நாட்கள் தங்கிவிட்டுச் சென்னைக்கு வருவார். என் முன் கடிதத்தில் எழுதியபடி ஐந்நூறு ரூபாயை உடனே அனுப்பினால் நல்லது. அப்பா ரொம்பத் தவித்துக் கொண்டிருக்கிறார். நான் பணம் கேட்டு எழுதியதோ, நீங்கள் பணம் அனுப்புவதோ உங்கள் அப்பாவுக்குத் தெரிய வேண்டாம். தெரிந்தால் என் பாடு ரொம்பவும் சங்கடமாகிவிடும். ஏற்கனவே என்னைக் கண்டால் அவருக்கு ஒருமாதிரி. இதுவும் சேர்ந்துவிட்டால் வேறு வினையே வேண்டாம்!' என்பதுதான் அந்தக் கடிதத்தின் சாரம்.

* * *

அன்று மாலை ராமையா கும்பகோணத்தை விட்டுக் கிளம்பி விட்டார்.

சரளா தன் கணவனிடமிருந்து என்ன பதில் வருமோ என்று ஆவலுடன் தபால்காரனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். தன் தந்

உடைந்த கண்ணாடி வெட்டியதால் உங்கள் பிக்னிக் வீணாக போகவேண்டாம்



பர்னால் தடவுங்கள்

குதூகலத்துடன் இருங்கள். பர்னால் உடனே நிவாரணமளித்து புண்ணை சீக்கிரத்தில் ஆற்றுகிறது. வெட்டுக்காயங்கள், சுட்ட புண்கள், பூச்சி கடிகள் மற்றும் சிராய்ப்பு போன்றவைகளுக்கு நிவாரணமளிக்கக் கூடிய ஒரு ஆன்டிஸெப்டிக் மருந்து பர்னால். அடுத்த தடவை நீங்கள் பிக்னிக் அல்லது பிரயாணம் செல்லும்பொழுது ஒரு பர்னால் ட்யூப்பையும் எடுத்துச்செல்லுங்கள் — உங்களுக்கு உபயோகமாயிருக்கும்.



பர்னால்

சிறந்த ஆன்டிஸெப்டிக் ஆயின்ட்மெண்ட் — 20 வருஷங்களுக்கு மேலாக பெயர் பெற்றது.

பிரூக்ஸ் மற்றும் க்ரைமிக்ஸ் தயாரிப்பாளர்களான பூட்ஸ் கம்பெனியாரின் ஓர் சிறந்த தயாரிப்பு. Boots

இனாம் நீங்கள் வாங்கும் ஒவ்வொரு பர்னால் ட்யூப்புடனும் ஒரு அழகான புட்-ரூல் கிடைக்கும்.

NATIONAL BB-161



"அறுபதுக்கு அறுபது"

தொன்று தொட்டு வந்து வருவது. மகிழ்வு தருவது. இது எதை உணர்த்துகின்றது? பல வருட உழைப்பிற்குப்பின் மீண்டும் வாழ்வு புதுமலர்ச்சி காண்பதைத்தானே! ஆழ்ந்த தத்துவம் இருக்கிறது இதில்; ஆசைக்குமுறல் இல்லாத, ஆர்வக் கொந்தளிப்பு இல்லாத. உங்களுடைய கடமைகள் எல்லாம் முடிந்த 'ஆன்றவிந்தடங்கிய' நிலையில் வாழ்வு மலர்வதாகப் பொருள் அதற்கு!

ஆனால் இன்று? அறுபதாண்டு நிறைவு விழா வெறும் சடங்குமட்டுமன்று. ஒரு முதுமைக்கால ஆயுள் இன்சூரன்ஸ் பாலிசியினை நீங்கள் எடுத்திருப்பின் அது அமைதியைக் குறிக்கும் ஒன்றாக, பாதுகாப்பினை அறிவிக்கும் ஒன்றாக இருக்கும்.

வாழ்க பல்லாண்டு மகிழ்வோடு!

இளமைக்கும் முதுமைக்கும் அருமையானது

ஆயுள் இன்சூரன்சே!

EP/LIC/U/27

தைக்குக் கொடுத்த வாக்குறுதியைக் காப் பாற்ற முடியாமல் போய்விடுமோ என்ற சந்தேகம் அவன் மனத்தை உறுத்திக் கொண்டிருந்தது.

மூன்றும் நாள் கஜபதியிடமிருந்து ஐந்நூறு ரூபாய்க்கு பாங்க் டிராஃப்டும் அத்துடன் ஒரு கடிதமும் சரணாவுக்கு வந்தன.

''உன் கடிதம் கிடைத்தது. அதன்படி ஐந்நூறு ரூபாய்க்கு டிராஃப்ட் வாங்கி அனுப்பி யிருக்கிறேன்....அப்பா நேற்று காலை இங்கு வந்துவிட்டார். சிதம்பரத்தில் இரண்டு நாட்கள் தங்கிவிட்டுவர உத்தேசித் திருந்தாராம். உன்னிடம்கூட அப்படித் தான் சொல்லிவிட்டு வந்தாராம். ஆனால் அத்தையைத் தற்செயலாக மாயவரம் ஸ்டேஷனில் பார்த்தாராம். அவள் தன் சிநேகிதி ஒருத்தியின் பெண் கல்யாணத்துக் காகத் தஞ்சாவூர் போய்க் கொண்டிருந்தா ளாம். ஆகையால் இன்னொரு சமயம் சிதம் பரத்துக்கு வருவதாகச் சொல்லிவிட்டு நேரே இங்கு வந்து விட்டார்....ஒரு ஆச்சரியத்தைக் கேள்! அவர் ரொம்ப 'அழுக்கு'ப் பேர்வழி என்ற அபிப்பிராயமல்லவா உனக்கு? அவர் தான் உங்களுக்கு ஐந்நூறு ரூபாய் அனுப்பும் படி என்னிடம் பலமாகச் சிபாரிசு செய்தார்! இத்தனைக்கும் அவர் என்ன நினைத்துக்கொள் வாரோ, சொல்வாரோ என்று நீ பணம் கேட்டு எழுதியிருப்பதைப் பற்றி அவரிடம் பிரஸ்தாபிக்கவே இல்லை நான். அவராகவே நேற்று அந்தப் பேச்சை ஆரம்பித்தார்.

'நேற்று கும்பகோணம் போனேனல்லவா கஜபதி? முகூர்த்தத்தை வைத்துவிட்டுப் பணம் போதாமல் உன் மாமனார் ரொம்பத் திண்டாடுகிறார் என்று தெரிய வந்தது. ஐந்நூறு ரூபாய் இன்றே அனுப்பு அவருக்கு!' என்றார். எனக்கு வியப்பாயிருந்தது. 'உங்க ளைக் கேட்டாரா அப்பா அவர்?' என்றேன். 'என்னைக் கேட்கவில்லையடா அவர். என்று லும் நிலைமையைப் புரிந்து கொண்ட பிறகும் உதவி செய்யாமலிருக்க என் மனசு ஒப்ப வில்லை! கல்யாணக் காரியம் பார்!' என்றார். அதிகரித்த வியப்புடன் அவரை உற்று நோக்கினேன். 'என்னடா பார்க்கிறாய்? இந்தக் கஞ்சனுக்கு இவ்வளவு தாராள புத்தி எப்படி வந்தது என்று? நீயும் உன் மனைவி யும் கருதிக் கொண்டிருப்பதுபோல் அவ்வளவு லோபி இல்லையடா நான். காலணாக்கூட அவசியமில்லாத விஷயத்துக்குச் செலவழிக்கக் கூடாது என்பதுதான் என் கொள்கை. கண்ட படி காசை வாரி இறைத்துக் கொண்டிருந் தால் இந்த மாதிரி ஒரு நல்ல சந்தர்ப்பத்தில் அத்தியாவசியமான காரியத்துக்கு—ஒத்தாசை செய்ய உன்னிடம் பணம் மிஞ்சுமா? இந்த ஐந்நூறு ரூபாயும் உன் மைத்துனிக்கு உன் பரிசாகவே இருக்கட்டும். திருப்பி வாங்கிக் கொள்ள வேண்டாம். இன்றைக்கே ஐந்நூறு ரூபாயை அனுப்பி விடு!' என்றார். உன்னைப் போல் அவரைப் பற்றி எனக்கு அவ்வளவு தப்பபிப்பிராயம் கிடையாது. என்றாலும் அவர் இதயம் இத்தனை பெரிய கருணைப் பெட்டகம் என்பதை இதுவரை நான் அறிந்த வனல்ல. அவர் இதயத்தின் உண்மை சொரூபத்தைத் தரிசித்தபிறகும் விஷயத்தை



வாழைப்பழத் தோலில் சறுக்கிக் கரணம் போட்டு விழுந்தார் தகப்பனார். குழந்தைகள் எல்லோரும் கூடிப் பெரிதாகச் சிரித்தார்கள். அவர் மனைவி வெளியே வந்து, ''ரொம்ப அழகாத்தான் இருக்கு! குழந்தைகளைச் சிரிப்பு மூட்டியது போதும். எழுந்து வாருங்கள் உள்ளே!'' என்றாள்.

மறைப்பது சரியல்ல என்று தோன்றிவிட்டது. நீ பணம் கோரிக் கடிதம் எழுதியிருப்பதாயும் அவரைக் கேட்காமல் எப்படி அனுப்புவது என்று தயங்கிக் கொண்டிருப்பதாயும் முக்கால் உண்மையைச் சொன்னேன். 'இதற் கெல்லாம் கூட என்னைக் கேட்கணுமாடா! சரி! சரி! இனியும் காலம் தாழ்த்தாமல் பணத்தை அனுப்பு...' என்றார். பணம் அனுப்பியிருக்கிறேன்...கஜபதி.''

சரணாவுக்கு ஒரே பிரமிப்பு! 'மாமனார் இத்தனை நல்லவரா! நமக்குப் பணம் ஐந்நூறு ரூபாய் பணம்—தேவையாயிருப்பது அவருக்கு எப்படித் தெரிய வந்தது? இங்கே அவர் வந்திருந்தபோது யாரும் அதைப் பற்றி மூச்சுக்கூடக் காட்டவில்லையே!'

சற்று யோசித்தபின் விஷயம் இன்னமாதிரி தான் நடந்திருக்க வேண்டும் என்பதை அவன் ஊகித்துக் கொண்டான். கஜபதி வேறு 'உன் கடிதம் கிடைத்தது' என்று ஒருமையில் குறிப்பிட்டிருந்தானே!

அவர் நேரே பட்டணம் போய் விட்டார். எனவே அவள் அவசரம் அவசரமாகக் கணவ னுக்கு எழுதிப் போட்ட கார்டு அவர் கையில் கிடைத்திருக்கிறது! விஷயத்தைப் புரிந்து கொண்டு கஜபதியிடம் அவர் சிபாரிசு செய் திருக்கிறார்!

சரணாவின் உடல் குன்றியது. உள்ளம் 'அவர் எத்தகைய அபூர்வ மனுஷர்! அவரை எவ்வளவு கேவலமாக எடை போட்டு விட் டேன்? அவரைப் பற்றிக் குறைவாக நான் எழுதிய கார்டைப் பார்த்த பிறகும் இப்படி நடந்து கொண்டிருக்கும் அவர் மகான்களின் வரிசையில் சேர்க்கப்பட வேண்டியவரல் லவா!...இனி அவர் முகத்தில் எப்படி விழிப் பேன்!' என்று வேதனையுடன் அலறியது.



கந்தன் மலர்

'கந்தன் மலர்' என்னும் தெய்வ மணங் கமழும் இந்தத் திருநூல் கந்தனைப் பற்றிப் பல சான்றோர் எழுதிய கட்டுரைகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது. முருகனடியார்க்குப் படிக்கப் படிக்க மகிழ்ச்சி தரும் தெவிட்டாத சுவை இதன்பாற் காணப்படுகிறது.

இம்மலரில் 'கந்தபிரான் திருநாமங்கள்' என்ற தலைப்பில் ஈ. வே. வேங்கடராவ் அவர்களும், ஸ்கந்தஜோதி என்ற தலைப்பில் திருப்புகழ் மணியும், 'கந்தன் பெருமை பற்றி' சேதுப்பிள்ளை அவர்களும், 'முருகன் அழகு' பற்றி கி. வா. ஜ. அவர்களும் 'கந்தன் ஒரு சமரசக் கடவுள்' என்பது பற்றி தெ.பொ.மீ. அவர்களும், 'முருகன் ஆறுமுடிக் குமரன்' என்பது பற்றித் திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களும், மற்றும் பலரும் கட்டுரைகள் எழுதியுள்ளனர். கவிதைகளும் உள்ளன. எல்லாக் கட்டுரைகளும் பொருட்செறிவு மிகுந்தவை. தமிழ்முருகனை அறிமுகப்படுத்துபவை. பக்தியும் பயனும் நிறைந்த இத் தொகுப்பை யாவரும் படித்துப் பெருமைப் படலாம்.

பதிப்பாளர்: ஈ. வே. வேங்கடசுப்பிரமணியம். கிடைக்குமிடம்: ஸ்ரீ குமார தருவமர் திருக்கைத் திருப்புகழ்ச் சங்கம், 15, தணிகாசலம் பிள்ளை தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5. விலை ரூ. 3.

விழா, விரதம், பண்டிகை

விழாக்களுக்கும், விரதங்களுக்கும், பண்டிகைகளுக்கும் பெயர் போனதல்லவா நம் தமிழகம்? இவை ஒவ்வொன்றைக் குறித்த வரலாற்றையும், நம்பிக்கைகளையும் அறிய விரும்புவோருக்கு உதவியாக எழுதப்பட்டிருக்கிறது இப்புத்தகம். சிலாகிக்க வேண்டிய முயற்சியே. எனினும் 'மூடப் பழக்கங்களை விட்டு விழாக்களையும் விரதங்களையும் - பண்டிகைகளையும் பகுத்தறிவுக்கு இசைந்த முறையில்' வியாக்கியானம் செய்திருப்பதை அவ்வளவாக ஒத்துக் கொள்வதற்கில்லை தான். அறிவு செய்யும் ஆராய்ச்சிதான் சரி, மனம் உணரும் நம்பிக்கை தப்பு என்ற அடிப்படையில் நம் சமயத்தை விளக்க முற்பட்டிருப்பது நியாயமல்ல. வாசகர்களுக்கு அலுப்புத் தட்டாத முறையில் எழுதும் ஆற்றல் பெற்றவர் ஸ்ரீ பி. ஸ்ரீ என்பதைச் சொல்ல வேண்டியதில்லை அல்லவா?

வெளியீடு: அமுதநிலயம், தேனாம்பேட்டை, சென்னை—18; விலை: 30 புதுக்காசு.

அம்பிகை முருகன் அணிதமிழ்ப்பதிகம்

திருப்பூர் ஜோதிடர் சுப்பிரமணியம் அவர்கள் இராஜராஜேசுவரியம்பிகை மீதும் முருகப்பெருமான் மீதும் திருப்பதிகங்கள் பாடியுள்ளார். பாட்டுக்கள் எளிமையும், இனிமையும், ஓசை நயங்களும் பொருந்தினவாயுள்ளன.

'ஆதியாய் நின்றுலகனைத்தும்
படைத்திட்ட அன்னை நீ' என்றும்
'மதத்திடு குணத்தினை வெறுத்திடு
தவத்தினர் வசித்திடு மலைக்கிழவ"

என்றும் தொடங்கி பக்திபொங்கப் பாடுகிறார்.


பிரசுரம்: அம்பிகை முருகன் அணிதமிழ்ப் பதிகம் — கமலா அச்சகம், திருப்பூர்.

ஸ்ரீ ருத்ரம் - சமகம்

பரமேசுவரனது மகிமை பற்றியோ, அவனது மூச்சுக் காற்றாகவே கருதப்படும் வேதத்தில் அம்மகிமைகளை எடுத்துக் கூறும் ஸ்ரீ ருத்ரத்தின் பெருமை பற்றியோ கூற நம்மால் எப்படி இயலும்? எங்கும் நிறைந்த, எல்லாமறிந்த, எல்லாம் வல்ல சிவபெருமானின் அருமைகளை அமர பாஷையில் எடுத்துச் சொல்பவை ஸ்ரீ ருத்திரத்திலுள்ள புனித மந்திரங்கள். முனிபுங்கவர்களின் நாவில் உலவியவை. சரித்திரம் தோன்றாத நாளிலிருந்து நம் முந்தையர்கள் தாங்களும், உலகமும் இகபர பலன்களை அடைவதற்காக ஜபித்து வந்தவை. ஸ்ரீருத்ரத்துக்கு சாயணர், பட்ட பாஸ்கரர், அபிநவ சங்கரர் என்ற மூன்று பெரியார்கள் பாஷ்யம் செய்துள்ளனர். தேவநாகரி லிபியில் மூலம், தமிழில் பத அர்த்தம், கருத்துரை, விரிவுரை, மேற்சொன்ன பாஷ்யங்களின் சாராம்சங்கள், மற்றும் ஒவ்வொரு மந்திரத்துக்கும் உரிய ரிஷி, சந்தஸ், தேவதை, தியான சுலோகம், அவை ஒவ்வொன்றாலும் பெறக்கூடிய பலன் இவ்வளவையும் திரட்டி அளிக்கிறது இந்த நூல். சிறிதேனும் வடமொழி ஞானமுள்ள ஆஸ்திகர்கள் ஒவ்வொருவரும் படித்துப் பயனடைய வேண்டிய உயர்ந்த நூல் இது.

உரை ஆசிரியர்: ஸ்ரீ ஆர். முத்துகிருஷ்ண சாஸ்திரி; வெளியீடு: "ஹரிதபாஷிணி," 1835-3 மேலவீதி, தஞ்சாவூர். விலை: ரூ. 2—25.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited, at the Kalki Press, Kilpauk, Madras-10. Managing Editor, T. Sadasivam.



தூய, மெல்லிள லக்ஸ் சோப்புக்கு
வானவில்லின் 4 வித வண்ணங்கள்
தவிர, நமதருமை வெண்மையும் உண்டு

புதுமையோ புதுமை! வண்ண வண்ணக் கோலமும் வாசனை
மேலுறையும் புனைந்து வருகுது லக்ஸ். வெண்ணிறமா ? உண்டு.
உண்டு. நேயமுடன் நம்மோடு பழகிவிட்ட அதே லக்ஸ்.
எந்த வண்ணமும் நமக்கே சொந்த வண்ணம்,
எழிலோங்குதல் திண்ணம் திண்ணம்!



'என்ன என்ன இனிமை,
வண்ண வண்ணப் புதுமை: என் லக்ஸ்!'
என்கிறார் சாவித்திரி




சினிமா நட்சத்திரங்களின் தூய,
மெல்லிளம் அழகுசாதன சோப்
இந்துஸ்தான் லீவர் தயாரிப்

LTS. 85-X52 TM

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

'அவரா லேசில் திருப்தியடைகிறவர்...'



'அதுவும் துணி விஷயத்திலா? அதெங்கே...' என்கிறார் பம்பாய்வாசியான ஸ்ரீமதி ஆர். ஆர். பிரபு. 'இப்போல் லாம் ஸன்லைட்டாலே வெளுக்கறேன் அவரோட துணிக எல்லாத்தையும். அவருக்கோ பெருமை! எனக்குந்தான். இருக்காதா? அமோகமா நுரைகட்டுது ஸன்லைட், தொட்டதெல்லாம் பளிச்சுன்னு வெளுப்பு. சலவைன்னு எனக்கு வேண்டியது ஸன்லைட்தான்!'

துணிகளைக் காப்பதற்கு தூய, மென்மை வாய்ந்த ஸன்லைட் டைப் போல் வேறெதுவுமில்லை என்பதே குடும்ப மாதர்களின் துணிவு. அதுலே உங்களுக்கும் இனிது.

ஸன்லைட்



ஸன்லைட் அருமை -- நம் துணிகளுக்கு நன்மை!

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு.

. 30-X52 TM